கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(04.03.2018 - 04 பங்குனி 2018 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 08, கதிர் - 179, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2018

ஞான ஒளி
ඥාන ඔලි GNANA OLI
ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

உலக இறைவேண்டல் நாள் 04



தனிப்பட்ட அளவிலும், குழும அளவிலும் ஆன்மீகத் தெளிந்து தேர்தலுக்கான பயிற்சியின் அவசியத்தை திருஅவை பாராட்டும்படியாக....

திருத்தந்தையின் இம்மாதக் கருத்துக்காக செபிப்போம்



# மனித குலத்தை சீரழிக்கும் போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிப்போம்





**அனைத்து குருக்களே! துறவற சகோதர சகோதரிகளே, தங்களது பங்குகளில், மற்றும் துறவற சபைகளில், போதைப்பொருள் ஒழிப்பிற்காக செயற்பாட்டுக் குழுக்களை உருவாக்குவோம்.**

முப்பது வருட கால யுத்தத்தினை வெற்றிகொண்ட எமக்கு அதனைவிட கொடூரமான விடயமாக விளங்கும் போதைப்பொருள் பாவனையானது எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை சீர்குலைக்கும் விடயமாகவும் போதைப்பொருளை முழுமையாக இல்லாதொழிக்க இயலாமையாகவும் உள்ளது. எமது நாட்டுத் தலைவர்கள், போதைப்பொருளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன் மதத்தலைவர்கள் என்ற வகையில் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது சாலச்சிறந்தது என கொழும்பு உயர்மறைமாவட்ட கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கடந்த ஞாயிறுதினம் நீர்கொழும்பில் நடைபெற்ற போதைப்பொருள் ஒழிப்புக்கான போராட்ட நிகழ்வின் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

"எமது நாட்டில் வாழும், மதப்பற்றுள்ள எவருமே இப்போதைப் பொருள் பாவனைக்கு சார்பாக உதவுபவர்களாக இருக்க மாட்டார்கள். மனித குலத்தை சீரழிக்கும் போதைப்பொருள் பாவனைக் குறித்து, மதத்தலைவர்கள் என்ற விதத்தில் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க எம்மால் இயலாது.....

15

## எம்மைப் பிரிக்கும் காரணிகளைவிட, எம்மை ஒன்றிணைக்கும் காரணிகளே மிக அதிகமாகும்

**காலி ஆயர் மேதகு றேமன்ட் விக்கிரமசிங்க ஆண்டகை**



கடந்த 24ம் தேதி கச்சதீவில் நடைபெற்ற புனித அந்தோனியார் யாத்திரைத் திருவிழாவின்போது சிறப்பு அதிதியாகக் கலந்து விழாவைச் சிறப்பித்த காலி ஆயர் பேரருட்திரு றேமன்ட் விக்கிரமசிங்க ஆண்டகை அவர்கள் இங்கு இலங்கையின் வடபகுதி, தென்பகுதி. இந்தியாவின் தமிழ்நாடு ஆகிய இடங்களிலிருந்து வந்து கூடியிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார். எல்லாப் தரப்புகளையும் சேர்ந்த சில அரசியல்வாதிகள்,

15

## மறையை வாழ்விலிருந்து பிரித்தெடுப்பது, முறையற்ற செயலாகும்.

**கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் இலத்தீன் மொழியில் நடைபெற்ற திருப்பலியில் பேராயர்.**



உலகம் பூராவும், ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஆட்சி செய்த தலைவர்கள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி, பல மனித உயிர்களை சூறையாடினர். இவ்வாறான தலைவர்கள்...

15

## "அவர் சொல்வதைச் செய்யுங்கள்"

**என மேதகு ஆயர் இம்மானுவேல் பெர்ணாண்டோ ஆண்டகை உரையாற்றினார்.**

கடந்த சனிக்கிழமை, மன்னார் மாந்தை புனித லூர்து அன்னையின் திருவிழாவில், மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு. இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை கலந்து கொண்டு சிறப்பித்தார். இத்திருவிழாவுக்கு பெருமளவான குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் கலந்து கொண்டனர்.

இன்று நாம் 1858ல் இடம்பெற்ற வரலாற்று சிறப்பு வாய்ந்த நிகழ்வொன்றை நினைவிற் கொள்ள அழைக்கப்பட்டுள்ளோம். எமது இறையன்னை அவர் வாழ்வை "மாசுமறுவற்ற / முழுத்தூய்மையான" என்ற விதத்தில் அர்ப்பணித்தள்ளார்....

02



## கொழும்பு உயர் மறைமாவட்ட சிறுவர் தினம் 03.03. 2018 அன்று தேவத்தை பெசிலிக்காவில் நடைபெறும்.

## கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தின் அறிவித்தல்.

02

**என் நெஞ்சம் உயிருள்ள இறைவன் மீது தாகம் கொண்டுள்ளது. (தி.பா 42)**

# இரத்தினபுரி மறைமாவட்ட மறைப்பணி நிலையத்தில் மறையாசிரியர்களுக்கான இரண்டு நாள் விசேட செயலமர்வு.





மாசி மாதம் 2ம், 3ம் திகதிகளில் மறையாசிரியர்களுக்கான பாடத்திட்டம் - பாடக்குறிப்பு நெறிப்படுத்தல் தொடர்பான செயலமர்வு மறைப்பணி நிலைய அருட்பணி. என்டன் மொரிஸ் அடிகளாரினால் செயல்படுத்தப்பட்டது. ஆலயத்தில் - வழிபாட்டுக் குழு அமைந்தாலும் வழிபாட்டுக் குழுவினருக்கான படிமுறைகளும் அறிவூட்டல்களும் முன்னால் தேசிய வழிபாட்டுக் குழு இயக்குனர் அருட்பணி. இக்னேசியஸ் லொயேலா வர்ணகுலசிங்கம் அடிகளாரினால் வழிநடத்தப்பட்டது. இரத்தினபுரி ஆண்டகையினால் வேண்டுகோளுக்கிணங்க தமிழ் - சிங்களம் இரு மொழிகளிலும் அருட்தந்தை அவர்கள் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட மறையாசிரியர்களையும் படத்தில் காணலாம்.

**தகவல் மற்றும் படங்கள் : மேரி இருதயநாதன், மறையாசிரியர், பேராலயம், இரத்தினபுரி.**




## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் வீரமாமுனிவர் நினைவுப் பேருரை





கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் "தமிழ் அறிஞர் வீரமாமுனிவர் நினைவுப் பேருரை" நிகழ்வு கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெற்றது. நினைவுப் பேருரையை மன்னார் தமிழ்ச்சங்கத்தின் நிறுவுனரும் "மன்னா" கத்தோலிக்க பத்திரிகையின் ஆசிரியருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் வழங்கினார். இந்நிகழ்வுக்கு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர் முனைவர் க. இரகுபரன் அவர்கள் தலைமை தாங்கினார். "தமிழியலும் ஈழத்துக் கத்தோலிக்க மறைபோதகர்களும்" என்ற தலைப்பில் தமிழ் நேசன் அடிகளார் இந்த நினைவுப் பேருரையை நிகழ்த்தினார்.



மத்துகமை புனித மரியாள் மறைப்பாடசாலையில் 2018ம் ஆண்டு மாணவத் தலைவர்களுக்கான சின்னம் வழங்கும் வைபவம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மத்துகமை பங்குத்தந்தை அருட்பணி கலன பீரிஸ், அருட்பணி ஒனாசிஸ் பர்னாந்து, தமிழ் பிரிவுக்குப் பொறுப்பாளரான அருட்சகோதரி மேரி ஜேக்கப் (டொமினிக்கன் சபை) அவர்கள், மற்றும் மாணவத் தலைவர்களுக்கு பொறுப்பான ஆசிரியர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டதை படத்தில் காணலாம்.

**தகவல் : திருமதி. அனுஷி எதிரிசிங்க**

## மத்துகம பொல்காகந்த புனித வனத்து சின்னப்பர் திருவிழா





மத்துகமை பொல்காகந்த புனித வனத்து சின்னப்பர் விருடாந்த திருவிழா கடந்த மாதம் 13ம் திகதி வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டது. இத்திருவிழாவிலே ஹொரனை மத்துகமை பகுதியிலுள்ள எல்லா கத்தோலிக்க தோட்ட மக்களும், பிறசமய மதத்தவர்களும் பக்தியோடு பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது. திருவிழா திருப்பலியை அருட்தந்தை பேனாட் ost அவர்களால் ஒப்புக் கொடுக்கப்பட்டது.



**தகவல் : அருட்தந்தை ஒனாசிஸ் பர்னாந்து**

### மறைக்கல்விப் பணியக அறிவித்தல்

மறைப்பணியாளர் இறுதித் தேர்விற்கான ஆயத்த வகுப்பு பங்குனி மாதம் 17ம் திகதி ஆயர் இல்ல ஜுபிலி மண்டபத்தில் பி.ப.2.00 மணிக்கு நடைபெறும்.

**தகவல் : அருட்பணி. மனோகுமரன்**
**தமிழ் பகுதி பொறுப்பாளர்**

### 01 அவர் சொல்வதைச்...

அன்று கானாவூர் திருமணத்தில் அத்தம்பதியினருக்காக இயேசுவிடத்தில் அன்னை மரியாள் பரிந்து பேசினார். "இரசம் தீர்ந்துவிட்டது" எனக்கூறி, வேலையாட்களைப் பார்த்து, "அவர் சொல்வதைச் செய்யுங்கள்" என மரியன்னைக் கூறியதை, எமது மேதகு ஆயர் மீண்டும் மும்மொழிந்து, கானாவூரையும், லூர்த்தையும் தொடர்புபடுத்திக் கருத்து தெரிவித்தார்.

### 01 கொழும்பு கத்தோலிக்க...

## உயிர்ப்புக் காலம் மற்றும் தமிழ் சிங்கள புதுவருட விடுமுறைகள்

அன்பான வாசகர்களுக்கு இம்மாதம் 18.03.2018 அன்று ஞான ஒளி பத்திரிகை வெளியிடப்படமாட்டாது. 18.03.2018 அன்றைய பத்திரிகையானது 25.03.2018 அன்று உயிர்ப்பு ஞாயிறு பத்திரிகையாக வெளிவரும் என அறியத் தருகின்றோம்.

அத்தோடு உயிர்ப்புக் கால விடுமுறைக்கு இம்மாதம் 29ம் திகதி தொடக்கம் சித்திரை முதலாம் திகதி வரை கத்தோலிக்க அச்சகம் மூடப்பட்டிருக்கும். மீண்டும் 02.04.2018 அன்று வழமைபோல் அச்சகம் திறந்திருக்கும்.

புதுவருடத்தை முன்னிட்டு சித்திரை மாதம் 13ந் திகதி தொடக்கம் 16ம் திகதி வரை கத்தோலிக்க அச்சகம் மூடப்பட்டிருக்கும். சித்திரை 17ந் திகதி கத்தோலிக்க அச்சகம் வழமைபோல் இயங்கும் என அறியத்தருகின்றோம்.

**குறிப்பு:** எமது ஞான ஒளி பத்திரிகையானது சித்திரை மாதம் 1ம் திகதி பத்திரிகை 8ம் திகதியும், 15ம் திகதி பத்திரிகை 22ம் திகதியும் வெளியிடப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

**இயக்குனர்.**

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
04 பங்குனி, 2018 ஞாயிற்றுக்கிழமை.

## எளிய உள்ளத்தோரையும் மனம் வருந்தி மனந்திரும்புவோரையும் ஆண்டவர் ஏற்றுக்கொள்கிறார்.

எமது ஆன்மாவை சரி செய்துகொள்ள தரப்பட்டிருக்கும் காலம்தான் நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கும் தவக்காலம். தவக்காலத்தின் மூன்றாம் வாரத்தில் இருக்கின்றோம். வாழ்வு நமக்குக் கொடுக்கப்பட்ட மாபெரும் கொடை. இந்த உலக வாழ்வு நமக்கு ஏதோ தற்செயலாகக் கொடுக்கப்பட்டதல்ல. மாறாக இது ஒரு நோக்கத்திற்காக தரப்பட்டதாகும். நமது வாழ்வு பிறருக்காக பிறர் நலனுக்காக செலவிடப்பட வேண்டும். நமது வாழ்வு முழுமை அடையாத வாழ்வு. ஆனால் அது முழுமையை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கிறது. வாழ்வின் முழுமையின் பயணமானது நிறைவு பெற எம்மையே நாம் புடமிட்டு பார்க்க வேண்டும். இதற்காக நல்லதொரு தருணந்தான் இத்தவக்காலம். இறைவன் படைத்த தோட்டத்தில் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகை. ஓவ்வொருவரும் ஒவ்வொரு பணிக்காக படைக்கப்பட்டிருக்கின்றோம். நொந்து வெந்து வாழ்வதும் வாழ்க்கையல்ல. கண்ணீருடனும் கவலையுடனும் வாழ்வதும் வாழ்க்கையல்ல. இல்லாததையும் பெற முடியாததையும் தேடி இருக்கின்ற நன்மைகளை இழப்பதைவிட நமக்குக் கொடுக்கப்பட்டு இருக்கின்ற மற்றெல்லாவற்றையும் எல்லா மனிதர்களும் அனுபவித்து மகிழ்ச்சியோடு நமது வாழ்வைச் சமூகத்துடன் பகிர்ந்துக்கொள்வது உண்மையான கிறிஸ்தவ வாழ்வு.

இக்கிறிஸ்தவ வாழ்வானது வாழப்பட வேண்டுமானால் நாம் நிச்சயமாக இறைவனிடம் தஞ்சமடைய வேண்டும். அவர் ஒருபோதும் எம்மை கைவிட மாட்டார். “கடவுளுடைய வல்லமைமிக்க கரத்தின்கீழ் உங்களைத் தாழ்த்துங்கள் அப்பொழுது அவர் ஏற்ற காலத்தில் உங்களை உயர்த்துவார். உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டுவிடுங்கள் ஏனென்றால் அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார்” (1பேது. 5:6-7). எளிய உள்ளத்தோரையும் மனம் வருந்தி மனந்திரும்புவோரையும் ஆண்டவர் ஏற்றுக்கொள்கிறார். அவர் அவர்களுக்கு வலிமை அளிக்கின்றார். ஆண்டவரிடம் நம்பிக்கை வைப்பதுதான் முக்கியம். “ஆண்டவர்மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களோ புதிய ஆற்றலைப் பெறுவர். கழுகுகள்போல் இறக்கை விரித்து உயரே செல்வர் அவர்கள் ஓடுவர் களைப்படையார்” (எசா.40:31).

ஆண்டவர் இயேசு இவ்வுலகிற்கு வந்தது எம்மை பாவ வாழ்விலிருந்து மீட்டு புதுவாழ்வு தந்திடவே. “நேர்மையாளரை அல்ல பாவிகளையே அழைக்க வந்தேன்” (மத்.9:13) என்று இயேசு கூறுகின்றார். நமது பாவங்களைத் தாமே சுமந்துகொண்டு பாவக்கழுவாயாக சிலுவைச் சாவை ஏற்றுக்கொண்ட இறைமகன் இயேசுதான் எமது நல்லாயன். அவர் எப்போதும் நமது இதயத்தில் வாழ்கின்றார். தன்னலம் தவிர்த்து இறை சித்தம் காண இத்தவக்காலத்தில் முயற்சிப்போம். இறைவனின் திருவுளம் நிறைவேற்றுவோம்.

இறையாசீருடன்
ஆசிரியர்

# இயேசுவின் சிலுவையும் நாமும்



நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் பாடுகளை தியானிக்கின்ற தவக்காலத்தில் நாம் வாழ்கின்றோம். இந்த தவக்காலம் நமக்கு அருளின் காலம், இறை ஆற்றலையும் நாம் அதிகமாக பெற்றுக்கொள்வதற்கான நோன்பின் காலம். கடந்தகால நமது தவறுகளை நினைத்து, அதிலிருந்து விடுதலை பெறுவதற்கான மீட்பின் காலம். நாம் இறை இரக்கத்தில் தொடர்ந்து வாழ முடியும் என்ற நற்செய்தியளிக்கும் நம்பிக்கையின் காலமும் இதுவே.

நம் ஆண்டவர் இயேசு தன்னுடைய வாழ்வின் நோக்கத்தை வெளிப்படுத்தும் போது, “மானிடமகன் தொண்டு ஏற்பதற்கல்ல, மாறாக தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாக தன் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்” (மாற் 10:45) என்று கூறினார். இயேசுவிற்கான இந்த நோக்கத்தை அவர் குழந்தையாக இருந்தபோதே, “இவர் எதிர்க்கப்படும் அடையாளமாக இருப்பார்” (லூக் 2:34) என்று சிமியோன் முன்னறிவித்தார்.

அதுபோலவே, தான் அளிக்கவிருக்கும் மீட்பானது சிலுவை வழியாகத்தான் இருக்கும் என்பதை இயேசுவே மூன்று முறை முன் அறிவித்தார். (மாற் 8:31, 9:31, 10:34) எனவே இயேசு என்ற நம் மீட்பரின் வாழ்வோடு சிலுவைப்பாடுகள் இணைந்திருந்தது. அதை அவர் நன்கு அறிந்திருந்தார். எனவேதான் இந்தச் சிலுவை மரணத்திற்காக காத்திருந்ததாக இயேசுவே கூறுகின்றார் (யோவா 12:27) இப்பின்னணியில் இயேசுவின் சிலுவைப்பாடுகளைத் தியானிக்கும் போதும் அவர் பட்ட பாடுகளை நினைக்கும் போதும் நமக்கு மிகுந்த வருத்தம் ஏற்படுகின்றது. ஏனெனில் நம்முடைய பாவங்களுக்காக மட்டுமே அவர் இத்தனை பாடுகளையும் ஏற்றார். (1 பேதுரு 2:24) எசாயா இறைவாக்கினர் கூறுவதுபோன்று நம் குற்றங்களுக்காக காயமடைந்தார். நம் தீய செயல்களுக்காக நொறுக்கப்பட்டார். (எசா 53:5) எனவே இத்தவக்காலம் நம்முடைய குற்றம் குறைகளையும், பாவங்களையும், பலவீனங்களையும், துர்க்குணங்களையும் நினைத்துப் பார்க்கின்ற காலம், இவற்றிற்காக மன்னிப்புக்கோரும் காலமும் இதுவே.

மேலும் தனது காயங்களால் நமது பாவங்களைக் குணப்படுத்துகிற இயேசு, நீதிமான்களுக்காக அல்ல பாவிகளுக்காக தன் உயிரைக் கையளித்தார். நாம் பாவிகளாக இருந்தாலும் நம்மைக் கைவிட்டுவிடாமல் நமக்காக சிலுவை சுமந்த நம் வாழ்க்கையை அவருக்கு அர்ப்பணிப்போம். இந்த அர்ப்பண வாழ்வானது நம்முடைய எண்ணங்களையும் ஆசைகளையும் அவருடைய எண்ணங்களாக மாற்றிக் கொள்வதில் அமைந்துள்ளது. அதாவது புனித பவுல் கூறுவதுபோன்று, “கிறிஸ்தவன் நான்” என்ற அகந்தையை விடுத்து, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார் என்ற மனநிலையை அடைய இந்த தவக்காலத்தை நாம் பயன்படுத்திக் கொள்வோம் (கலா 2:20).

இயேசுவின் சிலுவையைப் போன்று நாமும் பல சுமைகளை அதாவது சிலுவைகளை நமது அன்றாட வாழ்வில் சுமக்கின்றோம் என்பது உண்மைதான். வியாதி, தனிமை, முதுமை மற்றும் சமூக அரசியல் நெருக்கடிகளால் நமக்கு வரும் அழுத்தங்கள் இவையாவும் நம் சொந்த சுமைகளே. நம் குடும்பம், நம் ஊர், நம் நாடு போன்றவற்றாலும், பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர் போன்றோராலும் வரும் சிலுவைகளையும் நாம் சுமக்கிறோம்.

இவை யாவற்றையும் தனியாக சுமந்தால் வேதனை மிகுந்துவிடும். மனம் நொடிந்துவிடும். ஆனால், “சுமைசுமந்து சோர்ந்திருப்போர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள்” (மத் 11:28) என்று கூறிய இயேசுவோடு சேர்ந்து நம் வாழ்க்கை சிலுவைகளை சுமந்தால், இயேசுவின் சிலுவையோடு என்னை இணைத்துப் பார்க்கும் பொழுது எனக்கு சக்தி பிறக்கிறது என்ற புனித பவுலின் வார்த்தைகள் நம் வாழ்வில் உண்மையாகும் (1கொரி 1:24). இயேசுவின் சிலுவைக்கு மனிதருடைய மீட்பு என்ற தொலைநோக்கு இருந்தது அதேபோன்று நம்முடைய போராட்டங்களுக்கும், துன்பங்களுக்கும்....

தொடர்ச்சி 13ம் பக்கம்..

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# நிறைவாழ்வை நோக்கி...




## முகவுரை :

கிறிஸ்துவைக் காணவும் அவரை நமக்குள் கொண்டுவரவும் கொல்கொத்தாவிலிருந்து பெத்லகேமுக்குச் செல்வதே ஒரே வழி. அவரது பிறப்பு முதல், பணி வாழ்வு, பாடுகள், சிலுவை கொலைவரைக்குமான, காரணங்களான நமது பாவத்தின் காயங்கள், பாதிப்புகள், துன்ப, துயர, வேதனைகள், குற்ற உணர்வுகள் என்பவற்றோடு நாம் பயணிக்கின்றோம். தொடர்ந்தும் அடுத்தவர், அயலவர் மீதும் அதே வழிகளையே பின்பற்றுகிறோம். இந்நிலையில் கிறிஸ்துவைக் காணவும், அவரை நம் உள்ளங்களில் இருத்தவும் முடியாது. அதற்கு கொல்கொத்தாவின் கொலைக்கள மனநிலையிலிருந்து பெத்லகேமின் இறை ஒளியினதும், அமைதியினதும் மன நிலைக்குத் திரும்பி வரவேண்டும்.

"நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ளவேண்டாம், இதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்." யோவேல் 2:13. நீங்கள் இருப்பதுபோல என்னிடம் வாருங்கள் என்கிறார் ஆண்டவர். எனவே, இந்த நாட்களில் கிறிஸ்து தரும் உண்மைகளை உணர்ந்து, நமது இதயங்கள் கிழிக்கப்பட்டு, திறக்கப்பட்டு, அதிலுள்ள கடினங்கள், காயங்கள், துன்பங்கள், துயரங்கள், வேதனைகள் வெளியே வெளிப்படையாய் கொட்டப்பட வேண்டும். அவ்வாறு ஒவ்வொருவரும் நற்செய்தியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்று வாழ முடியாது. இவ்வளவு தூரம்தான் அதற்குமேல் போகமாட்டோம் என்று நாம் கடவுளிடம் கூற முடியாது.

## அப்பத்தினால் மட்டும் :

இயேசு கிறிஸ்துவையும் அவரது நற்செய்தியையும் முழுமையாக அதன் சாராம்சத்தோடு நாம் ஏற்றுக்கொள்வது அவசியம். நாம் அவரிடம் சரணாகதி அடையவேண்டும். ஏனெனில், அவரே லோகோஸ் (Logos), அதாவது தந்தையின் வார்த்தை அவரே நற்செய்தி. எமது தொழில்நுட்ப உலகுக்கு ஆவியைக் குறித்த விடயங்கள் நிறுக்கமுடியாததாகவும் அளக்க முடியாததாகவும் இருக்கின்றன. மனிதன் சந்திரன்மேல் நடந்திருந்தாலும் அவன் அப்பத்தினால் மட்டும் உயிர்வாழ முடியாது.

## பெத்லகேம் – கொல்கொத்தா :

மனுமகன் விண்ணேற்படைந்தார். நாமும் அவ்வாறே எடுத்துக்கொள்ளப்படுவோம். கிறிஸ்துவை நாம் உலகுக்குக் கொண்டுவர வேண்டுமானால் எமக்கு எமது சொந்த கொல்கொத்தா அல்லது "மண்டையோட்டின் ஸ்தலம்" இருக்க வேண்டும். அவரை எங்கே காணலாம் என்பதை நாம் காட்டவேண்டும். இறுதியில் அவரைச் சுலபமாகக் காணக்கூடிய இடங்கள் இரண்டு உள்ளன அதாவது பெத்லகேம், கொல்கொத்தா என்பவை. அன்புக்குள், நீதிக்குள், சமாதானத்துக்குள், நுழைந்து பெத்லகேம் அனுபவத்துக்குள், இறை உறவுக்குள் நகர முடியும். எனவே, இதயங்களை இறுக்கி வைத்துக்கொண்டு போலித்தனமாக வெளிவேடத்தனமாக வாழாமல், உண்மையின் மனமாற்றத்துக்குள் நுழையும் நாட்களாக இந்த நாட்கள் நமக்கு மாறவேண்டும்.

## அடையாளங்கள் :

மனிதன் தனது உள்ளத்தில் இருப்பதை சொற்களால் வெளிப்படுத்த முடியாத போதெல்லாம் அடையாளங்களைப் பயன்படுத்தியிருக்கிறான். கிறிஸ்து மனிதன் மட்டில் கொண்டுள்ள அற்புதமானதும், நம்புவதற்கரியதுமான அன்பு பெரும்பாலும் அடையாளங்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

## நம்பிக்கை :

சாதாரண அன்றாட வாழ்வில் கிறிஸ்தவனுக்கு உயிர்ப்பு விழா தரும் அர்த்தமென்ன? அது நம்பிக்கை என்னும் அர்த்தத்தை தருகிறது. நம்பிக்கையில் வாழ்பவர்களுக்கே உலகம் சொந்தமானது.

எமது வாழ்வில் கிறிஸ்துவின் விழுமியங்களை நாம் வாழ வேண்டும். இதற்கு நற்செய்தியை மிகவும் காத்திரமாக நாம் ஏற்றுக்கொள்வது அவசியம். இவ்வாறு வாழும்போது ஏற்படும் காயங்கள், பாதிப்புக்களை, உள்மனத் தாக்கங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வது சிறந்தது. ஒரு கிறிஸ்தவன்/ள் கிறிஸ்துவின் போதனையை ஏற்று அதன் வியத்தகு உண்மையை எவ்வாறு வாழ்வது என்று ஒரு சில வார்த்தைகளில் கூறிவிட முடியாது.

## அவரைப்போல் நாமும் :

இயேசு நேசித்தது போல் நாம் நேசிப்பதென்றால் அவரைப்போல் தாழ்ச்சியும் சாந்தகுணமும் உள்ளவர்களாக இருத்தல் அவசியம். இயேசு நிபந்தனையின்றி மன்னித்தது, மன்னித்துக்கொண்டிருப்பது நாம் மீண்டும் மீண்டும் மன்னிக்க வேண்டும் என்பதற்காக. நாம் மறுகன்னத்தைக் காட்டும் துணிவும் தாழ்ச்சியும் நமக்குத் தேவை. அவசியமானால் அவரைப்போல் எமது சகோதரருக்காக எமது உயிரையே தியாகம் செய்யவும் தயங்கக்கூடாது. எந்த விதிவிலக்கோ, நியாயப்படுத்தலோ இருக்கலாகாது. நாம் அவற்றில் மனுவுருவெடுத்த இயேசுவை நாம் அனுபவிக்கலாம். அவர் பிறந்த குகைக்கு நாம் போகலாம். ஆனால், அதற்குமுன் கொல்கொத்தாவினூடாகச் செல்லவேண்டும். இதை நாம் உலகுக்குப் பிரதிபலிக்க வேண்டும். உண்மைக் கிறிஸ்தவ வாழ்வை, விழுமியங்களை நாம் நமதாக்கிக் கொள்ளும்போது நமது வாழ்வே ஒரு கொல்கொத்தாவாக மாறிவிடுகிறது.

கிறிஸ்து நாம் அவருடைய முகத்தைப் பிறருக்கு காட்டவேண்டும் என்று விரும்புகிறார் என்ற எண்ணம் அநேக நாட்களாக எனது உள்ளத்தில் மிக வலுவாக இருந்துகொண்டிருந்தது. நாம் எம்மை கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொண்டால் அவ்வாறு செய்யத்தான் வேண்டும். இது அத்தியாவசியமானது. நான் மற்றொருவருடைய கண்களில் அவ்வாறு தென்படாவிட்டால், நான் நேசிக்கப்படுகிறேன் அல்லது நேசிக்கப்படத்தக்கவன் என்பதை எவ்வாறு அறிந்துகொள்ள முடியும்?

## இன்றைய தோமையார் :

இன்று உலகில் தோமையாரைப் போல் சந்தேகப்படுபவர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் கிறிஸ்துவின் காயங்களைக் காட்டுவது அவர்களுக்கு நன்மை பயக்கும், இல்லாவிட்டால் அவர்களை நாம் இழந்துவிடுவோம். கிறிஸ்தவ விழுமியங்களை நாம் வாழ்வதன்மூலம் எமக்கு ஏற்படும் காயங்களை அவர்கள் காணச் செய்வது நல்லது. கிறிஸ்தவர்களாகிய நாம் எப்பாடுபட்டும் எமது உயிரைக் கொடுத்தாவது உலகுக்கு கிறிஸ்துவின் உண்மையான முகத்தைக் காட்டவேண்டும். எம்மைச் சுற்றிவர தோமையாரைப் போன்றவர்கள் வாழ்கிறார்கள் அவரைப்போல் இயேசுவின் காயங்களில் தமது விரலை வைத்துப் பார்க்காவிட்டால் நம்பமாட்டார்கள். ஆகவே, நாம் அக்காயங்களை எம்மிலே சுமப்பதை அவர்கள் பார்ப்பது அவசியம்.

எமக்கு அக்காயங்கள் எப்படி ஏற்படுகின்றன? அதை விளங்கிக்கொள்வது மிகவும் சுலபம். நற்செய்தியை வாழ்வதன் மூலம் ஏற்படுகின்றன. ஏனெனில், சிலுவையில் அறையப்பட்ட ஆண்டவரைப் பின்பற்றும் நாமும் விசுவாசம், அன்பு, சரணாகதி என்னும் சிலுவையில் அறையப்படவேண்டும். நாம் நமது கிறிஸ்துவ விழுமியங்களோடு வாழ்வதனால் எமக்கும் இவ் உலகப்போக்குகளுக்குமிடையில் நடந்துகொண்டிருக்கும் போராட்டத்தினால் நாம் சிலுவையில் அறையப்படுகிறோம் ஏனெனில், விட்டுக்கொடாமல் நற்செய்தியை வாழ்வது இறைவன் தரும் மதிப்பீடுகளுக்கும் மனிதனுக்குமிடையில் நிகழும் ஒரு பெரும் துன்பியல் நிகழ்வு.

## எம்மை வெறுமையாக்க வேண்டும் :

மனிதனது முழுமையான சரணாகதி மகிழ்ச்சியையும், அமைதியையும் கொண்டு வருகிறது. அதற்குமுன் நிகழும் சிலுவைப்பாடும் போராட்டமும் காயங்களை ஏற்படுத்தும். இக் காயங்களையே நாம் பிறருக்கு வெளிப்படுத்த வேண்டும். நாம் கிறிஸ்துவிடம் சரணாகதி அடைந்து அவரது நற்செய்தியை முழுமையாக ஏற்றுக்கொண்டமையால், நாம் எம்மையே வறியோராக்கிக் கொண்டமையால், எம் மூலமாக அவர் தமது குணமாக்கும் பணியைச் செய்யக்கூடியதாயிருக்கும். மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுத் தேடிக்கொண்டிருக்கும் விசுவாசம், அன்பு, நம்பிக்கை ஆகியவற்றை எம்மூலம் அடைந்துகொள்வார்கள். கிறிஸ்து உண்மையாகவே உயிர்த்துவிட்டார் என்பதை அறிந்துகொள்வார்கள். கிறிஸ்துவ விழுமியங்களுக்கு மாறான ஒவ்வொரு சிறு விட்டுக்கொடுப்பையும் நியாயப்படுத்தலையும் குறித்து நாம் ஆத்மசோதனை செய்ய வேண்டும்.

நாம் எல்லோரும் மிகத்துன்புறுகிறோம். எமது பலவீனங்களை, நற்செய்தியை வாழ்வதற்கு நாம் கொடுக்கும் விலையை பிறரிடமிருந்து மறைத்தலாகாது. உதாரணமாக எமது விருந்தினர் எம்மை மேலோட்டமாகத்தான் காண்கிறார்கள். நாம் பண்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறோம். விருந்தோம்பல் எமது வாழ்வில் ஓர் அம்சமாக இருப்பதால் அவர்களது வருகையையிட்டு சந்தோஷப்படுகிறோம், அவர்களை ஓர் ஆசீர்வாதமெனக் கருதுகிறோம். ஆனால், எமது காயங்களை ஒருபோதும் மறைக்கலாகாது. மற்றவர்கள் விரலால் தொட்டுப் பார்க்க வேண்டிய காயங்கள் கண்கூடாகத் தோன்றும்படியாக உண்மையாகவும், வெளிப்படையாகவும் இருத்தல் நன்று.

## முடிவாக :

பலருக்கு இல்லறம் ஒரு துன்பியல் வாழ்வு. வெவ்வேறு பின்புலங்கள், இனங்கள், சமூகப்படிநிலைகளிலிருந்து வருபவர்கள் ஒரு மனமாய் ஒன்றித்து வாழ முற்படுகின்றார்கள். இவ் ஒருமித்த வாழ்விலேதான் எத்தனை உரசல்கள், உராய்வுகள். ஆனால், இந்த உரசல்களும், உராய்வுகளும் கிறிஸ்து எம்மை நிரப்பும்படியாக எம்மைக் வெறுமையாக்கும் ஒரு உன்னத செயற்பாடாகின்றது. எம்மிடம் வரும் உறவுகளுக்கு நாம் ஒரு முழுமையான, நிறைவான வாழ்வையே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்ற பொய்த்தோற்றத்தை பிறர் பார்க்கும்படி அல்லது நம்பும்படி விடக்கூடாது. அவர்கள் எமது காயங்களைத் தொட்டுப்பார்த்தால், தங்கள் காயங்களையும் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாயிருப்பர். பல நேரங்களில் நாம் நம் துன்ப வாழ்வை மூடி மறைத்து வாழ்வதால் மற்றவர்கள் எம்மைப்போல் வாழமுடியாது என்று எண்ணுகிறார்கள். எம் எல்லோருக்கும் காயங்கள் உள்ளன. ஒருவரோடு ஒருவர் திறந்த மனம் கொண்டவர்களாய் வாழும்போது, இத்தகைய துன்பியலூடாக நாம் பயணித்தும் இவ்வளவு மகிழ்வுடனும் நிறைவுடனும் வாழ்வது அவர்கள் மனதில் ஏற்படுத்தும் ஓர் சாட்சிய வாழ்வாகும். ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டி நம்பிக்கையை ஏற்படுத்துகின்றோம். இவ்வாறு ஒவ்வொருவரும் உயிர்ப்பின் நம்பிக்கையில் வாழ வழிபிறக்கின்றது.


**"ஒருவர் மற்றவருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். அப்பொழுது குணமடைவீர்கள்"**
**யாக். 5:16.**

இத்தகைய வாழ்க்கை முறை நாம் நிறைவாழ்வை நோக்கி நகர நம்மை உந்தித் தள்ளுகின்றது.

**அருட்பணி.**
**மா. றேகிஸ் இராசநாயகம்**

# அமைதிக்கு ஓர் அன்னை

# புனித அன்னை திரேசா




அன்னை எந்த அயல் நாட்டிலும் அரசியல் தூதுவராக இருந்ததில்லை. ஆயினும் அவர் அடக்க தினமான 13.09.1997 அன்று உலகமனைத்திலுமுள்ள இந்திய வெளிநாட்டுத் தூதரகங்களில் இந்தியக் கொடி அரைக் கம்பத்தில் பறந்து அனைத்து நிகழ்ச்சிகளும் கேளிக்கைகளும் ரத்து செய்யப்பட்டு அதிகாரப்பூர்வ துக்க தினமாக அனுசரிக்கப்பட்டது.

அன்னை அறிவியல் உலகிலோ, ஆராய்ச்சி உலகிலோ மெத்தப்படித்த மேதையல்லர். ஆயினும் ஹார்வார்டு பல்கலைக்கழகம், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம், கல்கத்தா விசுவபாரதி பல்கலைக்கழகம், ரோம் கத்தோலிக்கப் பல்கலைக்கழகம் போன்ற இந்திய, வெளிநாட்டு சர்வகலா சாலைகள் உள்ளிட்ட உலகம் அனைத்திலுமுள்ள பல்வேறு நிறுவனங்களும் விருதுகள், பட்டங்களை அவருக்கு வழங்கி அவரைப் பெருமைப்படுத்தியிருக்கின்றன"

இந்திய அரசு அன்னைக்கு 1962இல் பத்மஸ்ரீ விருதும், 1980இல் நாட்டின் மிகப்பெரிய விருதாகிய பாரத ரத்னா பட்டமும் அளித்து கௌரவித்துள்ளது. அகில உலகின் மிகச்சிறந்த விருது நோபல் பரிசு. அதையும் 1979இல் அன்னை பெற்றிருக்கின்றார்.

13ம் நாள் காலை சரியாக 8.45மணிக்கு எல்லாவித அரசு மரியாதையுடன் அவரது உடல் புனித தோமையார் தேவாலயத்தினின்றுப் பீரங்கி வண்டியில் நேதாஜி விளையாட்டரங்கிற்குக் கொண்டு வரப்பெற்றது. அங்கே அன்னையின் இறுதி அஞ்சலிச் சடங்கில் பங்கேற்க சுமார் 13, 400 பேர் குழுமியிருந்தனர்.

வெளிநாடுகளிலிருந்து வந்து இச்சடங்கில் பங்கேற்ற அரசப் பிரமுகர்கள் பட்டியலில் பெரியவர்கள் பலர் இடம்பெற்றுள்ளனர். அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் பிரதிநிதியாக அந்நாட்டின் முதற் பெண்மணி திருமதி. ஹிலரி க்லிண்டன், கனடாவின் பிரதமர் ஜான் கிரேத்தியேனுடைய துணைவியார் திருமதி. அலீன் கிரேத்தியேன், பிரான்சு நாட்டின் ஜனாதிபதி ஜாக் சீராக்கின் துணைவியார் திருமதி பெர்னதெத் சேத்ரோன், இத்தாலி நாட்டின் ஜனாதிபதி அஸ்காரோ லுவீகி ஸ்கல்பாரோ, வங்காள தேசப் பிரதமர் திருமதி ஷெயின் ஹசீனா, ஜோர்டன் நாட்டின் அரசி நூர், பிலிப்பின் நாட்டு முன்னாள் பிரதமர் கொராசோன் அக்வீனோ, இங்கிலாந்து நாட்டின் துணை முதல்வர் ஸான் பிரஸ்கோட், பெல்ஜியம் நாட்டு அரசி ஃ பபியோலா, நியூசீலாந்து நாட்டின் சுகாதார அமைச்சர் பீல் ஹீத், ஸ்பெயின் நாட்டின் அரசி சோஃபியா ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

இவர்களைத் தவிர பாகிஸ்தான், ஜெர்மனி, நோர்வே, சுவீடன் ஆஸ்திரேலியா, மெக்சிக்கோ, பிரேசில், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, கானா உள்ளிட்ட 46 நாடுகளின் பிரதிநிதிகளும் அங்கு வந்திருந்தனர்.

இந்தியத் திருநாட்டின் சிறப்புப் பிரதிநிதிகளாகக் குடியரசுத் தலைவர் கெ.ஆர் நாராயணன், பிரதமர் ஐ.கெ குஜ்ரால், பாதுகாப்பு அமைச்சர் முலயாம் சிங் யாதவ், உள்நாட்டு அமைச்சர் இந்திரஜித் குப்தா, எதிர்க்கட்சித் தலைவர் அடல் பிஹாரி வாஜ்பேயீ, முன்னாள் பிரதமர் சந்திரசேகர், சோனியா காந்தி ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

மேற்கு வங்காளத்தின் பிரதிநிதிகளாக ஆளுநர் கெ.வி ரகுநாத் ரெட்டியும் முதல்வர் ஜோதிபாசுவும் அவருடைய அமைச்சர்களும் வந்துச் சிறப்பித்தனர்.

அன்னையின் பிறந்த நாடாகிய அல்போனியாவிலிருந்து அந்நாட்டின் ஜனாதிபதி ரெக்ஸ் செப் மேஜ்தானி வருகை தந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னையின் உறவினருள் ஒருவர் மட்டுமே வந்திருந்தார். அவருடைய உடன்பிறப்புக்களில் இன்று உயிரோடிருப்பவர் எவருமில்லை. அவருடைய தமையனார் லாசரும், தமக்கை ஆஜேயும் ஏற்கனவே காலமாகிவிட்டனர். இலாசருடைய மகள் 47 வயதுடைய ஆகி மட்டும் சிசிலித்தீவின் பலேர்மோவிருந்துத் தம் அத்தையின் இறுதிச் சடங்கில் பங்கேற்க வந்திருந்தார்.

பின்னர் அன்னைக்காக இறைவழிபாடு ஒன்று நடந்தது. இதை நடத்திவைத்தவர் போப் ஆண்டவரின் பிரதிநிதியாக உரோமிலிருந்து வந்திருந்த கர்தினால் ஆஞ்செலோ சொடானோ ஆவார். இந்த இறைவழிபாட்டின் போது நடந்த நிகழ்ச்சி ஒன்று அங்கே கூடியிருந்த அனைவரையும் மெய்சிலிர்க்கச் செய்தது. அஃது என்னவென்றால் இறைவழிபாட்டின் ஒரு பகுதியான காணிக்கைப் பவனியின் போது அன்னையின் ஆதரவால் மறுவாழ்வு பெற்றவர்களுள் சிலர் அங்கு வந்து காணிக்கைகளைக் கொணர்ந்த காட்சிதான். தயா என்பவள் ஓர் அனாதைச் சிறுமி. அன்னையின் சிசுபவனில் வாழ்ந்து வருபவள். அவள் சிறு குழந்தையாக இருந்தபோது அன்னை அவளை ஒரு குப்பைத் தொட்டியிலிருந்து எடுத்துச் சிசுபவனுக்குக் கொண்டுவந்து அவளை வாழ வைத்தார். அதற்கு



எல்லா வித அரசு மரியாதையுடன் நடத்தித் தந்த இந்திய அரசுக்கும் வெளிநாட்டிலிருந்தும் உள் நாட்டிலிருந்தும் அங்கு வந்து அதைச் சிறப்பித்த அத்தனை அரசப் பிரமுகர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

அதன்பிறகு இந்து, இஸ்லாம், சீக்கியம், பௌத்தம், சமணம் ஆகிய சமயங்களின் சார்பாக அந்தந்த சமயத் தலைவர்கள் அன்னைக்கு அஞ்சலி செலுத்தினார்கள். மதச் சார்பற்ற நம் நாட்டில் தனி நபர் ஒருவருக்கு இத்தகைய அரசு மரியாதையுடன் இறுதிச் சடங்கு நடப்பது இது முதற் தடவை. இதில் இந்திய மத்திய அரசு எடுத்த நடவடிக்கை போற்றத்தக்கது.

பின்னர் அன்னையின் உடல் ஆச்சாரியா ஜெகதீஸ் சந்திரபோஸ் சாலை வழியாகத் தாய் மடத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அங்கே ஏற்கனவே தயார் செய்யப்பட்டிருந்த கல்லறையில் நல்லடக்கம் செய்தனர். இருபத்தொரு பீரங்கிகள் முழங்க அந்நிகழ்ச்சி முடிவடைந்தது.

அப்போது தாய் மடத்தில் அன்னையின் அறைக்குமுன் போடப்பட்டிருந்த பெயர்ப்பலகையில் அன்னை தெரேசா எம்.சி "வெளியே" (Out) என்றிருந்ததை ஒரு சகோதரி கட்டையை நகர்த்தி "உள்ளே" (in) என மாற்றிவிட்டார். எட்டு நாட்களுக்கு முன் வீட்டைவிட்டு வெளியே சென்றிருந்த அன்னை மீண்டும் தங்கள் இல்லத்துக்கு வந்துவிட்டார் என இச்சகோதரிகள் கருதுகின்றனர் போலும்.

அன்று பெரியவர்கள் பலர் அன்னையைப் பற்றிய தங்கள் கருத்துக்களைப் பத்திரிகைகளின் வாயிலாக வெளியிட்டிருந்தனர். ஜனாதிபதி கெ.ஆர் நாராயணன், "அன்னையைப் போன்ற ஒருவர் நம் பூமியில் நடமாடுவது மிக அபூர்வம்" என்றார்.

பிரதமர் ஐ.கெ குஜ்ரால், "நமது வாழ்வினின்று ஒளிரும் தீபம் ஒன்று மறைந்துவிட்டது. லட்சோப லட்சம் ஏழை மக்களின் வாழ்வினின்று நம்பிக்கை நட்சத்திரம்

## இறப்பின் பின்னும் ஒளிரும் எடுத்துக் காட்டு அன்னை தெரேசா

நன்றியறிதலாக இதோ அவள் மலர்க்கொத்து ஒன்றைக் காணிக்கையாக்குகிறாள்.

ரிங்கு என்பவள் ஐந்து ஆண்டுக்காலமாகச் சிறைக் கைதியாக யாவராலும் புறக்கணிக்கப்பட்டு ஆதரவின்றி வாழ்ந்து வந்தவள். அன்னையின் முயற்சியால் அவள் விடுதலையாகிச் சுதந்திரப் பறவையாக வாழ்ந்து வருகிறாள். அவளும் அங்கு வந்து தன் காணிக்கையாகப் பூஜைக்கு வேண்டிய தண்ணீரைச் சமர்ப்பிக்கின்றாள். அஃது அவள் ஐந்து ஆண்டுக் காலம் சிந்தின கண்ணீரை எடுத்துக் காட்டியது.

ஊனமுற்றிருந்துப் பின் மறுவாழ்வு பெற்ற ஒருவர் மேடைமீது ஏறி, பூஜைக்கு வேண்டிய ரொட்டியைக் காணிக்கையாகக் கொடுத்தார்.

அன்னை உயிரோடிருந்தபொழுது தம்மை ஒரு சிறு எழுதுகோல் என்று சொல்வது வழக்கம். கடவுள் பயன்படுத்தும் ஒரு சிறு கருவியாகத் தம்மையே எண்ணி வந்தார். இதை நமக்கு நினைவுபடுத்தும் வகையில் சகோதரி மோனிக்காள் ஒரு பென்சிலையும் காணிக்கையாக சமர்ப்பித்தார்.

இந்த இறுதிச் சடங்கில் பெரியோர்கள் பலர் உரை நிகழ்த்தினார்கள். அன்னை நிறுவிய சபையின் தலைவி என்ற முறையில் சகோதரி நிர்மலா நிகழ்த்திய உரையில் அவர் கூறியது "இறைவன் உலக மக்களை எவ்வளவாக அன்பு செய்தார் என்றால் தம் ஒரே மகன் இயேசுவை உலகிற்கு அனுப்பினார். இயேசு உலகினரை எவ்வளவு அன்பு செய்தார் என்றால் அன்னை தெரேசாவை இங்கு அனுப்பினார். அன்னையின் அன்பு ஒன்று தான் இத்தனை அரசப் பிரமுகர்களையும் உலகின் பல இடங்களினின்று இங்கே ஒன்றுசேர்த்தது" என்றார்.

பின்னர் அன்னையின் இந்த இறுதிச் சடங்கை

மறைந்துவிட்டது" என்றார்.

திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் கூறுகையில், "இறைவனுக்கு நாம் செய்யும் அன்பை நம் சகோதரர்களுக்கும் உலகினரால் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கும் செய்யும் அன்புச் சேவையாக மாற்றிடும் வகையில் ஒளிரும் எடுத்துக்காட்டு அன்னை தெரேசா" என்றார்.

இன்று அன்னை நிறுவிய அன்பின் மறைப்பணியாளர் சபையில் 4600 சகோதரிகளும் 500க்கும் மேற்பட்ட சகோதரர்களும் 126 நாடுகளிலுள்ள 561 நிறுவனங்களின் வாயிலாகப் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களைத் தவிர உடன் உழைப்பாளர் சபை என்னும் கிளைச் சபையில் 40 இலட்சம் உடன் உழைப்பாளர்களும் உலகின் பல இடங்களிலும் பணிபுரிந்து வருகின்றனர். இந்திய நாட்டில் 169 நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அவற்றுள் 16 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் மட்டும் சென்னையில் இராயபுரம், தி.நகர், எண்ணூர் ஆகிய இடங்களிலும் மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, வேலூர், வேளாங்கண்ணி போன்ற நகரங்களிலும் இயங்கி வருகின்றன.

இதுவரை அன்னைக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்த பொதுவுடைமை நாடுகளின் வாயில்களும் சீனத்துக் கதலுகளும் இன்று திறந்துவிடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

தொடரும்

தொகுப்பு
அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்



**இறைவனின் பரிவும், இரக்கமும், பேரன்பும் அவரது மன்னிப்பில்தான் மிகச் சிறந்த முறையில் வெளிப்படுகின்றன. அவரது மன்னிப்பு பல பரிமாணங்களைக் கொண்டது என்பதைத் திருவிவிலியம் வாயிலாக அறிந்து, இறைவனைப் போற்றுவோமாக!**

# மன்னிப்பின் பரிமாணங்கள்

## 1. பாவங்களைக் கழுவி, நம்மைத் தூய்மைப்படுத்துகிறார்

இறைவன் நம் பாவங்களை மன்னிப்பதோடு நின்றுவிடாமல், பாவங்களின் கறையை நீக்கி, நம்மைத் தூய்மைப்படுத்துகிறார் என்று இறைவார்த்தை சொல்கிறது.

எசாயா இறைவாக்கினர் வழியாக இறைவன் "உங்கள் பாவங்கள் கடுஞ்சிவப்பாய் இருக்கின்றன. எனினும், உறைந்த பனிபோல் அவை வெண்மையாகும். இரத்த நிறமாய் அவை சிவந்திருக்கின்றன. எனினும், பஞ்சைப்போல் அவை வெண்மையாகும்" (எசா 1:18) என்று நமக்கு உறுதி தந்திருக்கிறார்.

திருப்பாடல் ஆசிரியரும் இத்தகைய அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும். எனவேதான், அவர் "ஈசோப்பினால் என்னைக் கழுவியருளும். நான் தூய்மையாவேன். என்னைக் கழுவியருளும். உறைபனியிலும் வெண்மையாவேன்" (தி.பா 51:7) என்று இறைவனிடம் மன்றாடுகிறார்.

## 2. பாவங்களை மறந்துவிடுகிறார்

"ஆண்டவரே, நீர் எம் குற்றங்களை மனத்தில் கொண்டிருந்தால், யார்தான் நிலைத்து நிற்க முடியும்?" (தி.பா 130:3) என்பது பாவம் செய்கிற நம் அனைவரின் மனதிலும் எழுகின்ற அச்சம். ஆனால், இறைவன் நம் பாவங்களை மன்னிப்பதோடு, அவற்றை மறந்துவிடுவதாகவும் வாக்களித்துள்ளார்.

எசாயா இறைவாக்கினர் வழியாக அவர் "நானே உன் குற்றங்களை என் பொருட்டுத் துடைத்தழிக்கின்றேன். உன் பாவங்களை நினைவிற்கொள்ள மாட்டேன்" (எசா 43:25) என்று வாக்குறுதி அளித்துள்ளார். எரேமியா இறைவாக்கினரும் இஸ்ராயேல் மக்களிடம் "அவர்களது தீச்செயலை நான் மன்னித்துவிடுவேன். அவர்களுடைய பாவங்களை இனிமேல் நினைவுகூர மாட்டேன்" (எரே 31:34) என்ற இறையுறுதியை நினைவுபடுத்துகிறார்.

இறைவன் எந்த அளவுக்கு நமது பாவங்களை மறக்க முன்வருகிறார் என்பதற்கு நல்லதொரு உருவகமாக, "என் பாவங்கள் அனைத்தையும் உம் முதுகுக்குப் பின்னால் எறிந்துவிட்டீர்" (எசா 38:17) என்ற வாசகம் நம்மை வியப்படைய வைக்கிறது.

## 3. பாவங்களை வெகு தொலைவுக்கு அகற்றுகிறார்

இறைவனின் பேரிரக்கத்தின் இன்னோர் உருவகமாக அவர் நமது பாவங்களை வெகு தொலைவுக்கு அகற்றுவதாக நாம் திருவிவிலியத்தில் வாசிக்கிறோம்.

இறைவனின் கனிவை அருமையாக வெளிப்படுத்தும் திருப்பாடல் 103 பின்வருமாறு கூறுகிறது. "அவர் தமக்கு அஞ்சுவோர்க்குக் காட்டும் பேரன்பு மண்ணினின்று விண்ணளவு போன்று உயர்ந்தது. மேற்கினின்று கிழக்கு எத்தனை தொலைவிலுள்ளதோ, அத்துணை தொலைவிற்கு நம் குற்றங்களை நம்மிடமிருந்து அவர் அகற்றுகின்றார். தந்தை தம் பிள்ளைகள் மீது இரக்கம் காட்டுவதுபோல் ஆண்டவர் தமக்கு அஞ்சுவோர்மீது இரங்குகிறார்" (தி.பா 103:12-13).

இறைவாக்கினர் மீக்காவும் இறைவனின் இத்தகைய பண்பை "அவர் நம்மீது இரக்கம் காட்டுவார். நம் தீச்செயல்களை மதித்துப்போடுவார் நம் பாவங்கள் அனைத்தையும் ஆழ்கடலில் எறிந்துவிடுவார்" (மீக் 7:19) என்னும் இறைவாக்கில் எடுத்துச் சொல்லியுள்ளார்.

## 4. பாவங்களை மறைக்கிறார்

இறைவனின் மன்னிப்பின் இன்னொரு வியத்தகு பரிமாணம் அவர் நம் பாவங்களை மறைக்கிறார் என்பது. "எவரது குற்றம் மன்னிக்கப்பட்டதோ, எவரது பாவம் மறைக்கப்பட்டதோ அவர் பேறு பெற்றவர். ஆண்டவர் எந்த மனிதரின் தீச்செயலை எண்ணவில்லையோ அவர் பேறுபெற்றவர்" (தி.பா 32:1-2) என்று வாசித்து நாம் மலைத்துப் போகிறோம்.

உண்மையில், இறைவனின் பேரிரக்கத்தால் நமது பாவங்கள் மறைக்கப்பட்டு, நாம் பெரிய அவமானங்களிலிருந்தும், கண்டனங்களிலிருந்தும் காக்கப்படுகிறோம் என்பதை உணர்ந்தால், நம் உள்ளங்கள் நன்றியால் நிரம்பாதா? "உமது மக்களின் குற்றத்தை மன்னித்தீர். அவர்களின் பாவங்கள் அனைத்தையும் மறைத்துவிட்டீர்" (தி.பா 85) என்று இறைவனைப் போற்றுகிறது திருப்பாடல் 85.

எரேமியா இறைவாக்கினரும் இறைவனின் மன்னிப்பின் இந்த வியத்தகு பரிமாணத்தை இஸ்ரயேல் மக்களுக்கு எடுத்துச் சொன்னார். "அந்நாள்களில், அக்காலத்தில், இஸ்ரயேலில் குற்றத்தைத் தேடிப் பார்ப்பர். ஆனால், ஒன்றும் தென்படாது. யூதாவில் பாவங்களைத் தேடுவர். ஆனால், ஒன்றும் காணப்படாது. ஏனெனில் நான் விட்டுவைத்த எஞ்சியோரை மன்னிப்பேன் என்கிறார் ஆண்டவர்" (எரே 5:20) என்று வாசிக்கிறோம்.

## 5. பாவங்களுக்கு ஏற்ப நடத்து–வதில்லை.

"அவர் நம் பாவங்களுக்கு ஏற்ப நம்மை நடத்துவதில்லை. நம் குற்றங்களுக்கு ஏற்ப நம்மைத் தண்டிப்பதில்லை" (திபா 103:10)...

15



# தவக்காலம்
## மகிழ்ச்சியின் காலம்

**மத் 7:13–14**

**"இடுக்கமான வாயில் வழியே நுளையுங்கள். ஏனெனில் அழிவுக்குச் செல்லும் வாயில் அகன்றது. வழியும் விரிவானது. அதன் வழியே செல்வோர் பலர். வாழ்வுக்குச் செல்லும் வாயில் மிகவும் இடுக்கமானது. வழியும் மிகக் குறுகலானது. இதைக் கண்டு பிடிப்போர் சிலரே".**

திருச்சபை இக்காலத்தைத் தவக்காலம் என அழைக்கிறது. தவக்காலம் மகிழ்ச்சியின் காலம். ஏன் இதை மகிழ்ச்சியின் காலம் என்கிறோம்? எமது பாவங்களை ஒத்துக்கொண்டு மனந்திரும்பி மன்னிப்புப் பெறும் காலம்.

**மத் 7:13–14**

**"இடுக்கமான வாயில் வழியே நுளையுங்கள். ஏனெனில் அழிவுக்குச் செல்லும் வாயில் அகன்றது. வழியும் விரிவானது. அதன் வழியே செல்வோர் பலர். வாழ்வுக்குச் செல்லும் வாயில் மிகவும் இடுக்கமானது. வழியும் மிகக் குறுகலானது. இதைக் கண்டு பிடிப்போர் சிலரே".**

இன்று இறைவனின் விருப்பப்படி வாழ்பவர்களை ஏனையோர் நகைப்பர். வாழத் தெரியாதவர்கள் என்று கூறுவர். ஆனால் உலகத்தார் கூறுவதன்படி வாழ்பவர்களைப் போற்றுவர். இன்று முக்கியமான பாவம் உலகில் நிலவுகிறது. அது என்ன தெரியுமா? எது சரி? எது பிழை? என்று தெரியாமல் வாழ்வதே. பாவங்கள் கூட சரியானது என்று எண்ணும் நிலை உருவாகியுள்ளது.

தவக்காலம் விபூதிப் புதன் அன்று ஆரம்பமாகிறது. 40 நாட்கள் அதாவது 6 ஞாயிறையும் தவிர்த்து இத்தவக்காலம் அடங்குகிறது. எதற்காக விபூதியைப் பூசுவார்கள்? எனது பாவங்களை நான் ஒத்துக் கொண்டு மனந்திரும்புகிறேன் என்ற எண்ணத்தோடு இதைப் பூச வேண்டும். இது தெரியாமல் எல்லோரும் முண்டி அடித்துக்கொண்டு ஓடிப்போய் விபூதி பூசிக்கொள்வார்கள். ஆதித் திருச்சபையில் பிரதானமான பாவங்களாக இறைவனை மறுதலிப்பது, கொலை செய்வது, விபச்சாரம் செய்வது ஆகியவற்றை எண்ணினர். இதைச் செய்தவர்கள். ஆலயத்துக்கு வெளியே விடப்பட்டு அவர்களது தலையில் சாம்பலைக் கொட்டுவார்கள். ஆலயத்துக்குச் செல்பவர்களிடம் எனக்காக மன்னிப்புக் கேட்டு மன்றாடுங்கள் என்று இவர்கள் கூறுவர்.

தமது தவறை ஒத்துக்கொண்டவர்களே இவ்வாறு செய்வர். ஒத்துக் கொள்ளாத பலர் ஆலயத்துக்குச் சென்று வருவர். நாமும் தவறுகளை ஒத்துக்கொள்ளாமலே நெற்றியில் விபூதி பூசுகிறோம். பிற்காலத்தில் ஆலயம் முழுவதிலும் சாம்பலாகிவிடுமே என்பதால் நெற்றியில் மட்டும் பூசும் முறை வந்தது.

இத்தவக்காலத்தில் செபம், தவம், தானதருமம் செய்வது முக்கியம். செபம் என்பது இறைவனோடு உரையாடுவது, உறவாடுவது. தவம் என்பது எம்மை ஒறுப்பது. பாவம் செய்ய மறுப்பது. மேலும் தான தருமம் என்பது எம்மிடம் வந்து பிச்சை கேட்பவருக்குக் கொடுப்பதல்ல. அது பிச்சை. நாமே உதவி தேவைப்படுவோரைத் தேடிச்சென்று கேட்டு உதவுவதே தான தருமம் ஆகும்.

இத்தவக்காலத்தில் வாழ்வுக்குச் செல்லும் வாயிலாகிய இடுக்கமான வழியைத் தெரிவு செய்வது முக்கியம். இதைக் கண்டுபிடிப்போர் சிலரே என்று கூறப்படுகிறது. இச்சிலரில் நானும் ஒருவராக மாறவேண்டும். சிலரைப் பலராக்க முயற்சி செய்ய வேண்டும்.

எமது குடும்பங்களில், வேலை செய்யும் இடத்தில், வாழும் சூழலில் தேவைப்படுவோரைத் தேடிக் கண்டு பிடித்துத் தான தருமம் செய்ய முயலுவோம். எமது எண்ணங்களைத் தூய்மையாக்குவோம். ஆதித் திருச்சபை மூன்று பாவங்களை மட்டும் பெரிய பாவம் என்றனர். இறைவனை மறுதலிப்பது, விபச்சாரம் செய்வது, கொலை செய்வது. ஆனால் இவை மட்டுமா பாவம்? இவற்றிற்குத் துணைபோகும் சுயநலம் போன்றவற்றால் உருவாகும் பாவங்கள் பல உள்ளன. இறைவனுக்கு விருப்பமில்லாதவைகள், இறைவனுக்குக் கீழ்ப்படியாமை, அவரது அன்பை விசுவசிக்க மறுப்பது, மற்றவர்களது பெயரைக் கெடுப்பது குடும்பங்களில் பிரிவினையை உருவாக்குவது இப்படிப் பல பாவங்கள் உண்டல்லவா!

ஆகவே இத்தவக்காலத்தில் எமது பாவங்களை ஒத்துக்கொள்வோம். மனந்திரும்பி இறைவன் பக்கம் திரும்புவோம்.

தொடரும்



# குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

151

பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா
உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

**பேதுரு**

## தவக்காலத்தின் 3வது ஞாயிறு (04.03.2018)

**வாசக விளக்கம்:** தவக்காலத்தின் 3வது வாரத்தில் கால்பதிக்கும் அன்பின் இறைமக்களே இன்றைய இறைவார்த்தைகள் அனைத்தும் நமக்கு தவக்காலத்தில் நாம் செய்ய வேண்டிய காரியத்தையும் இயேசுவின் புரட்சிகரமான கருத்தையும் எடுத்துரைக்கின்றன. இன்றைய நற்செய்தியில் இயேசு ஒரு புரட்சியாளனாகச் செயல்படுவதைப் பார்க்கின்றோம். எருசலேம் ஆலயத்தில் நடைபெற்ற நீதியற்ற செயல்பாட்டைக் கண்டு கோபம் கொண்டதுடன் ஆலயத்தையும் தூய்மைப்படுத்துகின்றார். நம்முடைய எண்ணம், செயல், சொல் நமது வாழ்க்கையும் தூய்மைப்படுத்த வேண்டிய நிலையில் தான் இருக்கின்றது. கடவுள் வாழும் இல்லமாக திகழும் நாம் எப்பொழுதும் தூய்மையாக இருக்க வேண்டும். நாம் பாவ வாழ்வில் இருந்து ஆன்மீக இருளில் இருந்து தூய்மையாக வேண்டும் என்பதை பத்துக் கட்டளைகள் விளக்குகின்றன. இதன் விபரத்தை முதல் வாசத்தில் பார்க்கின்றோம். இரண்டாம் வாசகத்தில் சிலுவையின் பாடத்தை விளக்கும் தூய பவுல் இயேசு காட்டிய வாழ்வை வாழ்வோர் நிச்சயம் உயிர்ப்பின் வெற்றியை பெறுவார்கள் என்கிறார். எனவே இத்தவக்காலத்தில் சிலுவை வழி சீவியம் என்பதை சிந்தித்து எமது மனமாற்றத்தை உறுதி செய்து வாழ்ந்திட இறையருளை வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : வி. ப 20:1–17**

திருச்சட்டம் மோசே வழியாக அளிக்கப்பெற்றது

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவரே நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடமே உள்ளன.

**இரண்டாம் வாசகம் : 1 கொரி 1:22–25**

சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையே பறைசாற்றுகின்றோம். அவரது சிலுவை யூதருக்குத் தடைக்கல், அழைக்கப்பட்டவருக்கோ கடவுளின் ஞானம்

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**

தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்.

**நற்செய்தி வாசகம் : யோவா 2:13–25**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

சிலுவை வழியில் வாழ்க்கையை நடந்து தன் இனிய மக்களை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் தமது நேரத்தையும் காலத்தையும் இத்தவக்காலத்தில் இன்னும் அதிகமாக செலவழித்து ஆன்மீக வாழ்வில் அனைவரையும் வழிநடத்தத் தேவையான வரங்களை அளித்தருள வேண்டுமென்று...

கடவுளின் கட்டளைகளையும், நியமங்களையும், சட்டங்களையும் கடைப்பிடித்து கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுபவர்கள் நன்மக்கள் எனப்படுவார்கள் என்பதை உணர்ந்து கொண்டு நாட்டின் தலைவர்களும் பொறுப்புக்களில் உள்ள அதிகாரிகளும், மக்களும் நடக்கத் தேவையான அருள்வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

புறத்தூய்மையை விட அகத்தூய்மையே மேலானது என்பதை இயேசு வெளிப்படுத்தியுள்ளார். இதைப் புரிந்துகொண்டு நாமும் எமது உள்ளம் என்னும் ஆலயத்தை எப்பொழுதும் தூய்மையாக வைத்திருக்கவும், செபத்தாலும் ஒறுத்தல் முயற்சிகளினாலும் ஒப்புரவு அருட்சாதனத்தினாலும் அகத்தூய்மை உள்ளவர்களாக வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று...

## தவக்காலத்தின் 4வது ஞாயிறு (11.03.2018)

**வாசக விளக்கம்:** “இயேசுவை விசுவாசக் கண்ணோடு உற்றுநோக்கினால் மகிழ்ச்சி அடைவோம் வெட்கத்தால் தலைகுனிய மாட்டோம்”. தவக்காலத்தின் 4வது ஞாயிறு வாரத்தில் கால்பதிக்கும் இறை உள்ளங்களே! இன்றைய நற்செய்தி வாசகமானது பழைய ஏற்பாட்டில் மோயிசனின் காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை ஆரம்பமாகக் கொண்டுள்ளது. இயேசுவின் வாழ்க்கை முழுவதும் நமக்கு எடுத்துக்காட்டும் செய்தி யாதெனில் கடவுளின் அளவிட முடியாத அன்பும் இரக்கமும் ஆகும். அதன் முழுவடிவமாய் திகழ்பவர் இயேசுவே. தவக்காலம் முழுவதும் இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் மையமாகக் கொண்டு இருந்தாலும், இந்த 4வது வாரம் ஒரு மகிழ்ச்சியின் அடையாளமாக திகழ்கின்றது. காரணம் இன்றைய வாசகங்கள் நமக்குப் புது அழைப்பையும் கடவுளின் அன்பையும் இரக்கத்தையும் தருவதாக அமைந்துள்ளன. பாவத்தினால் இறந்தவர்களைப் போல் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு இயேசு ஒரு செய்தி தருகின்றார். பாம்பின் விஷமென நமது உள்ளத்திலும் உடலிலும் தீமைகளும் நோய்களும் நிறைந்திருக்கின்றன. இந்நிலையில் இயேசுவை விசுவாசக் கண்ணோடு உற்றுநோக்கும் அனைவரும் வாழ்வு பெறுவர், குணம் பெறுவர், ஆசீர் பெறுவர், ஆறுதல் பெறுவர், அமைதி பெறுவர், விடுதலை பெறுவர் என்பதே அச்செய்தியாகும். எனவே நாமும் இயேசு தரும் அன்பையும் இரக்கத்தையும் பெற்று வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : 2குறிப்பேடு 36:14–16, 19–23**

ஆண்டவரின் சினமும் இரக்கமும் மக்கள் நாடுகடத்தப்படுதலிலும் அவர்கள் மீட்கப்படுவதிலும் வெளியாகின்றன.

**பதிலுரைப் பாடல் :**

உன்னை நான் நினையாவிடில் என் நா மேல்வாயோடு ஒட்டிக்கொள்வதாக.

**இரண்டாம் வாசகம் : எபேசி 2:4–10**

குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாயிருந்த நீங்கள் மீட்கப்பட்டிருப்பது அந்த அருளாலேயே

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**

தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்.

**நற்செய்தி வாசகம் : யோவா 3:14–21**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கடவுள் மீது முழு நம்பிக்கைகொள்ளவும் இயேசுவின் அளவிடமுடியாத அன்பை புரிந்து கொள்ளவும் தன் மக்களுக்கு வழிகாட்டும் தூய திருச்சபையுடன் இணைந்து திருத்தந்தையின் தவக்கால செய்தியை உணர்ந்து அக்களிப்போடும் அகமகிழ்வோடும் நாம் வாழத் தேவையான வரங்களை எமக்குத் தந்தருள வேண்டுமென்று....

இறைவன் மிகவும் பொறுமையுடையவர் உடனடியாக எம்மைத் தண்டிக்கும் அளவுக்கு கோபம் கொள்ளமாட்டார். எமது மனமாற்றத்திற்காக காத்திருக்கின்றார். இயேசுவைப் போல நற்செயல்கள் புரிவதற்கே நாமும் படைக்கப்பட்டுள்ளோம் என்பதைப் புரிந்தவர்களாக இத்தவக்காலத்தில் ஏழை எளியவர் அனாதைகள் வாழ்விழந்தோர் மீது இரக்கம் கொண்டு அவர்களுக்கு உதவிகள், நற்செயல் புரிந்து வாழ வரமருள வேண்டுமென்று...

கடவுள் அன்பும் இரக்கமும் கொண்டவர் நம்மை இறப்பில் இருந்து மீட்டுப் புதுவாழ்வைத் தந்தவர் அவர் நமது உள்ளத்தை உற்றுநோக்கினால் நாம் புதுவாழ்வைப் பெறுவோம் இதை உணர்ந்தவர்களாக மனமாற்றத்தின் காலமாகிய இத்தவக்காலத்தில் முழுமையான மனமாற்றம் பெற்று வாழ்ந்திடத் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

## தவக்காலத்தின் 5வது ஞாயிறு (18.03.2018)

**வாசக விளக்கம்:** தவக்காலத்தின் இறுதி நாட்களில் பயணிக்கும் நமக்கு செபத்திலும் தவத்திலும் நிலைத்திருந்தால் எமது துன்பங்களை வெல்ல முடியும் என்ற செய்தியை இன்றைய வாசகங்கள் எமக்கு எடுத்துரைக்கின்றன. துன்பங்களின் ஊடாக இறை திட்டத்திற்கு கீழ்ப்படிவதை இயேசு கற்றுத் தருகின்றார். இயேசுவைப்போல நாம் சோதனைகளில் வெற்றி பெற செபம் அவசியமானது இறையச்சம் என்பது உலகோர் மீது நாம் கொள்ளும் அச்சத்தைப் போன்றது அல்ல இறைவனின் வலிமையை அறிந்து, அவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்துவதாகும். கீழ்ப்படிதல் என்பது இறைவனின் சட்டங்களையும் கட்டளைகளையும் கடைப்பிடிப்பதாகும். இயேசு தந்தைக்கு கீழ்ப்படிந்தார். அதனால் மிகுந்த பலன் கொடுத்தார். தவக்காலத்தின் இறுதி நாட்களில் பயணிக்கும் நாம் வாழ்வின் சோதனைகளை வெற்றி கொள்ள செபத்தில் நிலைத்து வாழ இறையருளை வேண்டிப் பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : எரேமி 31:31–34**

புதிய உடன்படிக்கை செய்து கொள்வேன் பாவங்களை நினைவுகூரமாட்டேன்.

**பதிலுரைப் பாடல் :**

கடவுளே தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்.

**இரண்டாம் வாசகம் : எபிரே 5:7–9**

கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் அனைவரும் என்றென்றும் மீட்படையக் காரணமானார்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**

எனக்குத் தொண்டு செய்வோர் என்னைப் பின்பற்றட்டும். நான் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பர் என்கிறார் ஆண்டவர்.

**நற்செய்தி வாசகம் : யோவா 12:20–33**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

துன்பத்தின் ஊடாகவே இறைத்திட்டத்திற்கு கீழ்ப்படிய முடியும் என்ற பாடத்தைக் கற்றுத் தந்த இயேசுவை முன்மாதிரிகையாகக் கொண்டு வாழும் திருச்சபையின் அங்கத்தவர்களாகி நாமும் கீழ்ப்படிதலைக் கைக்கொண்டு வாழ வேண்டிய மனநிலையை எமக்குத் தந்தருள வேண்டுமென்று....

கடவுள் நம்மை அன்பு செய்கிறார் அதுபோல நாம் பிறரை அன்பு செய்யவும் பலியை அல்ல இரக்கத்தையே விரும்பும் இறைவனின் சட்டங்களையும் கட்டளைகளையும் கடைப்பிடிக்கவும் நாட்டு மக்கள் அனைவரையும் சமமாக மதிக்கின்ற நல்லாட்சி மலர்ந்திடவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று....

மனமாற்றம் என்பது கடவுளின் அன்பை உணருவதும் ஏற்றுக் கொள்வதுமாகும். நாம் கடவுளின் அன்பிற்கு எதிராகச் செய்த பாவங்களை ஏற்றுக்கொண்டு மனமாற்றம் பெற்று வாழவும், செப தபத்துடன் கூடிய கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ளவும் சிலுவையின் பாடத்தைக் கற்றுக் கொள்ளும் வாஞ்சையுடன் வாழவும் வேண்டிய வரங்களைப் பெற்றுக் கொள்ளவும் வரமருள வேண்டுமென்று...

**ஞான ஒளி பத்திரிகையின் அடுத்த இதழானது உயிர்ப்பு ஞாயிறு சிறப்பிதழாக 25.03.2018 அன்று வெளிவரும் என்பதை அறியத்தருவதோடு வாசகர்களின் உயிர்ப்பு வார இதழுக்கான ஆக்கங்களையும் எதிர்பார்க்கின்றோம். முடிந்த அளவு விரைவாக உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புமாறு கேட்டுநிற்கின்றோம்.**

## சாவுக்கும் நோய்க்கும் வழியா செல்பி

1. விஞ்ஞான விந்தை, பணத்திற்கு சந்தை
   வளர்ந்ததா விஞ்ஞானம் மெய்ஞானத்தை
   மறைக்க என்பது சிந்தை
2. கையடக்க தொலைபேசி அதில் புகுந்தது
   சாவு என்னும் செல்பி. இது ஏன் உனக்கும்
   எனக்கும் என்றார் கடவுள் ஞானத்தின்
   சிற்பி
3. படைப்பின் சிற்பியை மறந்தாய், செல்பி
   என்ற சாத்தானை மணந்தாய். செல்பியை
   கையிலும் பையிலும் வைத்து காலம்
   தெரியாமல் இணைந்தாய்.
4. செல்பியோ கவர்ச்சி, ஆனால் உனக்கு
   தரப்போவதோ வீழ்ச்சி, காலத்தால்
   உனக்கு செல்பி தருமா நிலை மகிழ்ச்சி
5. இறைமை வேகம், செல்பியின் அனர்த்தம்
   கேட்க மறந்தது. செல்பி உன் பின்னால்
   வந்து மரணம் என்ற உறுதி தந்தது.



**இறை இயேசுவின் நாமத்தால் சிந்திப்போம், செயல்படுவோம்.**

திரு. பிரான்சிஸ் அப்சலோம்

# நல்ல ஆயன் யார்?



“ஆயனைப்போல் தம் மந்தையை அவர் மேய்ப்பார். ஆட்டுக்குட்டியைத் தம் கையால் ஒன்று சேர்ப்பார். அவற்றைத் தம் தோளில் தூக்கிச் சுமப்பார். சினையாடுகளை கவனத்துடன் நடத்திச் செல்வார்” (எசா 40:11)



**Catacomb ஒன்றில் மிகப்பழமையான ஓர் ஓவியம் உண்டு. அந்த ஓவியத்தில் நல்லாயனாகிய கிறிஸ்து, தவறிப் போய்க் காயப்பட்ட ஆடு ஒன்றினைக் கனிவோடு தன் தோள்மேல் தூக்கிவரும் காட்சியைக் காணலாம்.**

ஒரு காட்டில் புள்ளிமான் கூட்டம் வாழ்ந்து வந்தது. அந்த மான்களின் தலைவன் “மின்னல் அழகன்” பாதுகாப்பற்ற காட்டு வாழ்க்கையில் அந்த தலைவனது வழிகாட்டல், முடிவு எல்லாமே மின்னல் வேகத்தில் இருக்கும்.

ஒரு நாள் மேய்ச்சலின் போது அருகில் சலசலப்பு ஓசை. மோப்பம் பிடித்த மின்னல் தலைவன், சிங்கம் ஒன்று நெருங்கி வருவதை உணர்ந்தது. மின்னல் வேகத்தில் எச்சரிக்கை கொடுத்தது. மான் கூட்டம் துள்ளிப் பாய்ந்து ஓடியது.

காட்டுப் பாதையின் குறுக்கே, நீண்ட பள்ளம் ஒன்று இருந்தது. சில கிழ மான்களும் சிறுகுட்டிகளும் பள்ளத்தை தாண்ட முடியாமல் திகைத்து நின்றன. திரும்பிப் பார்த்த தலைவன் திடுக்கிட்டு நின்றது. உடனடியாகப் பள்ளத்தில் இறங்கித் தன்னையே பாலமாக்கித் தன் முதுகில் அனைவரும் மிதித்துத் தாண்டிச் செல்லுமாறு சொன்னது. இயலாத மான்கள் தலைவன் முதுகின்மேல் ஏறித்தாவித் தப்பித்து ஓடின. ஆனால் தலைவனால் கரையேற முடியாதபடி முதுகெலும்பு முறிந்து போயிருந்தது. சில நொடிகளில் தலைவன் மான் சிங்கத்தின் பசிக்கு இரையானது.

தன்னலமற்ற அந்த மான் கூட்டத் தலைவன் போல இயேசு நம் பாவங்களையும் துன்பங்களையும் தம்மேல் ஏற்றுக்கொண்டார். “சிலுவையின் மீது தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார். நாம் பாவங்களுக்கு இறந்து, நீதிக்காக வாழ்வதற்கே இவ்வாறு செய்தார். அவர்தம் காயங்களால் நீங்கள் குணமடைந்துள்ளீர்கள்” (1பேதுரு 2:24). பிரச்சினைகளே வாழ்க்கை என்றாகிப்போன காலம் இது. வாழ வகையறியாமல், வாழ்க்கைப் பாதையில் சரியான வழிதெரியாமல் வாடித் தவிக்கும் ஆடுகளாகிய நமக்கு முடிவில்லா வாழ்வின் “நானே வாயில், என் வழியாக நுழைவோருக்கு ஆபத்து இல்லை” (யோவா 10:9) என உறுதிமொழி தந்து நம் உள்மனக் காயங்களுக்கு மருந்திடும் உண்மையான மருத்துவராகத் திகழ்கிறார் இயேசு. “ஆயனைப்போல் தம் மந்தையை அவர் மேய்ப்பார். ஆட்டுக்குட்டியைத் தம் கையால் ஒன்று சேர்ப்பார். அவற்றைத் தம் தோளில் தூக்கிச் சுமப்பார். சினையாடுகளை கவனத்துடன் நடத்திச் செல்வார்” (எசா 40:11)

நற்செய்தியில், பார்வை இழந்த மனிதனுக்கு இயேசு பார்வை கொடுத்த நிகழ்ச்சியைத் தொடர்வது. மக்களின் தலைவர்களாய் இருந்த அன்றையப் பரிசேயர்களை குருட்டு வழிகாட்டிகள் என்று குறிப்பிட்டு, “திருடுவதற்கும் கொல்வதற்கும் அழிப்பதற்குமன்றித் திருடர் வேறெதற்கும் வருவதில்லை. ஆனால் நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன். நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்”. (யோவா 10:10-11) (எசே34இல் போலி ஆயர்கள் பற்றி கடுமையான வார்த்தைகளையும் கவனத்திற் கொள்க)

உரோமை நகரில் காணப்படும் Catacomb (அது பூமிக்கடியில் அமைந்துள்ள தொடக்கக்காலக் கிறிஸ்தவர்களின் கல்லறை. அங்கு போகச் சுரங்கப் பாதைகள் உண்டு. பழங்காலத்தில் கொடுங்கோலர்களால் துன்பத்திற்கு ஆளான கிறிஸ்தவர்கள் தங்கள் இறந்தோரை அடக்கம் செய்ய இத்தகைய கல்லறைகளைப் பயன்படுத்தினார்கள்). ஒன்றில் மிகப்பழமையான ஓர் ஓவியம் உண்டு. அந்த ஓவியத்தில் நல்லாயனாகிய கிறிஸ்து, தவறிப் போய்க் காயப்பட்ட ஆடு ஒன்றினைக் கனிவோடு தன் தோள்மேல் தூக்கிவரும் காட்சியைக் காணலாம். இது துன்பத்தில் உழலும் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்லாமல் அனைத்து மக்களுக்கும் ஆறுதலும் மனத்திடனும் அளிக்கவல்லது.

இயேசு தன்னைப் பற்றிக் கூறிய இரண்டு உருவகங்கள்.

**1. நல்ல ஆயன் நானே.** (யோவா 10:11). இயேசுவின் இந்தச் சொற்கள். இயேசு திருவழிபாட்டின் மையம். ஆடுமாடுகள் மேய்த்து வந்த இஸ்ராயேல் மக்கள் தங்கள் கடவுளையே ஆயனாகக் கண்டனர். (தி.பா 23:1, 77:20, 80:1, 95:7, 100:3) இந்த மரபைப் பின்பற்றியே இயேசுவும் ஓர் ஆயனாகத் தன்னை வெளிப்படுத்துகிறார் (மத் 18:12, மாற் 6:34, 14:27, லூக் 12:32). மக்கள் செய்து வந்த தொழிலிருந்தே கடவுளும், பின்னர் இயேசுவும், இன்று திருச்சபைத் தலைவர்களும், இப்பெயரைப் பெறுகின்றனர்.

ஒரு குடையைப் பார்த்து கவிஞன் கேட்டான், “குடையே, உனக்கு மழையில் நனைய விருப்பமா? வெயிலில் காய விருப்பமா?” அதற்குக் குடை “நான் மழையில் நனைந்தாலும், வெயிலில் காய்ந்தாலும் கவலையில்லை. ஆனால் என்னைப் பயன்படுத்தும் மக்கள் அனைவரும் மழையில் நனையவும் கூடாது. வெயிலில் காயவும் கூடாது” என்றதாம். இப்படித் தன்னை மறந்து, தன்னை இழந்து நம்மை அன்பு செய்பவர் நல்லாயன் இயேசு!

**2. மந்தைக்கு வாயில் நானே** (யோவா 10:9). தூய கிறிஸ்தோஸ்தம் கூறுவது போல, யூதர்கள் இயேசுவைப் பின்பற்றாததன் காரணம் இயேசுவை ஆயனாகக் காண முடியாததினால் அல்ல, இவர்கள் நல்ல ஆடுகளாக இல்லாமல் இருந்ததினால்தான். அதனால் இயேசு அவர்களைத் “திருடரும் கொள்ளையரும்” (யோவா 10:8) என்கிறார்.

விவிலியம் உவமைகளின் கருவூலம். ஆட்டுக் கொட்டில் பற்றிய உவமை வழியாக நமக்கும் ஆடுகளாக இருக்க அல்ல. ஆயர்களாக இருக்க அழைப்பு விடுக்கின்றார் இயேசு. ஏனெனில் தன்னறிவின்றி கும்பல் மன நிலையோடு செயல்படும் ஆடுகளோடு இன்றையக் கிறிஸ்தவர்களை ஒப்பிடுவது திருச்சபையில் அவர்களுக்குள்ள கூட்டுப் பொறுப்பையும் தலைமைப் பணியையும் பிரதிபலிக்குமா? இயல்பாக எழும் கேள்வி இது. இன்று தேவை நல்ல தலைவர்கள்.

“உங்களுக்காக நான் ஆயனாக இருக்க, உங்களுடன் நான் ஒரு கிறிஸ்தவனாக இருக்கிறேன்” என்று சொன்ன தூய அகுஸ்தினார் தமது ஹிப்போ மறைமாவட்ட மக்களைப் பார்த்து மேலும் கூறியது, “திருமுழுக்குப் பெற்ற நல்ல ஆடுகளாக நீங்கள் அனைவரும் இருக்க வேண்டும் என்பது எதிர்பார்ப்பு. ஆனால் எதார்த்தமோ திருமுழுக்குப் பெற்ற ஓநாய்களும் உங்களுக்கு மத்தியில் இருப்பதை அறிகின்றேன். அது மட்டுமல்ல கிறிஸ்தவத்துக்கு வெளியே இருக்கின்ற ஓநாய்கள் மத்தியிலும் திருமுழுக்குப் பெறாத நல்ல ஆடுகள் இருப்பதையும் நான் அறிவேன். நீங்களும் அறிவீர்கள்”.

நான்காம் நூற்றாண்டில் எடுத்தியம்பிய மேற்கூறிய வார்த்தைகள் 21ம் நூற்றாண்டில் இருக்கின்ற நமக்கும் எவ்வளவு பொருந்தும்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் “திருவழிபாடு” பற்றிய கொள்கைத் திரட்டில் “திருவழிபாடு திருஅவையின் செயல் முழுவதுமே நாடிநிற்கும் சிகரமாக அமைந்துள்ளது. அத்துடன் திருஅவையின் ஆற்றல் அனைத்திற்கும் அது ஓர் ஊற்றாகவும் உள்ளது” (திவ 10) என்று குறிப்பிடுவதைக் காண்கிறோம். திருவழிபாட்டில் கிறிஸ்தவ வாழ்வின் மையமாக விளங்கும் நற்கருணைக் கொண்டாட்டத்தை ஒவ்வொரு நாட்டின் மொழி, பண்பாடு, பழக்கவழக்கங்கள், சடங்கு முறைகள் ஆகியவற்றிற்கு ஏற்பத் தழுவி அமைக்கவும், சில மாற்றங்களைப் புகுத்தவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது (திவ 4,37-40,77).

## புதிய உரோமைத் திருப்பலி நூல்

திருத்தந்தை புனித இரண்டாம் யோண் போல் 10.04.2000 அன்று உரோமைத் திருப்பலி நூலின் திருத்தப்பட்ட மாதிரி படிவத்தை வெளியிட்டு, 2002இல் அவரவர் தாய்மொழியில் அது மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார். அதன் மூலம் கத்தோலிக்க திருஅவையின் இறைமக்கள் அனைவரும் திருவழிபாட்டின் உட்பொருளை நன்கு உணர்ந்து, அவரவர் வாழும் சூழலில் மொழி, பண்பாடு ஆகியவற்றிற்கு ஏற்ப முழு ஈடுபாட்டோடு பங்குபெற்று, மீட்பைப் பெற திருப்பலி நூலைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இவ்வழிகாட்டுதலைக் கருத்தில் கொண்டு, திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் 2008ம் ஆண்டு வெளியிட்ட உரோமைத் திருப்பலி நூலின் திருத்தப்பட்ட மூன்றாம் மாதிரிப் படிவத்தை தமிழாக்கம் செய்ய, தமிழக ஆயர் பேரவை முடிவு செய்தது. இதன்படி இந்தத் தமிழாக்கம் இந்திய இலத்தீன் ஆயர்பேரவையின் ஒப்புதலோடு உரோமைத் திருவழிபாட்டு, அருளடையாளங்களின் ஒழுங்குமுறைப் பேராயத்தின் அனுமதியை மே 16, 2017ல் பெற்றது.

## புதிய உரோமைத் திருப்பலி நூலின் சிறப்பியல்புகளும் தனித்தன்மையும்

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் திருவழிபாட்டுக் கொள்கைத் திரட்டை நடைமுறைப்படுத்தவும், தாய்-மொழிகளின் பயன்பாடு பற்றியும் புனித 2ஆம் யோண் போல் அவர்களால் கொடுக்கப்பட்ட 5வது விதிமுறையான, Liturgiam Authenticam இல் கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் இம்மொழிபெயர்ப்பில் பின்பற்றப்-பட்டுள்ளன.

1. அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் மொழிநடை,



# நான் நானாகவே வந்திருக்கிறேன்

அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து அமதி.

- **இன்று அவரது குரலை நீங்கள் கேட்பீர்களானால், உங்கள் இதயங்களை கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள் (திப. 95).**
- **உங்கள் உடைகளை கிழித்துக்கொள்ளாதீர்கள். மாறாக உங்கள் இதயங்களை கிழித்துக்கொள்ளுங்கள் (யோவேல்)**
- **இது அருளின் காலம், வீணாக்காதீர்கள் (2கொரி)**
- **மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள் (மாற்கு)**

இவ் இறைவார்த்தைகளோடு மீண்டும் ஒரு தவக்காலத்தை இவ்வருடம் ஆரம்பித்து விட்டோம். தவக்காலமென்பது என்னை இறைவனோடும், அயலவரோடும், இயற்கையோடும், ஏன் என்னோடு கூட ஒப்புரவாகி புதிய மனிதராக வாழ அழைப்பு தரும் உன்னத காலம். எனது கடந்த கால வாழ்வை இறைவார்த்தையின் ஒளியில் சீர்தூக்கிப் பார்த்து, என் வாழ்வை சீரமைக்க தகுந்த காலம் இது.

இத்தவக்காலத்தில் நாம் நல்ல ஒப்புரவு அருளடையாளத்தை பெறுவது திருச்சபையின் மரபு ரீதியான ஒரு பழக்கம். ஆனால் இது இன்று பல பங்குகளில் நலிவடைந்து கொண்டு போகின்றதை காண்கின்றோம். சிலருக்கு இவ்வருளடையாளத்தை பெற்றுக் கொண்டால் அதில் ஓர் மகிழ்ச்சி, ஆத்ம திருப்தி. இன்னும் சிலர் கடமைக்காக செய்வது உண்டு. வேறு சிலர் அவர்களுக்கே உரித்தான காரணங்களால் இவ்வருளடையாளத்தைப் பெற ஆர்வம் காட்டுவதில்லை. சில வேளைகளில் இவ்வருளடையாளத்தின் மட்டில் நாம் சரியான கண்ணோட்டம் கொண்டிருப்பதில்லை என்பது மறுக்கமுடியாது. ஏனெனில் இதனைப் பெறுவதில் என்னுடைய பங்களிப்புக்கு முக்கிய இடம் கொடுக்கப்படுகிறது. ஒப்புரவு அருளடையாளம் பெற என்னை அழைத்துச் செல்பவர் இறைவனே. ஏனென்றால் என்னுடைய தனி முயற்சியால் மனம் மாற முடியாது. இறைவனின் துணையுடனேயே அது கைகூடும். ஆரம்பத்திலிலேயே காட்டப்படுகின்ற இறைவார்த்தை பகுதிகள் இந்த உண்மையைத் தான் காட்டுகின்றன. இறைவன் தாமே இதில் முதல் அடியை எடுத்து வைக்கின்றார். அவர் தாமே அழைக்கின்றார். "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." (மத். 11:28)

கடவுளின் அன்பு நிபந்தனையற்றது. எல்லோர்க்கும் நன்மை செய்பவர். நாங்கள் நல்லவர்களாய் இருப்பதனால் கடவுள் நம்மை அன்பு செய்வதில்லை. கடவுள் நம்மை அன்பு செய்வதால் நாம் நல்லவர்களாய் இருக்கிறோம். நான் தூய்மை அடைய, புனிதமடைய, இறைவனின் ஆழம், அகலம் காண அன்பை சுவைக்க ஒப்புரவு அருளடையாளத்தை நாடவேண்டும். நீ மனந்திரும்பிய பின் என்னிடம் வா என்று கூறினாரா இயேசு? இல்லையே. நான் என்னுடைய பாவநிலையோடு, குறை, கறைகளோடு, என்னை இயேசுவிடம் கையளிக்க, அவருடைய அன்பு என் மூட்டு எலும்பு மச்சைகளை ஊடறுத்துச் செல்லும். அவர் என்னை குணப்படுத்துவார். என்னை மறு உருவாக்குவார். இயேசு ஆண்டவர் என்னை நோக்கி,

**உன் நோய்களோடு வா – நான் குணப்படுத்துவேன்**
**உன் காயங்களோடு வா – நான் கட்டுப் போடுவேன்**
**உன் பாவங்களோடு வா – நான் தூய்மைப்படுத்துவேன்**
**உன் வைராக்கியத்தோடு வா – நான் அன்பு செய்வேன்**

என்று சொல்கிறார். ஏனென்றால் இந்த இயேசு நீதிமான்களை அல்ல பாவிகளையே தேடி மீட்க வந்தவர். அதனால் தான் பாவிகளும் வரிதண்டுபவர்களும் இயேசுவை தேடிச் சென்றார்கள் என்று நற்செய்தி சொல்கிறது. இயேசுவின் அன்பு பாவிகளை மாற்றியது. நற்செய்தியில் இயேசுவின் அன்பினால் மனம் மாறியவர்களை காண்கின்றோம்.

வரிவசூலிப்பவரான சக்கேயு, விபச்சாரத்தில் பிடிபட்ட பெண், சமாரியப் பெண், சீமோன் பேதுரு.

ஆகவே நான் ஒப்புரவு அருளடையாளத்தை பெறச் செல்வதென்பது இறைவனின் அன்பை கொண்டாடும் உன்னத நேரம் என்பதை மறக்க கூடாது. என்னுடைய பாவங்களை வெறுமனே மளிகைக் கடை லிஸ்ட் போன்று ஒப்புவிப்பதற்கு மேலாக, இறைவனின் அன்பை சுவைத்து பருகும் கொண்டாட்டமாக காணவேண்டும். இறைவனின் அன்பு என்னை மாற்றும் என்பதை நம்ப வேண்டும்.

**"உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார்" (யோவா. 3:17)**

**இயேசு, இதைக் கேட்டவுடன் அவர்களை நோக்கி, "நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்" என்றார். (மாற். 2:17)**

**"நீங்கள் உலகப் போக்கின்படி தீர்ப்பு அளிக்கிறீர்கள். நான் யாருக்கும் தீர்ப்பு அளிப்பதில்லை." (யோவா. 8:15)**

**"நானே வாயில். என் வழியாக நுழைவோருக்கு ஆபத்து இல்லை. அவர்கள் உள்ளே போவர் வெளியே வருவர் மேய்ச்சல் நிலத்தைக் கண்டுகொள்வர். திருடுவதற்கும் கொல்வதற்கும் அழிப்பதற்குமன்றித் திருடர் வேறெதற்கும் வருவதில்லை. ஆனால் நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன். நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்." (யோவா. 10:9–11)**

**"உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் என்னை நம்புவோர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளனர்." (யோவா. 6:47)**

**"வாழ்வு தருவது தூய ஆவியே ஊனியல்பு ஒன்றுக்கும் உதவாது. நான் கூறிய வார்த்தைகள் வாழ்வுதரும் ஆவியைக் கொடுக்கின்றன." (யோவா. 6:63)**

**"அதுபோலவே மனம் மாறத் தேவையில்லாத் தொண்ணூற்றொன்பது நேர்மையாளர்களைக் குறித்து உண்டாகும் மகிழ்ச்சியை விட, மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்." (லூக். 15:7).**

மேற்கூறிய இறைவார்த்தை பகுதிகள் மிகத் தெளிவாக இறைவன் தாமே எம்மை அழைக்கின்றார். நான் இருந்த நிலையிலேயே அவரிடம் செல்ல அவர் என்னை அன்போடு அரவணைப்பார். புதிய நம்பிக்கையோடு இயேசுவிடம் செல்வோம். அவர் அன்பில் நனைய ஒப்புரவு அருளடையாளத்தை பெறுவோம். இயேசுவின் உயிர்ப்போடு இணைந்து நாமும் உயிர்ப்போம்.

# புதிய தமிழ் திருப்பலி நூல் ஒரு அறிமுகம்



கருத்தாழம், பொருள்வளம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மூல மொழியாகிய இலத்தீனிலிருந்து இப்புதிய மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

2. திருஅவையின் ஒருமைப்பாட்டையும் ஒன்றிப்பையும் உணர்த்தும் விதமாகவும், மூல மொழிக்கு ஒத்திருக்கும் வகையிலும் இம்மொழிபெயர்ப்பு அமைந்துள்ளதால், இதுவரை நாம் பயன்படுத்திய பல வார்த்தைகள், பதிலுரைகள் மற்றும் வாக்கியங்களில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

3. திரு அவையில் திருவழிபாட்டில் விவிலியப் பகுதிகள் பயன்படுத்தப்படும்போது அவை திருவிவிலியத்தின் புதிய உல்காத்தா மொழிபெயர்ப்பிலிருந்து எடுக்கப்பட்டு இப்புதிய மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை உள்ளன்போடு ஏற்றுச் செயற்படுவோம்.

4. நாம் நாள்தோறும் பயன்படுத்தும் அடிப்படைச் செபங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

5. தமிழ்ப் பண்பாட்டு மயமாக்கலுக்கான பன்னிரண்டு அம்சங்களும் இத்திருப்பலி நூலில் இடம் பெற்றுள்ளன.

6. இது தமிழ் நாட்டில் மொழி பெயர்க்கப்பட்டதால் இந்திய மண்ணின் புனிதர்கள் உட்படப் பல அருளாளர்களுக்கான மன்றாட்டுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

7. சில சிறப்பான புனிதர்களுக்கான தொடக்கவுரைகளும் இணைக்கப்பட்டுள்ளன.

8. அன்னை மரியாவுக்கென்று எட்டு நேர்ச்சித் திருப்பலிகள் இடம் பெற்றுள்ளன. திருவழிபாட்டில் இறைமக்கள் முழுமையாகப் பொருளுள்ள விதத்தில் பங்கேற்க, திருவழிபாடு பற்றிய விளக்கத்தை மக்களுக்கு வழங்க இப்புதிய நூல் ஒரு வாய்ப்பாக அமைகிறது. எனவே, அருட்பணியாளர்களும், துறவியரும் திருப்பலி நூல் பற்றிய விளக்கத்தை இறைமக்களுக்கு வழங்கி, திருப்பலியில் அவர்கள் ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் பங்கேற்க உதவவேண்டும். பொதுநிலையினரும் இப்புதிய மொழிபெயர்ப்புத் திருப்பலியை மனமார ஏற்று முழுமையாகப் பங்கேற்க அழைக்கப்படுகிறார்கள்.






P. மாரியட் ஃப்ரெங்கா, தரம் 8T, திருச்சிலுவை கல்லூரி, கொழும்பு – 04.



V. டெபோனா, தரம் 6C, புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம், கொழும்பு – 13.




## லூக்கா 12-24 அதிகாரங்கள்

01. மாதங்களில் ஒன்று அதன் குரல் நூற்றில் ஒன்று போனது தொலைவு தூரம் டுர் டுர் என்று கூவி அழைத்தான் கண்டுபிடித்து மகிழ்ந்தான். அது எது? மாதம் எது?

02. மாப்பிள்ளை டோய் மணியான மகாராஜா டோய் செந்நிற ஆடை அணிபவன் டோய் நாள்தோறும் விருந்துண்பவன் டோய் எச்சில் கையால் கூட காக்கா ஓட்டமாட்டான் டோய். இவன் யாரப்பா?

03. எம்மவர் பெயர் மூன்றெழுத்து எங்கள் உணவு மூன்றெழுத்து எங்கள் உணவை பங்கு போட வந்தவனின் பெயரும் மூன்றெழுத்து வாழ்ந்து கெட்டவன் இவன் யார்? என்ன பெயர்? உணவு என்ன?

04. விளக்கைத் தேடினேன், ஏற்றினேன், பெருக்கியேப் பார்த்தேன். நாடினேன. அதனைக் கண்டுபிடித்து விட்டேன் எதை?

05. பவுசுக்கெட்ட பண்ணாட பணப்பித்து கொண்ட மல்லாட சாத்தான் உள்ளே புகுந்தாட ஐயோ சதி செய்தான் இவன் யார்?

# 3. திருமறைப் பழக்கங்கள்.

### 10. இறைவார்த்தையை இவ்வாறு உள்வாங்கும்.

இறைவார்த்தையை வாசிக்கும்போது, ஆறுதலாகவும் தியானத்தோடும் வாசியும். இவ்வாறு வாசிக்கும்போது சில சொற்கள் அல்லது வாக்கியங்கள் உம் மனதைத் தொடும். அப்போது இச்சொற்களில் அல்லது வாக்கியங்களில் தங்கியிரும். அப்போது தூய ஆவியார் உம்மோடு பேசத் தொடங்குவார். அவர் சொல்வதைக் கவனமாகக் கேளும். இச்சொற்கள், வாக்கியங்கள் வழியாக உம் வாழ்வுக்கு இவர் சில செய்திகளைத் தருகிறார். இவற்றை மறந்துவிடாது குறிப்பேட்டில் பதிவுசெய்யும்.

இயேசுவின் மலைப்பொழிவில் 35 துணுக்குகள் உள்ளன. வாரத்துக்கு ஒரு துணுக்காக இவற்றை நீர் மனப்பாடம் செய்வதால், ஓர் ஆண்டிற்குள் மலைப்பொழிவின் சுருக்கத்தை நீர் தெரிந்துகொள்வீர். பின்னர் மத்தேயு நற்செய்தியில் 5,6,7 என்று மூன்று அதிகாரங்களை வாசிக்கும்போது இப்போதனைகளை நீர் தெளிவாக விளங்கிக் கொள்வீர். மனப்பாடம் செய்யும் இவ்விடயங்கள் உமக்குத் தெரியாமலே உம் வாழ்வில் படிப்படியாக பதியத் தொடங்குவதை நீர் கண்டுகொள்வீர்.

### 11. தூய ஆவியாரின் துணையை இவ்வாறு தேடும்.

இந்நூலில் மூன்று மறைப் பாடங்கள் தூய ஆவியாரின் கொடைகளையும், கனிகளையும், வரங்களையும் பற்றி விளக்குகின்றன. உறுதிப்பூசுதல் பெறுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்னதாகவே நீர் இவை அனைத்தையும் மனப்பாடம் செய்துகொள்ளும். அப்போதுதான் தூய ஆவியார் யார் என்பதை நீர் தெரிந்துகொள்வீர். அத்தோடு எச்செயலையும் தொடங்குமுன் தூய ஆவியாரை அழைத்து அவரிடம் ஆலோசனை கேட்பதையும், அடையாளங்கள் வழியாக அவரின் அனுமதி பெறுவதையும் பழக்கமாக்கிக் கொள்ளும்.

### 12. திருப்பலியில் இவ்வாறு பங்கெடும்.

**திருப்பலி தொடங்கும் முன் நீர் இவற்றைச் செய்யும்**

1. ஆலயத்தினுள் வானகத் தந்தையோடு மட்டும் பேசுவேன், வேறு எவருடனும் பேசமாட்டேன் எனத் தீர்மானம் எடும்.
2. திருப்பலியில் பங்கெடுக்க இம்மறைநூலைத் எடுத்துச் செல்வேன் என்று தீர்மானம் எடும்.
3. திருப்பலியில் ஒவ்வொரு நிகழ்விற்கும், தரப்பட்டுள்ள கருத்தை மனதில் இருத்தி திருப்பலியில் பங்கெடுப்பேன் எனத் தீர்மானம் எடும்.

**திருப்பலயின் போது நீர் இவற்றைச் செய்யும்**


1. உம் பெற்றோர், சகோதரர், சகோதரிகள், நண்பர்களுக்காக மன்றாடும்.
2. வாய் திறந்து பாடல்களிலும், செபங்களிலும் பங்கெடும்.
3. வெட்கப்படாது பதில் சொல்லும்
4. குருவானவர் செபிக்கும்போதும், மறையுரை ஆற்றும் போதும் கவனமாய்க் கேளும்.

**திருப்பலி முடிந்த பின் நீர் இவற்றைச் செய்யும்**

1. மறையுரையைப் பற்றி மற்றைய மாணவர்களோடு கலந்துரையாடும்.
2. இயேசுவைப் பெற்ற அனுபவத்தை அவர்களோடு பகிரும்.
3. உள்வாங்கிய தேவநற்கருணை ஆண்டவரைத் துக்கப்படுத்தாதிருக்க முடிவெடும்.
4. அன்புச் செயல்களால் அவரை மகிழ்விக்க விரும்பும்.
5. பெற்றோர் ஆசிரியர்களுக்கு உதவ தீர்மானம் எடும்.

**தொடரும்**

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)**



# மன்னிப்பாயா?

**அன்புச் சிறுவர், சிறுமிகளே!**

தவக்காலம், மனித மாண்பை உணரவைக்கும், உணர்த்தும் காலம். மனித மாண்பைப் பறைசாற்றும் நற்பண்புகளில் தலைசிறந்தது மன்னிப்பு. நமதாண்டவர் இயேசுவும் கல்வாரியில் கற்றுத் தந்த பாடமும் மன்னிப்புதான். சமாதானத்திற்கு வந்தும், தன்னைத் தாக்கிய எதிரியை மன்னித்து, மன்னிப்பின் மாண்பைக் கற்றுத் தந்த ஓர் அரசரின் விவிலியக் கதையை உங்களுக்குச் சொல்கிறேன்.

ஒரு பேரரசர், தன் நட்பு அரசர்கள் 32 பேர்களோடு படை பலமற்ற, ஒரு பக்திமிகு அரசரை தாக்க வந்தார். தன்னைத் தாக்க வந்த பெரும் சேனையைக் கண்டு பயந்த அந்தப் பக்திமிகு அரசர், சமாதானத் தூது அனுப்பி சரணடைய முன்வந்தார். அவ்வரசரின் சமாதானத் தூதை புறந்தள்ளிவிட்டு, அந்த 33 பேர் கூட்டணி அவரைத் தாக்க முற்பட்டது. இதையறிந்த அந்தப் பக்திமிகு அரசர் தன் நாட்டு பெரியோர்களிடம் ஆலோசனை கேட்டார். அந்நாட்டில் இருந்த ஓர் இறைவாக்கினர், அவ்வரசரிடம் வந்து, இறைவனை நம்பி, நீங்களே முதலில் தாக்குங்கள். மற்றதை இறைவன் பார்த்துக் கொள்வார் என்று தைரியமூட்டினார். இறைவனையும், அந்த இறைவாக்கையும் நம்பி, வெறும் 232 வீரர்களோடும், 7000 சாதாரண மக்களோடும் அந்த 33 அரசர்களின் மாபெரும் சேனையைத் தாக்கத் தொடங்கினார் அந்தப் பக்திமிகு அரசர்!

இறைவனின் ஆசீர் அவர்களோடு இருந்ததால், போரில் வென்றார். தோல்வியுற்று தப்பியோடிய அந்த 33பேர் கூட்டணி மீண்டும் மாபெரும் படையோடு தாக்க வந்தனர். இறைவனின் துணையோடு மீண்டும் சிறு சேனையைக் கொண்டு, அந்த மாபெரும் சேனையை வெற்றி கொண்டார் அந்தப் பக்திமிகு அரசர். சமாதானத்தை மறுத்து, சண்டைக்கு வந்த அந்தப் பேரரசர் தோல்வியுற்று, அந்தப் பக்திமிகு அரசரிடம் உயிர்ப்பிச்சை கேட்டார். தன் சமாதானத் தூதை புறக்கணித்து, தன்னைத் தாக்கிய அந்தப் பேரரசர், தன்னிடமே சமாதானத் தூது விடுவதை ஏற்றுக்கொண்டு அவரை மன்னித்து அவருக்கு உயிர்ப்பிச்சை அளித்ததோடு, அவரை தன் தேரில் ஏற்றி கௌரவித்து, அவரது நாட்டையே அவருக்கு அளித்து மறுவாழ்வு கொடுத்தார் அந்தப் பக்திமிகு அரசர்.

இந்தக் கதையிலிருந்து, சமாதானத்தின் பாதையை விரும்பித் தேட வேண்டும் என்பதையும், சமாதானத்திற்கு வருவோரை ஏளனமாகக் கருதக்கூடாது என்பதையும், நாம் மறுக்கும் சமாதானத்திற்காக நாமும் ஒரு நாள் ஏங்குவோம் என்பதையும், மன்னிக்கும் மனதிருந்தால் மனிதனுக்கு இறைவன் துணை வருவார் என்பதையும், எதிரியை மன்னித்தால் எதிரி கூட மனம் திருந்துவான் என்பதையும் கற்றுக்கொள்வோம்.

சமாதானத்தை மறுதலித்து, பின் சமாதானத்திற்கு ஏங்கிய பேரரசர் யார்? தன்னைத் தாக்க வந்த எதிரியையே மன்னித்து, மன்னிப்பின் மாண்பை உணர்த்திய பக்திமிகு அரசர் யார்? என்று அறிய விருப்பமா? அப்படியானால் உங்கள் திருவிவலியத்தில் 1 அரசர்கள் 20ம் அதிகாரத்தைப் படித்துப் பாருங்கள்.

# பொது அறிவு

- பிரேசில் 2,500 விமான நிலையங்கள் உள்ளன.
- உருகுவை நாட்டின் பெயருக்கு “பறவைகளின் ஆறு” என்று பொருள்படும்.
- சொலமன் தீவு ஆயிரம் தீவுகளை கொண்ட ஒரு தீவு நாடாகும்.
- திரையரங்கு எதுவுமே இல்லாத நாடு சவூதி அரேபியா நாடாகும்.
- நெருப்பும் பனியும் நிறைந்த நாடு என்றால் அது சிலிநாடு மட்டுமேயாகும்.
- பிரேசில் 38 ஆழ்கடல் துறைமுகங்களைக் கொண்டுள்ளது.
- தொழுகை நேரங்களில் இறைவனுக்குப் பிறகுதான் வியாபாரம் என்பதை கடைப்பிடிக்கும் ஒரே இஸ்லாம் நாடாக சவூதி அரேபியா விளங்குகின்றது.
- 63 தீவுகளை உடையதுமான சிங்கப்பூர் மலேசியாவில் ஜோகூர் மாநிலத்துடன் இரு சாலைகளால் இணைக்கப்பட்டுள்ளது.
- சீனா நாகரீகத்தின் மஞ்சள் ஆறு தனியிடம் பெறுகிறது. ஹாவாங் ஹே என்ற ஆறு தீபெத் வழியாக பாய்கிறது. சீனாவின் பெருஞ்சுவர் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. உலகத்திலே மிக நீளமான சுவராக இருக்கின்றது.

L. ஜெயசீலி லோறன்ஸ், கொழும்பு – 12.

# இளமைக் காலம்






# நன்மை செய்திட

மனித வாழ்வில் மிக முக்கியமான காலம்தான் இளமைக் காலம். அது அதிகமாகச் செயலாற்றக் கூடிய காலம் மட்டுமல்ல, மிக அதிகமாக எதிர்பார்ப்பு உடைய காலமும் ஆகும். மனித வாழ்வின் வசந்த காலம் அது என்று சொல்லலாம். இளைஞருக்கு உயர்வளிப்பது அவர்களது வலிமை (நீ.மொ. 20:29). ஆக்கமும் ஊக்கமும், விறுவிறுப்பும் துடிதுடிப்பும் இளமையின் தன்மையாகும்.

ஓர் இளைஞர் நல்ல கிறிஸ்தவக் குடும்பத்தைச் சேர்ந்தவர். நல்லொழுக்கம் உடையவராக இருந்தவர். படிப்பு முடிந்ததும் நல்ல வேலை கிடைத்தது. கை நிறைய சம்பளம். நண்பர்கள் சேர்ந்தனர். அவர்களோடு மது, புகை என்று பல கெட்ட பழக்கங்களும் சேர்ந்தன. மன அமைதி போயிற்று, வாழ்க்கையில் சந்தோஷம் போயிற்று. நிம்மதி இல்லாமற் போயிற்று. வாழ்க்கை வெறுமையாயிற்று. வேதனையும் எதிர்நோக்கற்ற நிலையும் அவரை வேட்டையாடின. இதைப் போன்ற எத்தனையோ இளைஞர்களை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. மனித வாழ்வைக் குறித்து சரியான கருத்து உருவாக வேண்டிய காலம்தான் இளமைக்காலம். இறைவார்த்தைக் கேற்ப வாழும் போதுதான் இது சாத்தியமாகின்றது. இளைஞர் தம் நடத்தையை மாசற்றதாய் காத்துக் கொள்வது எவ்வாறு? உம் வாக்கைக் கடைப்பிடிப்பதால் அன்றோ (திபா. 119:9).

இஸ்ரயேல் மக்களுள் இளைஞருக்கு சிறப்பான இடம், மதிப்பு இருந்தது. மோசேயின் அறிவுரையின்படி இளைஞர்கள் ஆண்டவருக்கு எரிபலிகளையும் நல்லுறவுப் பலிகளையும் செலுத்தினர். மோசே ஆண்டவரின் வாக்குகள் அனைத்தையும் எழுதிவைத்தார். அதிகாலையில் அவர் எழுந்து மலையடிவாரத்தில் ஓர் பலி பீடத்தையும், இஸ்ரயேலின் பன்னிரண்டு குலங்களுக்காகப் பன்னிரண்டு தூண்களையும் எழுப்பினார். அவர் இஸ்ரயேல் மக்களின் இளைஞர்களை அனுப்பிவைக்க, அவர்களும் ஆண்டவருக்கு எரிபலிகள் செலுத்தினர். மாடுகளை நல்லுறவுப் பலிகளாகவும் ஆண்டவருக்குப் பலியிட்டனர் என்று கூறுகிறது. (வி.ப. 24:4-5).

வயதுவரும் வரை பெற்றோரின் பாதுகாப்பில் இருந்தவர்கள் அதிலிருந்து மெல்ல வெளியேறி நண்பர்களின் செல்வாக்கில் நாட்டம் கொள்கிறார்கள். இளமைக் காலத்தில் பெற்றோரோ உறவினர்களோ சொல்வதல்ல, நண்பர்கள் சொ-ல்வது தான் சரி என்று நினைக்கும் காலம் அது. அதனால் இளைஞர்கள் வழிதவறும் அபாயம் உண்டு. அதே நேரத்தில் நல்ல நண்பர்கள் சீரான வழியில் செல்லக் காரணம் ஆவர் என்பதால் சமூகசேவை, நற்பணிகள் செய்யும் காலமாகவும் இளமைக் காலம் அமைய வேண்டும். சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று, எத்துணை இனியது (திபா. 133:1).

இறை அருளைப் பெற்ற, தூய்மையில் ஒழுகும் இளைஞர்கள்தான் உலகிற்கு எதிர்நோக்காக இருப்பார்கள். காயினும், ஆபேலும் முதல் பெற்றோரின் பிள்ளைகள். இருந்தும் அவர்களுடைய மனநிலையில் எவ்வளவோ வேறுபாடுகள் இருந்தன. அதனால் கடவுள் காயினின் பலிகளைக் கனிவுடன் கண்ணோக்கவில்லை. ஆபேல் களங்கமற்றவனாக இருந்ததால் அவனுடைய பலிகளைக் கடவுள் கனிவுடன் கண்ணோக்கினார் (தொ.நூ. 4). இறைவனுக்கு ஏற்புடையவர்களாக இருக்க எத்தனையோ வழிகளை ஆண்டவர் காண்பிக்கின்றார். அதன்படி ஒழுகுவதுதான் நல்ல இளைஞர்களின் கடமை. குல முதுவரான ஈசாக்கின் குடும்பத்தை ஆண்டவர் ஆசீர்வதித்தார். அவருக்கு ஏசா, யாக்கோபு என்ற இரு பிள்ளைகள் பிறந்தனர். ஒரு நாள் யாக்கோபு சுவையான கூழ் சமைத்துக் கொண்டிருந்தபொழுது, ஏசா களைத்துப்போய் திறந்த வெளியிலிருந்து வந்தான். அவன் யாக்கோபிடம், நான் களைப்பாய் இருக்கிறேன் இந்த செந்திறச் சுவையான கூழில் எனக்குக் கொஞ்ச் கொடு என்றான். யாக்கோபு அவனை நோக்கி, உனது தலைமகனுரிமையை இப்போதே எனக்கு விற்றுவிடு என்றான். ஏசா ஆணையிட்டுத் தலைமகனுரிமையை யாக்கோபுக்கு விற்றுவிட்டான். யாக்கோபு, ஏசாவுக்குக் கொஞ்சம் அப்பமும், சுவையான பயிற்றங் கூழும் கொடுக்க, அவனும் தன் வழியே சென்றான் (தொ.நூ. 25: 29-34).

அண்ணனை ஏமாற்றிய தம்பியின் வாழ்விலும், தலைமகனுரிமையைச் சாதாரணமாகக் கருதி கைவிட்ட அண்ணனின் வாழ்விலும் எத்தனையோ துன்பங்கள் தோன்றின. முட்டாள் தனமான செயல். மனித உயர் கூறுகள் உருவாக வேண்டிய காலம் தான் இளமைக் காலம். வாழ்க்கையில் துன்பங்கள் தோன்றினாலும் உயர்கூறுகளை உறுதியாகப் பற்றிக் கொள்பவர்கள்தான் வெற்றி பெறுவர். இளமையில் வழிதவறுபவர்கள் பின்னர் ஒருபோதும் சீரிய பாதையில் செல்ல இயலாமல் போகும் அபாயமும் உண்டு.

சில நேரங்களில் முதியோர் இளையோரைக் குறைகூறுவதுண்டு. இளைஞர்களால் தொல்லைதான் அதிகம், அவர்கள் பயனற்றவர்களாக இருக்கிறார்கள் என்று நினைப்பவர்களும் உள்ளனர். முதியோர் தங்களைப் புரிந்துகொள்ள வேண்டும், அங்கீகாரம் அளிக்கவேண்டும் என்று இளைஞயோர் நினைக்கின்றனர். முதியோர் தாங்களும் ஒரு காலத்தில் இளைஞராக இருந்தவர்கள் தான் என்பதையும், இளைஞர்கள் தங்களுக்கும் முதுமை உண்டு என்பதையும் மறக்கக் கூடாது. தங்களுடைய வாழ்க்கை குற்ற மற்றதாக, தூய்மையானதாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் இளைஞயோருக்கு இருக்க வேண்டும். இளைஞரும் கட்டுப்பாடு உள்ளவராய் இருக்க அறிவுரை கூறு (தீத. 2:6).

தாங்கள் இல்லாமல் கடந்த காலம் செவ்வனே சென்றது என்று இளைஞர்களும், தாங்கள் இல்லாமல் எதிர்காலம் செவ்வனே செல்லும் என்று முதியோரும் உணர்ந்துகொள்ள வேண்டும் என்ற 23ஆம் ஜோன் திருத்தந்தையின் வார்த்தைகளை நினைவில் கொள்ள வேண்டும்.

சகோதரர்கள் இஸ்ரயேலரின் வணிகக் குழுவிற்கு விற்ற குலமுதுவரான யோசேப்பை, எகிப்து பார்வோனின் படைத்தலைவரான போத்திபார் விலைக்கு வாங்கினான். கடவுள் அவரோடு இருப்பதை அவன் உணர்ந்துகொண்டான். அவர் தொட்ட காரியமனை-த்தையும் ஆண்டவர் துலங்கச் செய்வதையும் போத்திபார் கண்டான். எனவே அவனுடைய தயை யோசேப்புக்குக் கிடைத்தது. தன் வீட்டையும் தனக்கிருந்த அனைத்தையும் அவர் பொறுப்பில் விட்டதிலிருந்து எகிப்தியனின் வீட்டுக்கு யோசேப்பின் பொருட்டு ஆண்டவர் ஆசி வழங்கினார் (தொ.நூ. 39:4-5).

பாவத்திற்கு இணங்க மறுத்த யோசேப்பு பின்வருமாறு கூறினார். இந்த வீட்டில் என்னைவிட அதிகாரம் பெற்றவர் ஒருவருமில்லை. இந்த மாபெரும் தீச்செயலைச் செய்து, கடவுளுக்கு எதிராகப் பாவம் வெய்யலாமா? (தொ.நூ. 39:9). பாவம் செய்ய மறுத்த யோசேப்பு சிறையில் அடைக்கப்பட்டார். எத்தனையோ இன்னல்களைத் தாங்கிக் கொள்ள வேண்டியதாயிற்று. ஆனால் அவர் ஆண்டவரிடம் மிகுந்த பற்றுறுதி கொண்டிருந்தார். அவர் தமது சகோதரர்களிடம் பின்வருமாறு கூறுகின்றார். நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள். ஆனால் கடவுள் அதை இன்று நடப்பது போல், திறளான மக்களை உயிரோடு காக்கும் பொருட்டு நன்மையாக மாற்றிவிட்டார் (தொ.நூ. 50:20).

இன்று இளையோருக்கு எவ்வளவோ சோதனைகள் உள்ளன. கணனி, இன்டெர்நெட், தொலைபேசி ஆகிய அனைத்தையும் கெட்ட காரியங்களுக்காகப் பயன்படுத்தும் காலம் இது. போதைப் பொருட்கள், சமூக எதிரிகளின் வலையில் சிக்குதல், திருமணத்திற்கு முன்பே தவறான உறவுகள் என்று எத்தனையோ தீமைகள் இன்று பெருகி வருகின்றன. இந்த வேளையில் குலமுதுவரான யோசேப்புத்தாக் நமக்கு எடுத்துக்காட்டு. அவரைப்போல் இறைவனிடம் நம்பிக்கை வைக்கும்போது வெற்றி நிச்சயம் (தொ.நூ. 39:5). டிஜிட்டல் உலகை நற்செய்தி மயமாக்க வேண்டும் என்ற திருத்தந்தை பதினாறாம் ஆசீர்வாதப்பரின் இக்கருத்து இவ்வேளையில் முக்கியமானது.

பெந்தக்கோஸ்து நாளில் தூய ஆவியாரால் அருட்பொழிவு செய்யப்பெற்ற திருத்தூதர்கள் ஆண்டவர் இயேசுவை தைரிமாகப் பறைசாற்றினர். முதல் கிறிஸ்தவ-ர்களுள் ஏராளமான இளைஞர்கள் கிறிஸ்துவுக்காகத் தங்கள் உயிரைக் கொடுத்து மறைசாட்சிகளாயினர். இளைஞரே, நீங்கள் வலிமை வாய்ந்தவர்கள். கடவுளின் வார்த்தை உங்களுள் நிலைத்திருக்கிறது. தீயோனை நீங்கள் வென்றுள்ளீர்கள். உலகின்மீதும் அதிலுள்ளவை மீதும் அன்பு செலுத்தாதீர்கள் (1யோவா. 2:14-15). நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட அருளை வீணாக்க வேண்டாம் (2கொரி. 6:1). நாடெங்கும் நன்மை செய்து வாழ்ந்தவர் இளைஞரான நம் ஆண்டவர். அவரே நமக்கு மேல்வரிச் சட்டமாக விளங்குகின்றார். இயேசு கிறிஸ்துதாம் எல்லா இளைஞர்களுக்கும் ரோல் மாடல்.

வாசிப்பு பழக்கம் என்பது



அருமையான ருசி
அழகான பசி
ஒருமுறை
சுவைக்கப்
பழகிவிட்டால்
அது தொடர்ந்து
வரும்



வாசனை என்பது
சில நிமிடம் வரை

வறுமை என்பது
சில காலம் வரை





அழகு என்பது வயது
உள்ள வரை


நல்ல உறவு என்பது
உயிர் உள்ள வரை





வாழ்கையில்
உயரும் வரை
காதைப் பொத்திக்
கொள்

உயர்ந்த பிறகு
வாயைப்
பொத்திக்
கொள்






# மனம் வருந்தும் காலமே தவக்காலம், சோகத்தின் காலம் அல்ல



கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு முன் வரும் தவக்காலத்தின் மையக் கருத்து குறித்து தன் சிந்தனைகளை இஞ்ஞாயிறு மூவேளை செப உரையில் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "சோதனைகள்", "மனம் திரும்புதல்", மற்றும் "நற்செய்தி" எனும் மூன்று முக்கியக் கருத்துக்கள் குறித்து எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டார்.

மனம்திரும்புதல் என்ற ஒன்று தேவைப்படாத இயேசு கிறிஸ்து கூட, மனிதன் என்ற வகையில், இறை விருப்பத்திற்கு கீழ்ப்படியவும், நாமும் சோதனைகளை வெற்றிகொள்ளும் அருளை நமக்குத் தரவும், அவர் சோதனைகளைக் கடந்து செல்ல வேண்டியதாகியது,

தவக்காலம் என்பது, ஓர் ஆன்மீக பயிற்சி களத்தையும், ஆன்மீகப்போராட்டத்தையும் உள்ளடக்கிய காலம், ஏனெனில் நம் செபங்களின் வழியாக தீமைகளை நேருக்கு நேர் எதிர்கொள்ளவும், இறை உதவியுடன் தீமைகளை நம் தினசரி வாழ்வில் வெற்றி கொள்ளவும், உதவும் காலம் இது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எங்கெங்கு வன்முறை, பிறரை ஒதுக்கி வைத்தல், அநீதி, போர் ஆகியவை உள்ளனவோ அங்கெல்லாம் தீமைகள் நம்மை சுற்றி செயலாற்றுகின்றன என்பதை அறிவோம்.

பாலைவனத்தில் சாத்தானால், சோதிக்கப்பட்ட இயேசு, அதைத் தொடர்ந்து நற்செய்தியை எடுத்துரைக்கச் செல்கிறார், இந்த நற்செய்தி, மனிதனில் மனமாற்றத்தையும், விசுவாசத்தையும் எதிர்பார்க்கிறது, என்றார்.

மனம் திரும்புங்கள், நற்செய்தியை நம்புங்கள் என்ற அழைப்பு, நம் வாழ்விலும் தினசரி மனமாற்றத்திற்கு அழைப்பு விடுக்கிறது, இத்தகைய மனமாற்றத்திற்காக தினசரி நாம் செபிக்க வேண்டும் என எதிர்பார்க்கும் திரு அவை, நம்முடைய தவறான மதிப்பீடுகளையும், சுயநலப் போக்குகளையும் விட்டு வெளியே வரவேண்டும் என எதிர்பார்க்கின்றது என்றார்.

நம் பாவங்களுக்காக மனம் வருந்தும் காலம் தவக்காலம், எனினும், அது சோகத்தின் காலம் அல்ல என்பதையும் வலியுறுத்திய திருத்தந்தை, மகிழ்ச்சியை, செல்வத்திலும், அதிகாரத்திலும், இவ்வுலக சுகங்களிலும் தேடிவரும் நமக்கு, உண்மையான மகிழ்ச்சியை இறைவன் ஒருவரே வழங்க முடியும் என மேலும் கூறினார்.

# ஏன் என்ற கேள்விக்கு இறைவனால் மட்டுமே பதில் சொல்ல முடியும்



நம் வாழ்வில் ஏன்? என்ற கேள்வி பலமுறை எழுகின்றது, இறைவன் ஒருவரே அக்கேள்விக்குப் பதில் தரவல்லவர், நம்மால் அவரை நோக்கி, அவர் சொல்வதைக் கேட்டு, கண்ணீர் சிந்த மட்டுமே இயலும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ருமேனியா நாட்டுச் சிறாரிடம் கூறினார்.

ருமேனியாவில் சிறாரின் கல்விக்கு உதவும் தன்னார்வ அமைப்பு ஒன்று அழைத்து வந்திருந்த, பெற்றோரை இழந்த சிறாரை, கடந்த சனவரி 4ம் தேதி வத்திக்கானில் சந்தித்த திருத்தந்தை, அச்சிறார் கேட்ட ஆறு கேள்விகளுக்கு வழங்கிய பதில்கள், வெளியிடப்பட்டுள்ளன.

இச்சிறார் கேட்ட கேள்விகளில், ஏன்? இவை ஏன்? என்பதே அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளன என்றுரைத்துள்ள திருத்தந்தை, சிறார் ஏன் துன்புறுகின்றனர் என்ற கேள்விக்கு, இறைவன் ஒருவரால் மட்டுமே பதில் சொல்ல முடியும் என்று கூறினார். மேலும், இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் இஸ்காரியோத், விண்ணகத்திற்குச் செல்லவில்லை என்று நம்மால் சொல்ல முடியுமா? என்றும் திருத்தந்தை சிறாரிடம் கேள்வி எழுப்பினார்.

இச்சந்திப்புக்கு நன்றி கூறியத் திருத்தந்தை, ருமேனியாவிலும், உலகின் ஏனைய பகுதிகளிலும், நோய்கள், போர்கள், அடிமைமுறை போன்றவற்றால் துன்புறும் அனைத்துச் சிறாரையும் இறைவனிடமும், அன்னை மரியிடமும் அர்ப்பணிப்போம் என்றும் கூறினார்.

வாழ்வு ஏன் இவ்வளவு கடினமாக இருக்கின்றது?, நண்பர்கள் மத்தியில் ஏன் அடிக்கடி சண்டைபோட்டுக்கொள்கின்றோம்? அருள்பணியாளர்கள் ஆலயத்திற்குச் செல்லுங்கள் எனக் கூறுகின்றார்கள், ஆனால் ஆலயத்திலிருந்து வெளியே வந்தபின்னர் பாவம் செய்கின்றோம், தவறுகிறோம், எனவே ஏன் ஆலயத்திற்குச் செல்ல வேண்டும்? என்று முதலில் கேட்டனர் சிறார்.

மனிதரின், தான் என்ற முனேப்பே இதற்கு காரணம் என்று பதில் கூறியத் திருத்தந்தை, ஆலயத்திற்குச் செல்வது முக்கியம், அங்கு இறைவனை நோக்குவது மட்டுமல்ல, இறைவன் நம்மை நோக்குவதற்கும் கையளிக்க வேண்டும் என்றார். இச்சந்திப்பில் தனது தாயால் கைவிடப்பட்ட ஒரு சிறுமியை அணைத்து, நான் உனக்காக கண்ணீர் சிந்துகிறேன் என்று கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

# சோம்பல், வாழ்வு மீதுள்ள சுவையை இழக்கச் செய்யும்



அரிச்சா நகர் தெய்வீகப் போதகர் தியான இல்லத்தின் தியானத்தில் திருத்தந்தையும் பங்குபற்றினார். அங்கு சோம்பல், தாகத்திற்கு எதிரானது, இது வாழ்வு மீதுள்ள சுவையை இழக்கச் செய்யும் என்று, தியானச் சிந்தனைகளை வழங்கினார், அருள்பணி, José Tolentino de Mendonça.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கும், திருப்பீடத் தலைமையக அதிகாரிகளுக்கும் தியான உரைகளை ஆற்றிவரும் அருள்பணி, Mendonça அவர்கள், இச்செவ்வாய் காலையில் வழங்கிய முதல் தியான உரையில், சோம்பல், சிலவேளைகளில் நம்மைத் தாக்குகின்றது மற்றும், நோயுற்றவர்களாக ஆக்குகின்றது என்றும், சோம்பல் அடிப்படையில், தாகத்திற்கு எதிரானது என்றும் கூறினார்.

நாம் தாகத்தை விட்டுவிடும்போது, நாம் இறக்கத் தொடங்குகின்றோம் என்றும், நாம் ஆசையை விட்டுவிடும்போது, சந்திப்புகள், உரையாடல்கள், பரிமாற்றங்கள், தன்னையே விட்டுவிடுதல், திட்டங்கள், வேலை, செபம் ஆகியவற்றில் சுவையைக் கண்டுகொள்கிறோம் என்றும், தியான உரையில் கூறினார், அருள்பணி, Mendonça.

பிறர் காரியங்களில் தலையிடுகின்ற குணம் குறையும்போது, நமது திறந்தமனம் பரந்து விரிகின்றது என்றும் உரைத்த அருள்பணி, Mendonça அவர்கள், தளர்ச்சியடைந்த நிலைகள், மருந்துகளால் மட்டும் குணமடைவதில்லை என்றும் உரைத்தார்.

யோனா, யாக்கோபு, பணக்கார இளைஞர் ஆகிய விவிலிய மனிதர்கள் பற்றியும் மேற்கோள்காட்டி விளக்கி, இயேசு போன்று அன்பு செலுத்துமாறும், இயேசுவின் பாடுகளில் ஒன்றித்திருக்குமாறும் கூறினார்.

உரோம் நகருக்கு 16 மைல் தூரத்தில் அமைந்துள்ள, அரிச்சா நகர் தெய்வீகப் போதகர் தியான இல்லத்தில், திருத்தந்தைக்கும், திருப்பீடத் தலைமையக அதிகாரிகளுக்கும் ஆண்டு தியானத்தை வழிநடத்தி வருகிறார் அருள்பணி Mendonça.

# அருளாளரான திருத்தந்தை 6ம் போல், புனிதராக உயர்த்தப்படுவார்



புனித அன்னை தெரேசாவுடன் அருளாளரான திருத்தந்தை 6ம் போல், 2018ம் ஆண்டில், புனிதராக உயர்த்தப்படுவார் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உரோம் மறைமாவட்ட அருள்பணியாளர்களிடம் கூறினார்.

தன் ஆண்டு தியானத்தைத் தொடங்குவதற்கு முன்னதாக, உரோம் மறைமாவட்ட அருள்பணியாளர்களை, புனித ஜோன் இலாத்தரன் பசிலிக்கா பேராலயத்தில் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனிதர்களான 23ம் ஜோன், மற்றும் 2ம் ஜோன் போல் ஆகியோரைத் தொடர்ந்து, அருளாளர் 6ம் போல் அவர்களும் புனிதராக உயர்த்தப்படுவார் என்று கூறினார்.

உரோம் நகரின் ஆயர்களாகப் பணியாற்றிய அண்மைய திருத்தந்தையர்களில் பலர் புனிதர்களாக, அருளாளர்களாக, அல்லது வணக்கத்துக்குரியவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்டியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த வரிசையில், முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களும், தானும், "காத்திருப்போர் பட்டியலில்" இருப்பதாகவும், தங்களுக்காகச் செபிக்கும்படியும், நகைச்சுவை உணர்வோடு கேட்டுக்கொண்டார்.

கத்தோலிக்கத் திருஅவையின் தலைவர்களாக பணியாற்றியவர்களில், 80க்கும் மேற்பட்ட திருத்தந்தையர், புனிதர்களாக உயர்த்தப்பட்டுள்ளனர். அண்மையத் திருத்தந்தையர்களில், அருளாளரான 9ம் பயஸ் புனிதராகவும், வணக்கத்திற்குரிய 12ம் பயஸ் மற்றும் முதலாம் ஜோன் போல் ஆகியோர் அருளாளராகவும் உயர்த்தப்படுவதற்கு முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.




தொகுப்பு : ஓய்வு பெற்ற பேராயர்
அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை
கொழும்பு உயர் மறைமாவட்டம்



கத்தோலிக்க குடும்ப மறைக்கல்வி
Catholic Family Catechism

**77. உலக முடிவில் நமக்கு தீர்ப்புக்கூற இயேசுக்கிறிஸ்து வருவார் என்பதன் பொருள் என்ன?**

இறுதிநாளில் இயேசு, இவ்வுலகில் வாழ்ந்த, வாழுகின்ற, இறந்த, அனைவரையும் தீர்ப்பிட மீண்டும் வருவார் என்பதே பொருள்.

உலகம் எப்போது முடிவுறும் என்பது, இறைவனுக்கு மட்டுமே தெரியும். அந்த நாளில், அனைவரும் இறப்பிலிருந்து உயிர்த்து இயேசுவின் முன்தோன்றுவோம். ஒரு நொடிப் பொழுதில் நாம் செய்த நன்மையான, தீமையான செயல்கள் அனைத்தும் பகிரங்கமாக்கப்படும். நன்மை செய்தவர்கள் விண்ணக வாழ்வை பரிசாகப் பெற, தீமை செய்தோர் புறக்கணிக்கப்படுவார்கள்.

"இதோ, ஒரு மறை பொருளை உங்களுக்குச் சொல்கிறேன் நாம் யாவரும் சாகமாட்டோம் ஆனால் அனைவரும் மாற்றுரு பெறுவோம். ஒரு நொடிப்பொழுதில், கண் இமைக்கும் நேரத்தில், இறுதி எக்காளம் முழங்கும்போது இது நிகழும். எக்காளம் முழங்கும்போது இறந்தோர் அழிவற்றவர்களாய் உயிருடன் எழுப்பப்படுவர் நாமும் மாற்றுரு பெறுவோம். ஏனெனில், அழிவுக்குரிய இவ்வுடல் அழியாமையை அணிந்ததாக வேண்டும். சாவுக்குரிய இவ்வுடல் சாகாமையை அணிந்தாக வேண்டும்." (1கொரி. 15:51-53)

**சுருக்கம்**

நமது மூவொரு கடவுள் மீட்புக்கான பாதையை மக்களுக்கு காண்பித்தார். முதன்முதலில் மோயீசன் மூலமாகவும், பின்பு காலத்துக்குக் காலம் மற்றைய இறைவாக்கினர் மூலமாகவும் இதனைச் செய்தார். இறுதியாக மூவொரு கடவுளின் இரண்டாம் ஆளாகிய இறைமகன், புனித கன்னி மரியாள் வயிற்றில் மனித உரு எடுத்து இவ்வுலகிற்கு வந்தார். இவ்வாறு, பரிசுத்த ஆவியின் வல்லமையால் மனித உடல் எடுத்த அவரிடம் நம்மைப் போன்ற உடலும், ஆன்மாவும் கொண்டவராயிருந்தார். அவரிடம் மனித இயல்பும், தெய்வீக இயல்பும் இருந்தபோதும், அவர் ஒரே ஆளாக இருந்தார். இந்த இயேசு மிக தெளிவாக மீட்பின் பாதையை நமக்கு காட்டினார். இறைவனாக துன்பங்களை அனுபவித்தார்.

அவர் துன்பப்பட்டு, இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். அவரது ஆன்மா பாதாளத்துக்கு இறங்கி, மூன்றாம் நாள் தமது உடலுக்குப் புத்துயிர் கொடுத்து இறப்பிலிருந்து உயிர்த்தார். நாற்பது நாட்களுக்குப் பின்பு உடலோடும், ஆன்மாவோடும் பரலோகம் எழுந்தருளினார். இறுதி நாளில் உலகம் முடிவுற்றதும், வாழ்வோரையும், இறந்தோரையும் தீர்ப்பிட, உடலோடும், ஆன்மாவோடும் மீண்டும் வருவார்.

அன்றைய நாளில் ஒவ்வொருவரும் தீர்ப்புப் பெறுவதற்காக அவர்முன் தோன்றுவார்கள். நன்மை செய்தோர், விண்ணகத்தில் நிரந்தர வாழ்வை சுகீகரித்துக் கொள்ள, தீமை செய்தோர் நித்தியத்துக்கும் நரகத்துக்கு தள்ளப்படுவார்கள்.

## 5. பரிசுத்த ஆவியானவர்

**முன்னுரை**

பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் மீட்புப் பணியை உலக முடிவுவரை புவியில் தொடர்ந்து ஆற்றுவதற்காக முதன் முதலாக அனுப்பப்பட்டார். ஆயினும் தூய ஆவியானவர் ஆதிமுதல் தொடங்கி காலத்திற்கு காலம் செயலாற்றியுள்ளார் என்பது உண்மை. ஆனால் ஆண்டவரின் பரலோக ஆரோகணத்தின் பின் பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளின் மீது ஒரு கொடையாக விசேடவிதமாக அனுப்பப்பட்டார்.

இது பெந்தக்கோஸ்து விழா அன்று முதன்முதலாக வெளிப்படுத்தப்பட்டது. இந்நாளின்போது, புனித கன்னி மரியாளும், அப்போஸ்தலர்களும் செபத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை, அவர்கள் மீது பரிசுத்த ஆவி இறங்கினார். அவர்கள் செபிக்கும் வேளையில் "வானத்திலிருந்து பலமான காற்றைப் போன்ற இரைச்சலுடன், அக்கினி நாக்கு வடிவில் அவர்கள் ஒவ்வொருவர் தலைமேலும் வந்து தங்கினார். சீடர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டு, வேற்று மொழிகளில் பேசத்தொடங்கினர். பரிசுத்த ஆவியானவர் பலமொழிகளில் பேசும் வரத்தை அவர்களுக்கு அளித்தார்.

திடீரென்று கொடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி, அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது. மேலும் நெருப்புப்போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள். அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத்தொடங்கினார்கள். (தி.ப 2:2-4)

இந்த வேளையில் அவர்கள் வேற்று மொழியில் பேசியதை, அங்கு கூடியிருந்த அனைவரும் தத்தம் மொழிகளில் விளங்கிக்கொண்டனர். இவ்வாறு பொதுவான தாராளமனம் படைத்த கத்தோலிக்க திருச்சபை உருவானது தெளிவாகிறது. இதன் மூலம் கிறிஸ்தவம் எவ்வாறு சாதி, மத, நிறம் போன்ற தடைகளுக்கு அப்பாற்பட்டது என்பது தெளிவாகிறது. இந்தப் பொதுவான படிப்பினை முழு மனுக்குலத்திற்கும் உரித்தானது. இப்படிப்பினையின் படி கிறிஸ்தவ சமயம், ஒரு தனிப்பட்ட இனத்திற்கோ, சாதியினருக்கோ உரித்தானதல்ல என்ற உண்மை வெளிப்படுத்தப்படுகின்றது.

பரிசுத்த ஆவியின் வல்லமையானது எல்லா மனிதர்களையும் ஒன்று சேர்க்கும் ஒரு ஆன்ம சக்தி. தந்தையாகிய இறைவனதும், அவரது மகனின்றும் புறப்படும் ஒரு நிலையான அன்பு. எனவே தூய ஆவியானவர் எம்மீது இறங்கும் போது, கடவுளின் அன்புக் கொடையே எம்மீது இறங்குகின்றது. நாங்கள் தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளும் போது இறைவனின் அன்பு எம் இதயங்களை ஆட்கொள்கின்றது. ஆதலால் எமது சிந்தனை, வார்த்தை, செயற்பாடு அனைத்தும் அந்த தெய்வீக அன்பினால் முழுமையாக்கப்படுகிறது. எமது மொழி அனைத்துலகும் விளங்கக்கூடிய அன்பு மொழியாக இருக்க வேண்டும்.

**78. பரிசுத்த ஆவியானவர் யார்?**

பரிசுத்த ஆவியானவர் தூய திருத்துவத்தின் மூன்றாவது ஆள்.

பரிசுத்த ஆவியானவர் கடவுள். பிதாவாகிய கடவுளோடும், மகனோடும் ஒன்றாக இருக்கின்றார். அவர் முடிவில்லாதவர். தொடக்கத்திலிருந்தே நிலைத்திருந்தார். அவர் எப்போதும் இருப்பார். அவர் எக்காலத்திற்கும் ஆராதித்து, வணங்கப்பட்டும், போற்றப்பட்டும் வருகிறார்.

நாம் பரிசுத்த ஆவியினால் தூய்மைப்படுத்தப்படுகின்றோம். ஆதியில் இறைவாக்கினர் வழியாக எம்மோடு பேசியுள்ளார். கிறிஸ்து இயேசுவின் திருமுழுக்கின் போது புறா வடிவில் அவர் மீது தோன்றினார்.

இன்று திருச்சபையில் பரிசுத்த ஆவி செயலாற்றுகின்றார்.

என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார் நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார். (யோவா 14:26)

**பாடங்கள் தொடரும்...**

## 03 இயேசுவின் சிலுவை...

குடும்பநலன் மற்றும் சமூகநலன் என்ற தொலைநோக்குப் பார்வை இருக்கவேண்டும். இயேசு தன் தனிப்பட்ட குற்றங்களுக்காக சிலுவையை ஏற்கவில்லை. இதேபோல் நம்முடைய குற்றங்களுக்காக நாம் "சிலுவை" சுமப்பது கிறிஸ்தவதன்மையாகா. மாறாக, இறைசித்தத்தையே ஏற்று நம்முடைய கிறிஸ்தவ விசுவாசத்தை வாழ்வதில் சந்திக்கின்ற சவால்கள் என்ற சிலுவைகளே நமக்கு பெருமை தருகின்றன. இப்படிப்பட்ட சிலுவைகளை இயேசுவோடு சுமந்தோமென்றால் இயேசுவோடு கண்டிப்பாக உயிர்ப்போம் என்ற நம்பிக்கையை கடவுள் அளிக்கிறார் (உரோ 6:8)

இருள் உள்ள இடத்தில் ஒளியாகவும், அவநம்பிக்கை உள்ள இடத்தில் நம்பிக்கையாகவும், அக்கிரமம் உள்ள இடத்தில் மன்னிப்பாகவும், துயரமுள்ள இடத்தில் மகிழ்ச்சியாகவும், காயமுள்ள இடத்தில் மருந்தாகவும் நாம் வாழ முற்படும்போது இயேசுவின் புனித சிலுவையை நாம் சுமந்து செல்கிறோம். இப்படிப்பட்ட சிலுவைகளை நாம் தினமும் சுமக்கும் போது நாம் இயேசுவின் உண்மையான சீடர்கள் என்பதை வெளிப்படுத்துகின்றோம்.

நாம் செய்கிற சிலுவைத்தியானமும், மேற்கொள்கிற சிலுவைப் பயணமும் நமக்குத் துயரத்தை அளித்தாலும் வாழ்க்கையில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையை அதே சிலுவை நமக்கு அளிக்கின்றது. "சாவின் மீது வெற்றி கொண்டுவிட்டேன்" என்பதன் அடிப்படையில் இயேசு நமக்குக் கூறுவது என்னவென்றால், "உலகில் உங்களுக்கு துன்பம் உண்டு. ஆனால் அஞ்சாதீர்கள்" என்ற நம்பிக்கைச் செய்தியை அளிக்கிறார் (யோவா 16:33). எனவே அன்பார்ந்தவர்களே சிலுவை நமக்கு இயேசுவின் பாடுகளை மட்டுமல்ல, அவர் அடைந்த உயிர்ப்பையும், தீய சக்தி மேல் அவர் கொண்ட வெற்றியையும் நமக்குச் சுட்டிக்காட்டுகிறது.

இந்த உலகில் நாம் சந்திக்கின்ற பல தரப்பட்ட அக்கிரமங்கள், அடக்குமுறைகள், ஊழல்கள் ஒருநாள் முடிவுக்கு வந்தே தீரும் என்ற நம்பிக்கையை புனித சிலுவை நமக்கு அளிக்கிறது. சிலுவை வழியாக இயேசுவைச் சாகடிக்க நினைத்த தீய சக்திகள் அதே இயேசுவால் வீழ்த்தப்பட்டு, எந்தச் சாவை அவர் மேல் சுமத்த நினைத்தார்களோ, அந்தச் சாவுக்கே சாவு மணியடித்து இயேசு உயிர்த்துவிட்டார். எந்தச் சிலுவை குற்றத்தின் சின்னமாக அவர் மேல் சுமத்தப்பட்டதோ அச்சிலுவையை இயேசு புனிதமாக்கினார்.

வேதனைகள், சோதனைகள்,போராட்டங்கள் என்ற சிலுவைகள் நமக்கு அச்சத்தையும், அவநம்பிக்கையையும் கொடுத்தாலும் இயேசுவின் சிலுவை நமக்கு நம்பிக்கை அளிக்கிறது. அந்த இயேசுவின் சிலுவையோடு நம்மையே நாம் இணைத்து கொள்ளும்போது, "நாங்கள் எல்லா சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை. குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை. துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை. வீழ்த்தப்பட்டாலும் அழிந்து போவதில்லை (2கொரி 4:8-9) என்ற நம்பிக்கை நமக்கு கண்டிப்பாக வரும். அப்பொழுது உலகின் தீயசக்திகளால் நாம் எந்நேரமும் செத்துக் கொண்டிருந்தாலும் இயேசுவின் சக்தியால் எந்நேரமும் நாம் உயிர்த்துக் கொண்டுதான் இருப்போம். நாம் இந்த உலகில் அடையும் இன்னல்கள் குறுகிய காலத்திற்கே உரியன. நம்மால் தாங்கக் கூடியன என்ற மன உறுதியையும் பெறுகிறோம் (1கொரி 10:13). ஆகவே நாம் பாவிகளாக இருந்தாலும் தம்முடைய திருமகனையே நமக்காக அளிக்கின்ற இறை இரக்கத்தையும், தன்னுடைய தூய இரத்தத்தினால் நம் பாவங்களைக் கழுவும் இயேசுவின் தியாக அன்பையும் இந்தத் தவக்காலத்தில் அதிகம் நினைத்துப் பார்ப்போம். இத்தகைய ஆன்மீக உள் உணர்வைப் பெற இப்புனித காலத்தில் பின்வரும் பக்தி முயற்சிகளை பின்பற்றுவோம்.

1. இயேசுவின் பாடுகள் பற்றிய விவிலியப் பகுதிகளை வாசிப்போம். குறிப்பாக மத் 26-27, மாற் 14-15, லூக் 23-24, யோவா 18-19 அதிகாரங்கள்
2. திருச்சிலுவையை அடிக்கடி உற்று நோக்கி இயேசுவின் தியாக அன்பை நினைத்துப் பார்ப்போம்.
3. சிலுவைப் பாதை தியானத்தை அடிக்கடி செய்வோம்
4. துக்க - தேவ இரகசிய செபமாலையை தினமும் செபிப்போம்
5. நல்லதொரு ஒப்புரவு அருட்சாதனத்தை இரண்டு முறையாவது இத்தவக்காலத்தில் செய்வோம்.
6. பின்வரும் இயேசுவின் இறுதி ஏழு வார்த்தைகளை குறித்து தியானிப்போம்.

1. "தந்தையே இவர்களை மன்னியும், ஏனெனில் இவர்கள் அறியாமல் செய்கிறார்கள்"
2. "நான் தாகமாய் இருக்கிறேன்"
3. "என் கடவுளே என் கடவுளே ஏன் என்னைக் கை நெகிழ்ந்தீர்?"
4. "அம்மா இதோ உன் மகன், மகனே, இதோ உன் தாய்"
5. "இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய்"
6. "தந்தையே! உன் கையில் என் உயிரைக் கையளிக்கின்றேன்"
7. "எல்லாம் நிறைவேறிற்று"

போன்றவற்றைப் பற்றி தியானிப்பதோடு, நோன்புச் செயல்களிலும் இரக்கச் செயல்களிலும் நாம் ஈடுபட வேண்டும்.

இறுதியாக இயேசுவின் பாடுகளையும், வேதனைகளையும் இறப்பையும் நேரில் கண்டு அனுபவித்தவர்களில் வியாகுல மாதாவைத் தவிர வேறொருவரும் இருக்கவில்லை என்பதை மனதில் கொள்வோம். இயேசுவின் முப்பத்தி மூன்று வருட இவ்வுலக வாழ்வில் தன்னையே முழுமையாக இணைத்துக் கொண்ட அன்னை மரியாள், இயேசுவின் சிலுவை என்ற கூரிய வாளினால் குத்தப்பட்டவர். இயேசுவின் இவ்வுலக வாழ்வோடு தன்னையே இணைத்துக் கொண்ட அன்னை மரியாள் திருச்சபை என்ற மறை உடலுக்கு, அதாவது கிறிஸ்தவ விசுவாசிகளாகிய நம் ஒவ்வொருவருக்கும் மாபெரும் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறார். இயேசுவோடு இறந்த அவர், அவரது உயிர்ப்பில் பங்குபெற்று நம்மோடு என்றும் வாழ்ந்து வருகிறார். வேதனையளிக்கும் நம்முடைய துன்பங்களை வீரத்தோடு தாங்கிக் கொண்டு எல்லா சூழல்களிலும் இயேசுவை நினைத்து வாழ அந்த வியாகுலத் தாய் நமக்கு துணை நிற்பாராக. அவருடைய அடிச்சுவட்டில் நடந்து நம் வாழ்க்கைச் சிலுவைகளை இயேசுவின் சிலுவையாக மாற்றுவோம். நம்முடைய பக்தியுள்ள, விசுவாசமுள்ள வாழ்க்கையால் நம்மையே நாம் புனிதச் சிலுவைகளாக மாற்றிடுவோம். அப்பொழுது இத்தவக்காலத்தின் இறுதியில் வரும் உயிர்த்த ஆண்டவரின் விழாவை சிறப்பாக கொண்டாட நாம் தகுதி பெறுவோம்.




# நமது பார்வை பெண்ணியத்தை வளர்க்க வேண்டும்

பங்குனி 08ம் திகதி அகில உலக பெண்கள் தினமாக சிறப்பிக்கப்படுகிறது. ‘கடவுள் மனிதரை, ஆணும், பெண்ணுமாகப் படைத்தார். தனது சாயலாக அவர்களைப் படைத்தார்” (தொ.நூ. 1:7). இறைவனின் படைப்பிலே சமமாகவும், அவரது சாயலாகவும் படைக்கப்பட்ட பெண்கள் உலக வரலாற்றின் ஆணாக்கத்தினால் அடிமைப்படுத்தப்பட்டு இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்பட்டு வருகிறார்கள். பெண்களுக்கு எதிரான வன்முறைகளும், பாலியல் கொடுமைகளும், கருத்தியல்களும், இன்றும் தொடர்ந்த வண்ணமாகவே இருக்கின்றன. ஆனாலும் இந்த 21ம் நூற்றாண்டில் பெண்கள் படிப்பிலும், பணியிலும், பொதுவாழ்விலும், ஏன் எங்கெல்லாம் அவர்களுக்கு வாய்ப்புக்கள் அளிக்கப்படுகின்றதோ, அவர்கள் ஈடுபாடு கொள்கிறார்களோ அங்கெல்லாம் தங்கள் திறமையின் முத்திரையைப் பதித்து வருகிறார்கள். இருந்தாலும் தங்களது சக்தியை உணர்ந்தவர்களாக சாதனை புரிய வேண்டும், சரித்திரம் படைக்க வேண்டும் என்று முன்வரும் பெண்கள் இன்று எத்தனைபேர். மேற்படிப்பு படித்து திறமை பெற்றிருந்தாலும் திருமணமும், குடும்பமும் என்றான போது, குடும்பத்தில் கடமைகள், எனது குடும்பமே கதி என்று இருக்கும் பெண்கள் எத்தனைபேர். தங்கள் அறிவை, ஆற்றலை முடக்கி வைத்துக்கொண்டு, மழுங்க வைத்துக்கொண்டிருக்கும் பெண்கள் எத்தனைபேர்.

ஆகவே பெண்களும் சாதனை படைக்கப் பிறந்தவர்களே. எங்கலாலும் முடியும். சமுதாயத்தை மாற்ற முடியும். இதை ஒவ்வொரு பெண்ணும் உணர வேண்டும். முன்வர வேண்டும்.

பெண்கள் இவ்வுலகிற்கு இறைவன் தந்த கொடை. எவ்வாறு ஓர் ஆண் கடவுளது சாயாலாகப் படைக்கப்பட்டானோ, அதேபோல பெண்ணும் அதே கடவுளின் மறு உருவம் என்றால் அது மிகையாகாது. இறைவனிலிருந்து முதலாவதாக ஆண் வந்தான் என்பதற்காக ஆண் உயர்ந்தவன் அல்ல. இரண்டாவதாகப் படைக்கப் பெற்றதால் பெண் கீழானவள் என்றும் பொருளில்லை. ஆணும், பெண்ணும் இறைவனின் இரு கண்கள். ஆனால், பெண் எனும் ஒரு கண்ணைக் குத்திவிட்டு இறைவனை ஒற்றைக் கண்ணனாக மாற்றிவிட்ட சூழ்நிலையில் இவ்வுலகம் பயணித்துக் கொண்டிருக்கிறது. “கடவுள் இல்லை எனும் சித்தாந்தத்தைவிட, கடவுளின் மகத்தானப் படைப்பாக பெண்ணிற்கு மதிப்பு தராமல் இரண்டாம் தரமாக, போகப் பொருளாக நடத்துவது மிக மிகக் கொடுமையாக உள்ளது”.

பெண்மையின் மதிப்பை உலகிற்கு உணர்த்தியது நமது கலாச்சாரம்தான். இயற்கையும், பெண்ணும் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்வதால் இயற்கைக்கு பெண்ணின் குணாதிசயங்களோடு ஒப்பிட்டும், அவற்றிற்குப் பெண்ணின் பெயர்களைச் சூட்டியும் (எ.கா. பூமித்தாய்) அழகு பார்த்தனர் நம் முன்னோர்கள். இப்பேர்ப்பட்ட கலாச்சாரத்திலிருந்து வந்தாலும் இன்று பெண்களைக் கொடுமைப்படுத்துவதில், அவர்களது முன்னேற்றத்தில் தடுப்பதில் நாம் தான் முன்னால் இருக்கிறோம் என்கிற நிலைமையைப் பார்க்கின்றபோது தலைகுனிந்து வெட்கமடைவதைவிட வேறு என்ன செய்ய முடியும்? இன்று பெண்ணைக் கேவலப்படுத்தும், அவளது உரிமையில், சுதந்திரத்தில் தலையிடும் அநாகரீகம் படைத்தவர்களாக மாறிவிட்டோம்.

இன்றைய நவீனக் காலம் பெண்கள் நிறைய வசதிகளை அனுபவிப்பது போலத் தோன்றினாலும் உண்மையில் வேதனையில்தான் உழல்கிறார்கள். நுகர்வு மற்றும் தன்னலத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட நவீனத்துவம் நிறைந்த இவ்வுலகில் பெண்களும் வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். வீட்டையும் பேணிப் பராமரிக்க வேண்டும், குடும்பத்தையும் நடத்த வருவாயும் ஈட்ட வேண்டும் என்கிற நரகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இன்றுவரை இவர்கள் தங்களுக்குப் பிடித்தமான வாழ்க்கைத் துணையாளனைத் தேர்ந்தெடுக்க உரிமையில்லாத சுதந்திரம் இல்லாத நெருக்கடியில் உள்ளனர். வீட்டில் உள்ள பெண்கள் வீட்டுவேலை செய்வதால் மில்லியன் கணக்கான பணம் சேமிக்கப்படுவதாக ஆய்வறிக்கை ஒன்று கூறுகிறது. இது புரியாமல் வீட்டில் உள்ள பெண்கள் ஏதோ சும்மா உட்கார்ந்து சாப்பிடுவதாக இன்றைய ஆணாதிக்க உலகம் அவர்களை விமர்சிப்பதில் என்றுமே சளைத்ததில்லை.

## இயேசுவின் காலத்தில் பெண்கள்

ஒரு யூதப் பெண் தன் வாழ்வை அடிமைத்தனத்தில் தொடங்கி அடிமைத்தனத்திலே முடித்த காலம் இயேசுவின் காலம். பெண்கள் சமூக, பொருளாதார, கலாச்சார, அரசியல், சமய வாழ்விலே அடிமைப்படுத்தப்பட்டு இரண்டாந்தர குடிமக்களாக, ஆணுக்கு அடிமையாக, போதைப்பொருளாக, பிள்ளை பெறும் இயந்திரமாக நடத்தப்பட்ட காலம் இயேசுவின் காலம். இத்தகைய யூதப் பெண்ணடிமைப் பின்னணியில் இயேசு பெண்களைப் பற்றி எத்தகைய கண்ணோட்டம் கொண்டிருந்தார். சமுதாயத்தில் பெண்களை மதித்தாரா? அவர் பணி வாழ்வில் பெண்களின் பங்கு என்ன எனக் காண்போம்.

இயேசுவின் பணி வாழ்வின் தொடக்கம் பொது இடங்களிலே பெண்களோடு ஆண்கள் பேசுவது அவமானம் எனக்கருதிய காலம். சமயக்கல்வி பெண்களுக்கு மறுக்கப்பட்ட காலம். இயேசுவோ புற இனத்தவளான சமாரியப் பெண்ணோடு இறையியல் விவாதிக்கிறார். அவள் வாழ்வை மாற்றுகிறார். தாம் ‘மெசியா’ என்பதை அவள் வழியாக ஊரறியச் செய்வதோடு (யோவா. 4:5-30) தம் பணி வாழ்வின் சீடத்தியாக்குகிறார்.

பொது இடத்தில் பெண்ணோடு பேசியவர் அவர்களை பாராட்டவும் தவறவில்லை. வறுமையிலும் தனது பிழைப்புக்கான முழுவதையுமே காணிக்கை அளித்த கைம்பெண்ணை வாயார வாழ்த்துகிறார் (லூக். 21:1-4) மேலும் தம்மிடம் உதவிக்கேட்டு வந்த புற இனத்தைச் சார்ந்த சீரோ - பெனிசியப் பெண்ணிடம் பிள்ளைக்குரிய உணவை எடுத்து நாய்க்குட்டிக்குப் போடுவது முறையல்ல மத்.15:26 என இயேசு கூறும்போது அப்பெண்மணியை மட்டம் தட்டுவதுபோல உள்ளது. ஆனால் அவள் கூறிய பதிலைக் கேட்ட இயேசு ‘அம்மா, உன் விசுவாசம் பெரிது’ என மனதாரப் பாராட்டுகிறார். இயேசுவின் பணியூதருக்கு மட்டுமல்ல, ஏனைய மக்களையும் சென்றடைய வேண்டும் எனக்கூறி இயேசுவின் பணித் தெளிவினை விளக்குவதாக அமைந்துள்ளது.

பெண்ணை போதைப்பொருளாக, பாலியல் சரக்காக கருதிய யூத சமுதாயத்திற்கு, ‘ஒரு பெண்ணை இச்சையோடு நோக்கும் எவரும் அப்பெண்ணோடு விபச்சாரம் செய்தவன் ஆகிறான்’ என்கிறார் இயேசு. பலதார உறவை அனுபவித்துக் கொண்டும், விவாகத்தை விளையாட்டுப் பொருளாக நினைத்துக் கொண்டும் இருந்த ஆண்வர்க்கத்திற்கு இது ஒரு சாட்டையடி!

விபச்சாரத்தில் கையும் மெய்யுமாக பிடிபட்டவள் இவள் (யோவா. 8:4). இவளைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பது மோசே தந்த சட்டம். உம் பதிலென்ன? எனக் கேட்டவர்களுக்கு “உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண் மேல் கல் எறியட்டும்” என்கிறார் இயேசு (யோவா.8:7). கல்லெறிய வந்த ஆண்கள் அனைவரும் ஓட்டம் பிடித்தனர். கற்பு என்பது பெண்களுக்கு மட்டுமே உரியது எனும் சட்டத்தை இங்கு உடைத்தெறிந்தார் இயேசு.

இயேசுவின் குணமளிக்கும் பணியிலும் பெண்களை ஒதுக்கிவிடவில்லை. பேதுருவின் மாமியார், யாயீரின் இறந்த மகள், ஏழு பேய்கள் பிடித்திருந்த மகதலேன் மரியா என பட்டியல் போடலாம். இயேசுவின் புதுமைகளில் ஒரு சிறப்பு அம்சம் இருந்தது. அவர் பெண்களை தொட்டு குணமாக்குகின்றார். 18 ஆண்டுகளாகத் தீய ஆவியால் அலைக்கழிக்கப்பட்டு கூன்விழுந்து நிமிர்ந்து நடக்க முடியாமல் வாழ்ந்த பெண்ணை ஓய்வுநாளில் கூப்பிட்டு, “அம்மா உன் நோயிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளீர்” (லூக். 13:12) என்றுகூறி தம் கைகளை அவர்மீது வைத்தார். பெண்களைத் தொட்டு குணமாக்கிய இயேசு நயீன் ஊர் கைம்பெண் மகளை தாமாகவே முன்வந்து உயிர்ப்பிப்பதன் மூலம் (லூக். 7:11, 15) கைம்பெண் நசுக்கப்படுகிற சமுதாயத்தில் அவர்களும் வாழ வேண்டும், வாழ விடுங்களென அறைகூவல் விடுக்கிறார்.

இயேசுவின் வாழ்வின் இறுதிக்கட்டத்திலும் கூட அவரோடு இறுதிவரை பெண்கள் பங்கு பெறுகின்றனர். அவரோடு உண்டு, உறவாடி, உறங்கிய சீடர்கள் அனைவரும் நமக்கு வம்பு எதற்கு என ஒதுங்கி ஓடிவிட்ட நிலையில் (மாற். 14:50-52)...

தொடர்ச்சி 15ம் பக்கம்







ஆண்டவன் அழகான கவிதையென
ஆணும் பெண்ணுமாய்
மதிப்போடு தன்னுருவில்
மனிதரைப் படைத்தார்: ஆதலின்...
ஆண் என்பவன்
பெண்ணின் நிறைவு!
பெண் என்பவள்
ஆணின் நிறைவு!
பாகுபாடுகள்
படைத்தவனுக்கு இல்லையெனில்
ஆணாதிக்கம்
பெண்ணடிமை யெனும்
பேதங்களும் வாதங்களும்
போட்டியிட்டு போர்க்களமாகிவிட
மனித மாண்பு ரணமாவது ஏன்?

பெண்ணே நீ
வீழ்ந்துவிட்டேன்றும்
அடிமைப்பட்டுடேனென்றும்
விழுந்து கிடக்கலாமா?
விடியலாய் புறப்பட்டு வா!

திரையென்பதும்
சிறையென்பதும்
நீயாய் உனக்குள்ளே
வரித்துக் கொண்டது
சின்ன நூற்கண்டா
அக்கினிக் குஞ்சே
சிறைப்படுத்தவது உன்னை?

பனை மரத்தடியிலிருந்து
பஞ்சாயத்து நடத்தினாள்
தெபோரா!

ராஜதத்திரத்தால்
மன்னனை வென்று
தன்னினம் காத்தாள் ... எஸ்தர்!
புதிய கீதம் புரட்சிக் கீதமிசைத்து
ஆணாதிக்க யூதனுக்கு
சாவுமணி அடித்தாள்
சின்ன பெண் மரியாள்!

கம்ப்யூட்டர் யுகத்து கண்மணியே!
கண்ணீர் எதுக்கடி கண் வழியே?
உன்னை நேசி
உன்மாண்பை கண்டுபிடி
தன் மதிப்பை உயர்த்து.

ஆண்கள் உன் எதிரிகள் அல்ல.
அடக்கியாளும் ஆணாதிக்க
வெறி கொண்டோர்
உன் பகைவர்களென
கண்டு கொள்.
மோதி மிதித்து விடு
முன்னேறி சென்று விடு
வானம் உன் வசப்படும்,

வாழ்த்துக்கள்

## 01 மனித குலத்தை...

போதைப் பொருள் பாவனைக்கு எதிராக நாம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எமது பிரதேசங்களில் குழுக்களாக ஒன்று சேர்ந்தும், எமது இளைஞர் யுவதிகளின் பங்களிப்புடனும் செயற்திட்டங்களை மேற்கொள்ளல் வேண்டும். போதைப்பொருள் விநியாகிப்பவர்கள் அனைவரையும் இனங்கண்டால் காவல்துறைக்கு அவர்களைப் பற்றி தெரிவிக்கவும் என கர்தினால் அவர்கள் கருத்து வெளியிட்டார்.

மேலும் நீர்கொழும்பிலுள்ள அனைத்து பங்குகளிலும், கன்னியர் மடங்களிலும், பாடசாலைகளிலும் மற்றும் நிறுவனங்களிலும் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக செயற்பாட்டுக் குழுக்களை நியமிக்கவும், நீர்கொழும்பில் வசிக்கும் அனைத்து குருக்கள் துறவிகளுக்கு அழைப்பு விடுத்ததோடு, இக்குழுக்களுக்கு தலைமை தாங்க தாம் முன்வருவேன் என கர்தினால் அவர்கள் தெரிவித்தார்.

நீர்கொழும்பு மாரிஸ்டெலா, பாடசாலையில் இருந்து பிரதான பஸ்தரிப்பிடத்தில் புனித யோசேவ்வாஸ் சிலைக்கு அருகாமை வரை இடம்பெற்ற இப்போராட்ட பவனி இடம்பெற்றதோடு, நீர்கொழும்பு மற்றும் கட்டான பிரதேசங்களிலுள்ள அருட்தந்தையர்கள், கன்னியர்கள், பொதுநிலையினர் உள்பட்ட ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

மதிப்பிற்குரிய களுவாராட்சிகம சுமனரத்ன தேரர் உள்ளிட்ட பௌத்த மதக்குருக்கள் மொஹமட் அஷாட் அப்துல் ரஹமான் உள்ளிட்ட முஸ்லிம் மதக்குருக்கள், ராஜேந்திர குருக்கள் உள்ளிட்ட மதக்குருக்கள் இப்போராட்ட நடவடிக்கையில் கலந்து கொண்டதோடு, போதைப்பொருள் ஒழிப்பு, ஜனாதிபதி செயற்பாட்டு சபையின் இயக்குனர் வைத்திய சமன்த்த குமார கிதலவாரச்சி அவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

## 14 நமது பார்வை...

பெண்களே சிலுவையடியில் நின்று கொண்டிருந்தார்கள் (யோவா. 19-25). பெண்கள் பொய்யர்கள் என்ற கருத்து நிலவிய அக்காலக் கட்டத்தில் தம்முடைய உயிர்தெழுதலுக்குச் சாட்சியமளிக்க பெண்களைத்தான் தேர்ந்தெடுக்கிறார். மேலும் தமது சீடர்களுடன் பெண்களையும் சீடத்திகளாக்கியதையும் காண்கிறோம் (லூக். 8:1-3). ஆக, தம் பிறப்பிற்காக அன்னை மரியாளைத் தேர்ந்தெடுத்து முதல் உயிர்ப்பின் சாட்சியாக மதலேன் மரியாளை மாற்றியது வரை இயேசுவின் பணிவாழ்வில் பெண்களுக்கென சிறப்பாக இடத்தைக் கொடுத்தார். அவர்களை ஆளாக மதித்தார். பெண்களும், ஆண்களும் இறைவன் முன் இணையானவர்கள். மதிப்பிற்கும், மாண்பிற்கும் உரியவர்கள் என்பதை உணர்த்துகிறார்.

இயேசு தம் வாழ்நாளில் தொடங்கி வைத்த புரட்சிகரமான செயல்பாட்டின் தொடர்ச்சியாக பெண்கள் மாற்றுப் பார்வையை உள்வாங்க வேண்டும். அவர்தம் சக்தியை உணர வேண்டும். இணைந்து அதை வெளிப்படுத்த வேண்டும். திருச்சபையிலும், சமுதாயத்திலும் பெண்களுக்குரிய மாண்புகளை நிலைநாட்ட வேண்டும்.

## 01 மறையை வாழ்விலிருந்து...

இக் கவலைக்குரிய நிலையில் வாழக் காரணம் அவர் தம் மறை வாழ்விலிருந்து விலகி இருந்தமையே. மறையை வாழ்விலிருந்து பிரித்தெடுப்பது, நீதியில்லாச் செயலாகும். இவ்வாறான கருத்துக்களை அதிமேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கடந்த ஞாயிறு தினத்தன்று கொட்டாஞ்சேனை, புனித லூசியாஸ் பேராலயத்தில் நடைபெற்ற இலத்தீன் மொழி திருப்பலி மறையுரையின் போது தெரிவித்தார்.

இவ் இலத்தீன் மொழி திருப்பலியில் சிலாப மறைமாவட்ட ஆயர் மேதகு வெலன்ஸ் மென்டிஸ், கொழும்பு மறைமாவட்ட துணை ஆயர் மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை உட்பட பல குருக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். வெளிநாட்டு தூதரகத்தவர்கள், உள்நாட்டு - வெளி நாட்டு சிறப்பு விருந்தினர்கள் மற்றும் கிறிஸ்தவ செயல்பாட்டு அமைச்சர் திரு ஜோன் அமரசிங்க அவர்கள் உள்ளிட்டோரும் இதில் பங்கேற்றனர்.

## 01 எம்மை பிரிக்கும்...

சமூகத்தலைவர்கள் மத்தியில் கடந்த காலங்களில் தவறுகள் நடந்துள்ளன என்ற ஒரு பரந்துபட்ட உணர்வு ஏற்பட்டுள்ளது என்று கூறிய அவர், அமைதியையும், செழிப்பையும் கொடுக்கக்கூடிய ஒரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு தேவையான பலமும், நல்மனமும் எல்லா இன மக்களிலும் நிறைவாக இருக்கின்றன என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

மதிப்பிற்குரிய ஆயர் அவர்களே! எனது அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! முதலில் எழுச்சியூட்டும் இந்த வருடாந்த யாத்திரைக்கு என்னை அழைத்தமைக்காக நன்றி கூறுகிறேன். நானும் இங்கு ஒரு யாத்திரிகனாகவே வந்துள்ளேன். எனக்காகவும் எனது மறைமாவட்டத்திற்காகவும் தயவுசெய்து மன்றாடுங்கள். இலங்கையின் தென்பகுதியில் வாழும் எனது மக்களின் வாழ்த்துக்களையும் நல் ஆசீர்களையும் சுமந்து வந்திருக்கிறேன். மேலும், தென்னிந்தியாவிலிருந்தும் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் கலந்துகொள்கின்ற சரித்திம் முக்கியத்துவம் வாய்ந்த தவக்கால யாத்திரையின் உங்கள் மகிழ்ச்சியிலே பங்குகொள்ளவும் இங்கு வந்துள்ளேன்.

இந்த யாத்திரையை ஒரு மறக்கமுடியாத நிகழ்வாக்க உதவுகின்ற இலங்கை அரசாங்கத்திற்கும், இவ்விழாவுக்கு தொடர்ந்து துணை தந்து உதவுகின்ற இலங்கை கடற்படையின் பொறுப்புள்ள அதிகாரிகளுக்கும், மற்றும் இந்நிகழ்வு சிறப்புற உழைக்கும் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த பல தசாப்தங்களாக தொடர்ந்து வந்த வன்முறையின் மத்தியிலும் ஒட்டுமொத்தமாக நோக்கும்போது எங்கள் தாய் நாட்டில் எல்லா இனங்களிலும் நல்மனம் படைத்த மக்களின் விகிதாசாரம் பெரிதாகவே இருந்துவருகின்றது. இதற்கு முக்கிய காரணம் இங்கு இருக்கின்ற அன்பையும், இரக்கத்தையும், நல்லிணக்கத்தையும் போதிக்கின்ற நான்கு முக்கிய மதங்களின் வழிநடாத்துதலே ஆகும்.

இந்த கச்சதீவு வருடாந்த திருயாத்திரை தன்னிகரற்ற தனித்துவமான நிகழ்வாகும். இதுவே இந்திய மக்களையும் இலங்கை மக்களையும் ஒரே நோக்கத்திற்காக ஒன்றுசேர்க்கின்ற ஒரே ஒரு நிகழ்வு என்று நான் கூறுவேன். இது சாத்தியமாவதற்குரிய காரணம் அங்கிருந்தும் இங்கிருந்தும் வருகின்ற பக்தர்கள் ஒரே விசுவாசத்தை அறிக்கையிடுவதேயாகும்.

எங்கள் இரண்டு நாடுகளும் எங்கள் சரித்திரங்களை பகிர்ந்துள்ளன எனலாம். எங்கள் மத நம்பிக்கைகளில், பாரம்பரியங்களில், கலை, இசை, நடனம், சினிமா, கலச்சாரம், உணவு வகைகள், உடை அலங்காரங்கள் போன்றவற்றில் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இலங்கையில் வாழும் தமிழ், சிங்கள மக்களிடையேயும் இதே போன்ற நிலையைத்தான் நாம் பார்க்கிறோம். நாம் அறிந்த காலத்திலிருந்து எமது சமய, கலாச்சார, இனங்களுக்குரிய பொக்கிசங்களை நாம் பகிர்ந்து வந்துள்ளோம். எம்மைப் பிரிக்கும் காரணிகளைவிட, எம்மை ஒன்றிணைக்கும் காரணிகளே மிக அதிமாகும்.

எல்லாப் தரப்புகளையும் சேர்ந்த சில அரசியல்வாதிகள், சமூகத்தலைவர்கள் மத்தியில் கடந்த காலங்களில் தவறுகள் நடந்துள்ளன என்ற ஒரு பரந்துபட்ட உணர்வு ஏற்பட்டுள்ளது. தவறுகளை ஏற்றுக்கொள்ளும் இந்த உணர்வுதான் நாம் இப்போது எல்லாருடைய உரிமைகளையும் பாதுகாக்கின்ற, எல்லாரையும் உள்ளடக்கின்ற சமூகத்தைப் படைக்கின்ற, மீண்டும் தவறுகள் ஏற்படாத ஒரு புதிய தேசத்தைக் கட்டியெழுப்பும் தூண்களைப் படிப்படியாக எழுப்புவதற்கு உத்தரவாதமளிக்கிறது. எல்லாக் குடிமக்களும் தேசத்தைக் கட்டியெழுப்பும் பணிக்கு தமக்கு சமத்துவமான வாய்ப்புக்கள் உண்டு என்பதை உணரும்வகையில் தமது ஆற்றல்களைப் பயன்படுத்த ஆவன செய்யப்படவேண்டும். இன, மொழி பேதமின்றி நாட்டு மக்கள் அனைவரும் தாம் சமமான உரிமைகளைப் பகிருகின்ற சம பங்காளிகள் என்ற உணர்வைப் பெறவேண்டும்.

ஒரு தேசமாக இதைச் செய்வதற்கு எமது பயங்களை நாம் மேற்கொள்ளவேண்டும். யார் செய்தார்கள், என்ன செய்தார்கள், யாருக்கு செய்தார்கள், எப்போ செய்தார்கள் போன்ற எமது வழமையான சிந்தனைகள் நிறைந்த மனநிலையிலிருந்து நாம் விடுபடவேண்டும். பகைமை, பழிவாங்கும் உணர்வுகளிலிருந்து எம்மை விடுவித்துக்கொள்ளவேண்டும். அன்பார்ந்தவர்களே! எமது நாட்டில் இவற்றைச் செய்வதற்கான பலமும், நல்மனமும் நிறைவாக இருக்கின்றன என நான் உறுதியாக நம்புகிறேன்.

மறப்பது என்பது முடியாத காரியம். எப்படியான முயற்சிகள் எடுத்தாலும் நினைவுகளிலிருந்து விடுபட முடியாது. ஆனால் மனித இனத்துக்கு தவறுகளை மேற்கொள்ளும் ஆற்றலும், பயங்களை, கோபங்களை, வஞ்சம் தீர்த்தலை முடியடிக்கும் வல்லமையும் உள்ளன. அதே வேளையில், இரக்கத்துடனும், மனிதாபிமானத்துடனும், ஞானத்துடனும் செயற்படும் திறனும் இருக்கவே செய்கின்றன. இந்தப்பண்புகள் எல்லாருக்கும் அமைதியையும், செழிப்பையும் கொடுக்கக்கூடிய ஒரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஒன்று சேர்ந்து உழைக்கும் அர்ப்பணிப்பைப் பெற அவசியமானவை. அங்குதான் அனைவருடைய உரிமைகளும் பாதுகாக்கப்படும், நிலைநிறுத்தப்படும்: அங்குதான் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படும்: அங்குதான் எதிர்கால சந்ததியின் பலன் கருதி எல்லா மக்களும் தம்மை முற்றாக அர்ப்பணித்து செழிப்பான முன்னேற்றப் பாதையில் நாட்டைக் கொண்டுசெல்லத் தேவையான உரிமை தமக்கும் உண்டு என்ற உணர்வு பிறக்கும்.

இந் நாட்டு மக்கள் என்ற வகையில் நாம் எமது நாளாந்த வாழ்வில் விசுவாசத்தையும், நட்பையும் பகிர்ந்து நாட்டைக் கட்டியெழுப்பும் வழிமுறைகளைக் கண்டறியவேண்டும். "ஒரு புன்னகையில்தான் அமைதி ஆரம்பமாகின்றது" என்று புனித அன்னை திரேசா அடிக்கடி கூறுவார். இணக்கமான முரண்பாடில்லாத ஒன்றிணைந்த வாழ்வு, நல்லெண்ணம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றை வெற்று வார்த்தைகளைப் பேசுபவர்களால் அல்ல, மாறாக, வார்த்தைகளைவிட செயல்களால் வல்லமையோடு பேசும் பளிச்சிடும் முன்னுதாரணச் செயல்களைக் கொண்ட சமூகங்களாலேயே கட்டியெழுப்ப முடியும். உண்மைச் சமாதானம் ஊற்றெடுக்கின்ற அருவி இதுவேயாகும்.

**நன்றி. இறைவன் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!**

**ஆயர் றேமண்ட் விக்கிரமசிங்க, காலி ஆயர்**




## மணமகன் தேவை

இந்திய வம்சாவழி 1989ம் ஆண்டு பிறந்த லண்டன் L.L.B படித்த 28வயது நிரம்பிய மகளுக்கு மது பழக்கமற்ற நல்ல குணமுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு 0312228622, 0777895374**

(N 6033)


## 06 மன்னிப்பின்...

என்னும் திருப்பாடல் வரிகள் இறை மன்னிப்பின் இன்னொரு பரிமாணத்தை நமக்கு எடுத்துரைக்கின்றன.

இறைவன் நம்மை நீதியின் படித் தண்டிக்காமல், பரிவுடன் தண்டிக்கிறார். மக்கபேயு மற்றும் அவரது ஆள்கள் இறைவனிடம் மன்றாடியபோது, அவர்கள் எப்போதாவது பாவம் செய்ய நேரிட்டால், கடவுளால் "பரிவோடு தண்டிக்கப்பட" வேண்டுமென்று மன்றாடினார்கள் (2 மக் 10:4) என்னும் செய்தி நமக்கு வியப்பைத் தருகிறது.

"உம் ஊழியர்களின் பகைவர்கள் சாவுக்குரியவர்களாய் இருந்தும், மிகுந்த கனிவோடும் இரக்கத்தோடும் அவர்களைத் தண்டித்தீர். அவர்கள் தங்கள் தீச்செயல்களை விட்டுவிடும்பொருட்டு, காலமும் வாய்ப்பும் அவர்களுக்குக் கொடுத்தீர்" (சா.ஞா 12:20) என்னும் மன்றாட்டு இதனை உறுதிப்படுத்துகிறது.

### 6. பாவிகளைத் தப்புவித்து, பெருமைப்படுத்துகிறார்

"ஆண்டவர் எந்த மனிதரின் தீச்செயலைக் கருத்தில் கொள்ளவில்லையோ, அவர் பேறுபெற்றவர்" (திபா 32:8) என்கிறார் திருப்பாடல் ஆசிரியர். மேலும், திருப்பாடல் 91ல் "அவர்கள் என்னை நோக்கி மன்றாடும்போது, அவர்களுக்குப் பதில் அளிப்பேன். அவர்களது துன்பத்தில் அவர்களோடு இருப்பேன். அவர்களைத் தப்புவித்து அவர்களைப் பெருமைப்படுத்துவேன்" (திபா91:15) என்ற வாக்குறுதியை வாசிக்கிறோம். தாவீதின் வாழ்வில் இந்த வாக்குறுதி நிறைவேறியது. தாவீது ஆண்டவருக்கு எதிராகப் பல பாவங்கள் செய்தபோதிலும், மனம் வருந்தி இறைவனையே பற்றிக்கொண்டு வாழ்ந்தார். எனவே, ஆண்டவரும் தாவீதை உயர்த்திப் பெருமைப்படுத்தினார். தாவீதைப் பற்றி சீராக்கின் ஞானநூல் இப்படிச் சொல்கிறது: "ஆண்டவர் அவருடைய பாவங்களை நீக்கினார். அவருடைய வலிமையை என்றென்றைக்கும் உயர்த்தினார். மன்னர்களின் உடன்படிக்கையையும், இஸ்ரயேலில் மாட்சியின் அரியணையையும் அவருக்குக் கொடுத்தார்" (சீ ஞா 47:11) புதிய ஏற்பாட்டில் தம்மை மறுதலித்த பேதுருவை இயேசு மன்னித்து, "என் ஆடுகளை மேய்" (யோவா 21:15, 16, 17) என்று சொல்லி, அவரைத் திருச்சபையின் தலைவராக்கினார்.

பன்முகப் பரிமாணங்களைக் கொண்ட இறைவனின் மன்னிப்பை நாம் உணர்ந்து, அவரது மன்னிப்பைத் தேடிச் செல்வோமா? எனவே, "நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் உதவக்கூடிய அருளைக் கண்டடையவும், அருள் நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக" (எபி 4:16) என்னும் அழைப்பை ஏற்று, இறைவனுடன் ஒப்புரவு கொள்வோமாக!

## XIX நோன்பில் மலரும்...

**11. வாழ்விற்கு உரிய மதிப்பு**

நோன்பிருந்த பின் நாம் உண்ணும் உணவு சாதாரணமாகச் சுவைப்பதைவிட அதிக சுவையுள்ளதாக இருக்கும்.

**12. நற்பண்புகள் உயர்ந்து தீயவை குறைந்தன.**

சுய ஒறுத்தலுடன் இணைந்த வேண்டுதல் செய்யும் நேரம் இருதயத்தினதும். ஆன்மாவினதும் எல்லைகளை விஸ்தரிக்கும்.

**13. நோவுமில்லை, தைலமுமில்லை**

வாழ்க்கையின் மென்மையான தன்மையை அதிகரிப்பதற்கு நோன்பு உறுதியான மெய்யான ஆயத்தமாகும்.

**14. உடல் ஆரோக்கியத்தில் முன்னேற்றம்**

உஷ்ணத்தை உருவாக்கும் கலோரி குறைவு பட்டவர்கள் நோன்பின் ஊடாக ஆரோக்கியமாக நீண்டகாலம் வாழ்வதாக ஆய்வுகளின் ஆதாரங்கள் காட்டுகின்றன.

**15. மற்றவருக்கு ஒளி**

தனது கடுமையான நோன்பின் மூலம் மகாத்மா காந்தி தனது நாட்டு மக்களுக்கும், ஆட்சியாளருக்கும் அறிவு புகட்டினார். அதனால் மக்கள் சுதந்திரம் பெற்றனர்.

**16. கிறிஸ்துவை பின்பற்றுதல்**

இயேசு தனது பொதுவாழ்விற்கு முன்பதாக நோன்பிலும் வேண்டுதலிலும் ஈடுபட்டிருந்தார். தன்னை பின்பற்றியவர்களும் நோன்பிருக்க வேண்டும் என விரும்பினார்.




# ஏட்டிப் பார்க்கும் எலிக்காய்ச்சல்...!





## அலட்சியப்படுத்தாதீர்கள், அலர்ட் டாக இருங்கள்...!

"டெங்கு காய்ச்சலால் நடுங்கிக் கொண்டிருக்கும் சூழலில், வடகிழக்குப் பருவமழை காலங்களில் புதிதாக எலிக்காய்ச்சலையும் கொண்டு வர வாய்ப்பு இருக்கிறது. இதனால், முன் எச்சரிக்கை நடவடிக்கை தேவை

எலிக்காய்ச்சல் பற்றியும், அதனை எதிர்கொள்வதற்கான வழிமுறைகள் பற்றியும் தொடர்ந்து விளக்குகிறார். மழை, காற்று, பனி என காலநிலை மாற்றம் அடையும்போது மனித சமூகத்தை அச்சுறுத்தும் நோய்கள் பரவுவதும், மருத்துவ முகாம்கள் நடத்தப்படுவதும், பாதிப்புகள் விஸ்வரூபம் எடுப்பதும் தொடர்கதையாக அரங்கேறிக்கொண்டுதான் இருக்கிறது. எலிக்காய்ச்சல், டெங்கு காய்ச்சல், பன்றிக்காய்ச்சல் போன்ற நோய்கள் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக நகரம், கிராமம் என பல பகுதிகளிலும் மக்களை அச்சுறுத்தும் ஒன்றாகவே இருக்கிறது. இந்த வருடம் டெங்குவின் தீவிரம் பல மடங்கு அதிகரித்திருக்கிறது.

வடகிழக்குப் பருவமழை காலம் தொடங்க இருப்பதால் இந்த காய்ச்சல்களின் எண்ணிக்கையும் தாக்கமும் அதிகரிக்க வாய்ப்புகள் உண்டு. அதனால், மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டியது கட்டாயமாகிவிட்டது. பன்றிக் காய்ச்சல், டெங்கு காய்ச்சல்கள் பற்றிப் பலருக்கும் தெரிந்திருக்கிறது.

ஆனால், எலிக்காய்ச்சல் பற்றி இன்னும் போதுமான விழிப்புணர்வு இல்லை. எனவே, இது பற்றியும் தெரிந்துகொள்வோம்... என்றவரிடம், இந்த எலிக்காய்ச்சல் எப்படி பரவுகிறது என்று கேட்டபோது.... "சாலைகளில் தேங்கும் மழைநீர் மற்றும் கழிவுநீரில் எலியின் சிறுநீர், மலம் கலந்துவிடுவதால் வரும் காய்ச்சல்தான் எலிக்காய்ச்சல். எலியின் கழிவுகள் கலந்த இந்த தண்ணீரை மனிதர்கள் மிதிக்கும்போதோ, தெரியாமல் புழங்கிவிடும்போதோ அது எலி காய்ச்சலாக நம்மைத் தாக்குகிறது.

இது எலி என்று மட்டும் அல்லாமல் நாய், பூனை போன்ற வளர்ப்பு பிராணிகளின் கழிவுகளாலும் ஏற்படலாம். இதுபோன்ற பிராணிகளின் கழிவுகள் கலந்த தண்ணீரை சமையலுக்குப் பயன்படுத்துவது, குடிப்பது, உடலைச் சுத்தம் செய்வது போன்ற சூழல்களினால் இந்த நோய் பரவ வாய்ப்புகள் அதிகம் உள்ளன. குறிப்பாக, முகம் கழுவும்போதும் குளிக்கும்போதும் எலிக்காய்ச்சலை உருவாக்குகிற பாக்டீரியாக்கள் கண்களின் மூலமாக பரவிவிடுகின்றன.

அதேபோல் சாலைகளில் தேங்கும் மழைநீர், கழிவுநீர் ஆகியவற்றில் நடந்து செல்லும்போது கை, கால்களில் உள்ள காயங்கள், பாதங்களின் அடிப்பகுதியில் உள்ள வெடிப்புகள் வழியாகவும் இந்த வகை கிருமிகள் பரவி எலி காய்ச்சலை உண்டாக்குகின்றன. எலிக்காய்ச்சலின் ஆரம்ப நிலையில் சாதாரண காய்ச்சலைப் போன்றுதான் தென்படும். தலைவலி, வாந்தி ஏற்படலாம்.

உடல் மற்றும் தசைப்பகுதிகளில் தாங்க முடியாத வலி தென்படும். எனவே, சாதாரண காய்ச்சல் என்று இருந்துவிடாமல், இரத்தப்பரிசோதனை செய்துகொள்வது அவசியம். அந்த பரிசோதனை முடிவில் எலி காய்ச்சலுக்கு காரணமான பாக்டீரியாக்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டால் முதல் கட்டமாக மருத்துவரின் ஆலோசனைப்படி ஆன்டிபயாடிக் மாத்திரைகள் சாப்பிட்டு வரலாம். நோயின் தீவிரத்தைப் பொறுத்து, ஊசி அல்லது மாத்திரைகள் வழியாக, இதற்கான மருந்துகளை எடுத்துக் கொள்ளலாம். இந்த நோயால் அவதிப்படுவோருக்கு உணவு கட்டுப்பாடு தேவையில்லை.

### எலிக்காய்ச்சலின் தீவிரமான தன்மை என்ன?

ஒருவர் எலி காய்ச்சலால் அவதிப்பட்டு வந்தால் அந்த நபருக்கு நுரையீரல், சிறுநீரகம் ஆகிய உறுப்புகள் பாதிப்பு அடையும். மேலும் இரத்தக்கசிவு உண்டாகும். 2-லிருந்து 10 சதவீதம் மூளைக்காய்ச்சல் வரலாம். எனவே, எலி காய்ச்சல் அறிகுறி தென்பட்டால், டயாலிசிஸ் செய்ய வேண்டியிருக்கும்.

எலிக்காய்ச்சல் ஒருவரிடம் இருந்து அடுத்தவருக்கு அரிதாகவே பரவும். அதேவேளையில், தாய்மை அடைந்த பெண்களுக்கு எலி காய்ச்சல் இருக்கும் பட்சத்தில், அவர் மூலமாக முதல் 3 மாதங்கள் வரை சிசுவுக்கு எலிக்காய்ச்சல் பரவ வாய்ப்பு உள்ளது. ஆகவே, 10 நாட்களுக்கு ஆன்டி பயாடிக் மாத்திரைகளைக் கருவுற்ற பெண்கள் தவறாமல் சாப்பிட வேண்டும். எலிக்காய்ச்சலுக்கு தற்போது நம்மிடம் மருந்துகள் இல்லை. சப்போர்ட்டிவ் மெடிசன்தான் இருக்கிறது. எனவே, நோயின் தீவிரம் என்பது சிகிச்சையை மீறி நடைபெறுகிறது. இதனால், மழைக்காலங்களில் வெளியே சென்று வந்தால் ஒவ்வொருவரும் கண்டிப்பாகக் கை, கால்களை சுத்தமாகக் கழுவ வேண்டும். குளிக்க வேண்டும்.

கழிவு நீரை வெளியேற்றுதல், அந்நீர் செல்லும் வழியில் உள்ள அடைப்பை சரி செய்தல் போன்ற வேலைகளில் ஈடுபடுவோர், வயல்வெளிகளில் வேலை செய்வோர் பாதுகாப்பு சாதனங்களான மாஸ்க், கிளவுஸ், ஷூ அணிவதை கட்டாயம் பின்பற்ற வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் எலி காய்ச்சல் போன்ற உயிர்கொல்லி நோய்களின் பாதிப்புகளில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ளலாம்.

**நன்றி : வீரகேசரி**

---

# எதிர்ப்பு சக்திக்குகந்தது இளஞ்சிகப்புக் கொய்யா!

### பலத்தையும் பெருக்கும்!

எளிதில் கிடைக்கக்கூடியதும், ஏழைகளின் பழமாகவும் கருதப்படுவது கொய்யாப் பழம். தற்போதைய சீஸனும்கூட, கொய்யாப் பழத்தில் அடங்கியிருக்கும் பயன்கள் நம் பலத்தைப் பெருக்கக்கூடியது.

இளஞ்சிவப்பு கொய்யா, வெள்ளைக் கொய்யா என இரண்டு வகை உண்டு. இளஞ்சிவப்பு கொய்யாவில் இனிப்புச் சுவை குறைவாக இருக்கும். மாவுச் சத்து, நார்ச் சத்து, தாது உப்புகள் அதிகம். வைட்டமின் சி என்கிற எதிர்ப்பு சத்து இதில் கூடுதலாக உள்ளது.

வெள்ளைக் கொய்யாவில் இனிப்புச் சுவை அதிகம். இதிலும் நார்ச் சத்து, மாவுச் சத்து, தேவையான அளவு கிடைக்கின்றன. கருங்காய் என்ற கொய்யா சாப்பிடுவதற்கு மிகக் கடினமாக இருக்கும். துவர்க்கும், ஆனால் நன்மைகள் நிரம்ப தரக்கூடியது.

மலைப் பகுதிகளில் வளர்க்கப்படும் கொய்யாவில்தான் எதிர்ப்புச் சத்துக்கள் கூடுதலாக உள்ளன. சளித் தொல்லை உள்ளவர்கள் கொய்யாவை அதிகமாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற கருத்து உண்டு. அது உண்மையல்ல. அனைவரும் உண்ணக்கூடிய பழம் தான் கொய்யா.

மலைவாழ் மக்கள் கொய்யா தினசரி எடுத்துக் கொள்வதால் தான் அவர்களுக்கு எவ்வளவு சளி இருந்தாலும், பெரிதும் பாதிக்காது. விரைவில் குணமாகிவிடுகிறது. சர்க்கரை நோயாளிகள், இதய நோயாளிகள், மலச்சிக்கல் மற்றும் மூலம் போன்றவற்றில் பாதிப்படைந்தவர்கள் சிவப்பு கொய்யாவை தினசரி உட்கொள்வது நல்லது. நோய்களைப் படிப்படியாக விரட்டி எதிர்ப்பு சக்தியைக் கொண்டுவரும். ஒரு சிவப்பு கொய்யாவில் 212 கிராம் ஆன்டி ஆக்ஸிடென்ட் கிடைக்கிறது.

### ஜூஸாக அருந்தலாமா?

பொதுவாக நம் வாயில் சுரக்கும் எச்சிலை விழுங்கினாலே எந்த நோயும் வராது. கொய்யாவை ஜூஸாகக் குடிக்கும்போது அது நேரடியாகக் குடலுக்குள் சென்றுவிடும். இதற்கும் பலன் உண்டு. இருந்தாலும் காயைக் கடித்து, மென்று சாப்பிடும் பொழுது, வாயில் உமிழ்நீரும் அதிகம் சுரக்கிறது. அதனையும் சேர்த்து உள்ளே விழுங்குவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது. உள்ளே செல்லும் கொய்யா மற்ற இடங்களுக்கும் விருந்தாளிபோல் சென்று விட்டமின் 'சி'யை பரிசாக அளித்துவிட்டு வரும். குடலுக்குள் சென்று அதற்கு வேலையும் அதிகம் கொடுத்து ஜீரணத்தை அதிகரிக்கச் செய்யும். கிருமிகளையும் அழிக்கும். இதனால் கடித்துச் சாப்பிடுவதே சிறந்தது. கொய்யாவில் இருக்கும் விதைகளை மென்று சாப்பிடுவதுதான் நல்லது.



கொய்யா பழம் உச்சிமுதல் பாதம் வரை அனைத்துக்குமே நல்லது. மூளைக்கும், இதயத்துக்கும், எனர்ஜி கொடுக்கும். நுரையீரலைப் பாதுகாக்கும், நீரிழிவு நோயை அண்டவிடாது, வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை வரவிடாது.

ஏன்? வயிற்றுப் புற்றுநோயைக்கூட நெருங்கவிடாது. மசக்கையாக இருக்கும் பெண்கள் சுவைத்து மென்று சாப்பிட வேண்டும். இதில் அவர்களுக்க இரும்புச் சத்து கிடைக்கும். குழந்தைகளுக்கு இளஞ்சிவப்பு கொய்யாவை மசித்து மாவுபோல ஊட்டலாம். சிறுவயதிலேயே தேவையான ஊட்டச் சத்தைப் பெற முடியும்.

ரொம்பப் பழமாக இருக்கும் கொய்யாப் பழங்களை வாங்கக் கூடாது. புழு இருக்க வாய்ப்புண்டு. காயாக அல்லது லேசாகப் பழுத்திருந்தால் வாங்கலாம். வெயிலில் வைத்து விற்கப்படும் கொய்யாவை வாங்கவேண்டாம். சூரியக் கதிரால் அதில் இருக்கும் சத்துக்கள் சுருங்கிவிடும்.

உருவில் பெரிதாக இருக்கும் கொய்யா ஹைபிரீட் மூலம் பழுக்க வைத்து, மருந்துகளால் வளர்க்கப்பட்டிருக்கலாம். அதனால் சிறிய வடிவில் அல்லது மீடியமாக உள்ள கொய்யாவை மட்டுமே வாங்கலாம்.

ஃப்ரெஷ்ஷாக வரும் கொய்யாவை வாங்கி இரண்டு நாளைக்குள் சாப்பிட வேண்டும். இயற்கையான சத்துக்கள் எப்பொழுதும் வெகுநேரம் தாக்குப்பிடிக்காது. தினமும் வெறும் வயிற்றில் உண்ணாமல் காலை 11 மணி அல்லது மதியம் மூன்று மணி போன்று உணவுக்குப் பின் இரண்டு மணி நேரம் கழித்துச் சாப்பிடலாம்.

பெரிய நெல்லிக்காய் தரும் பலனுக்கு மேல் கொய்யா இரண்டு மடங்காக பலன் தரும்.

ஓய்வின்றி ஓடிக்கொண்டு இருக்கும் உடலுக்கு, வெளிநாட்டு உணவுகளைத் தவிர்த்து, நம் நாட்டுக் காய், கனிகளை அதிகம் எடுத்துக் கொள்வது ஆரோக்கியத்தக்கு வழிவகுக்கும்.

# இயேசுவின் தோற்ற மாற்றம், அவரின் பாடுகளுக்கு முன்னோடி



இயேசுவின் சிலுவைப்பாடுகளை நினைத்து துயரத்தில் மூழ்கிவிடாமல், அவற்றை நல்லவிதமாக ஏற்றுக்கொள்வதற்கு, அவரின் தோற்றம் மாறுதல் நிகழ்வு, சீடர்களுக்கு உதவியுள்ளது என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஞாயிறு மூவேளை செப உரையில் கூறினார்.

கடும் குளிரையும், மழையையும் பொருட்படுத்தாது, வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில், ஞாயிறு நண்பகலில் கூடியிருந்த முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட திருப்பயணிகளுக்கு மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை, இயேசுவின் தோற்றம் மாறுதல் நிகழ்வு பற்றிய ஞாயிறு நற்செய்தி வாசகத்தை மையப்படுத்திப் பேசினார்.

மானிடமகன் பலவாறு துன்பப்படவும் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள் ஆகியோரால் உதறித் தள்ளப்பட்டுக் கொலை செய்யப்படவும் மூன்று நாள்களுக்குப்பின் உயிர்த்தெழவும் வேண்டும் என்று, இயேசு எருசலேமில் தம் சீடர்களுக்குக் கற்பித்த ஆறு நாள்களுக்குப்பின், அவரின் தோற்றம் மாறுதல் நிகழ்வு நடைபெற்றது என்று தன் உரையைத் தொடங்கினார் திருத்தந்தை.

மக்களின் தலைவர்களால் புறக்கணிக்கப்பட்டு கொலைசெய்யப்படுவேன் என்று, இயேசு தம்மைப் பற்றிக் கூறியது, அதை எதிர்த்த, பேதுருவுக்கும், சீடர்கள் எல்லாருக்குமே ஒரு சவாலாகவே இருந்தது என்றுரைத்த திருத்தந்தை, பேதுரு, யோவான், யாக்கோபு ஆகிய மூன்று சீடர்களையும் உயர்ந்த ஒரு மலைக்கு அழைத்துக்கொண்டுபோய், அங்குத் தம் மகிமையைக் காண்பித்ததன் வழியாக, இயேசு, தம் பாடுகளை, சீடர்கள், புரிந்துகொள்ளச் செய்கின்றார் என்று கூறினார்.

அம்மலையில், இறைவனின் மகனாகிய தம் மாட்சிமையை இயேசு வெளிப்படுத்தியதன் வழியாக, சீடர்கள் தம் பாடுகளை, துயரமின்றி, நேர்மறையாக ஏற்றுக்கொள்ள உதவுகின்றார்.

இயேசுவின் தோற்றம் மாறுதல் நிகழ்வு, அவரின் பாடுகளின் பேருண்மையை நாமும் புரிந்துகொள்ள உதவுகின்றது என்றும், இயேசுவின் பாடுகள், அவரின் எல்லையில்லா அன்பின் கொடையாக உள்ளது என்றும் உரைத்த திருத்தந்தை, இயேசுவின் தோற்றம் மாறுதல் நிகழ்வு, அவரின் உயிர்ப்பையும் நாம் நன்றாகப் புரிந்துகொள்ள உதவுகின்றது என்றும் உரையாற்றினார்.

# பிறரை தீர்ப்பிடுவதை விடுத்து, இரக்கத்தை கையிலெடுங்கள்

மற்றவர்களை தீர்ப்பிடும் பழக்கத்தைக் கைவிட்டு, ஒவ்வொருவரையும் கருணையுடன் நடத்தும் பழக்கத்தை கையில் எடுத்துக்கொள்வோம் என 26ம் திகதி காலை திருப்பலியில் அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லத்திலுள்ள சிற்றாலயத்தில் திங்கள் காலை திருப்பலி நிறைவேற்றி மறையுரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இரண்டு மணி நேரம் நடைபெறும் ஒரு விருந்தில் நாம் கலந்து கொள்கிறோம் என்றால், அதில் எத்தனை நிமிடங்களை பிறரைப் பற்றி தீர்ப்பிட செலவழிக்கிறோம் என்பதைக் குறித்து சிந்திக்க வேண்டும் என அழைப்பு விடுத்து, வானகத் தந்தை இரக்கமுள்ளவராக இருப்பதுபோல், நாமும் இரக்கமுள்ளவராக செயல்படவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

நாம் என்ன கொடுக்கிறோமோ, அதுவே நமக்கு நிறைவாக, வழிய வழிய கொடுக்கப்படும், ஏனெனில், தந்தையாம் இறைவன் தன் தீர்ப்பையல்ல, தன் இரக்கத்தை நமக்கு அபரிமிதமாக வழங்குகிறார் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.



இறைவனின் நீதி என்பது அவரின் இரக்கமே என்பதை அறிந்துள்ள நாம், நம் பாவங்களுக்காக வெட்கமடைந்து, அவரின் நீதியை நோக்கிச் செல்லும்போது, நமக்கு கிடைப்பது, மன்னிப்பே எனவும் உரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம் பாவங்கள் குறித்து வெட்கமடைவதும் ஓர் அருளே என தெரிவித்தார்.

நம் பாவங்களைக் குறித்து வெட்கமடையும் அருளுக்காக இறைவனை வேண்டும் நாம், எவ்விதம் பிறரை தீர்ப்பிட முடியும் என்ற கேள்வியையும் முன்வைத்த திருத்தந்தை, எந்த அளவையால் தீர்ப்பிடுகிறோமோ அதே அளவையால் நாமும் தீர்ப்பிடப்படுவோம் எனவும் கூறினார்.



## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

“தூய ஆவியார் எல்லாருக்குமானவர். இவர், மத நம்பிக்கையற்றவர்கள், பிற சமயத்தவர் போன்ற அனைவரிடமும் செயல்படுகிறார்”

“தங்களின் தவறுகளை ஏற்று, மன்னிப்பு கேட்பவர்கள், ஏனையோரிடமிருந்து மன்னிப்பையும், புரிதலையும் பெறுவார்கள்”

“இயேசு திருவாய் மலர்ந்த நற்பேறுகள், வெறும் வார்த்தைகள் அல்ல, மாறாக அவை, அவரின் வாழ்வு முழுவதையுமே வெளிப்படுத்துகின்றன”

”பணிவோடும், உண்மையான மனதோடும் நமது பாவங்களை ஏற்றுக்கொள்ளும்போது, நாம் மன்னிப்பு பெறுகிறோம், மற்றும், இறைவனோடும், நம் சகோதரர், சகோதரிகளோடும் இணைக்கப்படுகிறோம்”

“தங்கள் துன்ப நிலைகள் குறித்து தெரிந்தவர்களாக, தாழ்ச்சியில் தங்கள் பார்வையை தாழ்த்தி நடக்கும் மனிதர்கள், இறைவனின் இரக்கப் பார்வை தங்கள் மீது படிவதை உணர்வர்”

“உலகில் நடப்பவைகளைப் பார்ப்பதற்கும், நம் கண்களை அகலத் திறப்பது, ஆன்மீக வாழ்வுக்கு இன்றியமையாதது”

## சீனாவில் 2017ல் திருமுழுக்குப் பெற்றவர்கள் 48,000க்கு மேல்



சீனாவில் 2017ம் ஆண்டில் 48,556 பேர் புதிதாக திருமுழுக்குப் பெற்றுள்ளார்கள் என்று, சீன புத்தாண்டை முன்னிட்டு, புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளது, விசுவாச கலாச்சார கழகம்.

மிகவும் ஒதுக்குப் புறங்களில் வாழ்கின்ற கத்தோலிக்கர் குறித்த விவரங்கள் கிடைக்காததால், இந்தப் புள்ளிவிபரங்கள் முழுமையாக இல்லை என்று, அக்கழகம், பீதேஸ் செய்திக்கு அனுப்பிய தகவலில் குறிப்பிட்டுள்ளது.

சீனாவில் கத்தோலிக்கர் அதிகமாக வாழ்கின்ற ஹே பெய் மாநிலத்தில், முதல்முறையாக, இவ்வளவு பெரிய எண்ணிக்கையில், அதாவது 11 ஆயிரத்து 899 பேர், 2017ம் ஆண்டில் திருமுழுக்குப் பெற்றுள்ளனர் என்றும் அக்கழகம் கூறியுள்ளது.

இந்த எண்ணிக்கை ஊக்கமளிப்பதாய் இருந்தாலும், சீனாவில் நற்செய்தி அறிவிப்புப்பணியை ஆற்றுவது, கடினமாகவே உள்ளது என்று கூறியுள்ள அக்கழகம், சீனாவில் அனைத்து கத்தோலிக்கரும், பங்குத்தளங்களும், தாங்கள் பற்றிய விபரங்களைப் பதிவுசெய்வதில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

# 33வது உலக இளையோர் நாளுக்கு திருத்தந்தையின் செய்தி



குருத்தோலை ஞாயிறன்று சிறப்பிக்கப்படும் 33வது உலக இளையோர் நாளுக்கென, லூக்கா நற்செய்தியில் பதிவு செய்யப்பட்டுள்ள ”மரியா, அஞ்சவேண்டாம் கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர்” (லூக்கா 1:30) என்ற சொற்களை மையப்படுத்தி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், செய்தியொன்றை வெளியிட்டுள்ளார்.

2018ம் ஆண்டு கொண்டாடப்படும் உலக இளையோர் நாள், இவ்வாண்டு வத்திக்கானில் கூடிவரும் உலக ஆயர்கள் மாமன்றத்திற்கும், 2019ம் ஆண்டு, சனவரி மாதம் பானமா நாட்டில் நிகழவிருக்கும் 34வது உலக இளையோர் நாள் நிகழ்வுகளுக்கும் தகுந்த தயாரிப்பாக அமைகிறது என்று, திருத்தந்தை தன் செய்தியின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

“அஞ்சவேண்டாம்”, ”மரியா”, ”கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர்” ”இன்றைய தருணத்தில் துணிவு” என்ற நான்கு பகுதிகளாக தன் செய்தியை உருவாக்கியுள்ள திருத்தந்தை, முதல் பகுதியில், இளையோர் எதிர்கொள்ளும் அச்சங்களைக் குறித்து விளக்கம் அளித்துள்ளார்.

அச்சம் என்ற மனித அனுபவத்தை விவிலியத்தில் அடிக்கடி காணமுடிகிறது என்று கூறியுள்ள திருத்தந்தை, ஆபிரகாம், யாக்கோபு, மோசே, திருத்தூதர் பேதுரு, ஆகியோர் அடைந்த அச்சத்தைச் சுட்டிக்காட்டியுள்ளதோடு, இயேசுவே அச்சமும், வேதனையும் அடைந்தார் என்பதையும் (மத். 26:37 லூக். 22:44) குறிப்பிட்டுள்ளார்.

நம் நம்பிக்கைக்குத் தடையாக இருப்பது, சந்தேக உணர்வு அல்ல, மாறாக அச்சமே என்று கூறியுள்ளத் திருத்தந்தை, புயலைக் கண்டு அச்சம் கொண்ட சீடர்களை நோக்கி, ”ஏன் அஞ்சுகிறீர்கள்? உங்களுக்கு இன்னும் நம்பிக்கை இல்லையா?” (மாற்கு 4:40) என்று இயேசு கூறியதை எடுத்துக்காட்டாக கூறியுள்ளார்.

அச்சத்தை வெல்வதற்கு, இறைவனிடமும், ஒருவர் ஒருவரிடமும் உரையாடுவது சிறந்த வழி என்று கூறியுள்ள திருத்தந்தை, மனதைத் திறந்து, இறைவனோடும், மற்றவரோடும் உறவு கொள்வது உண்மையான கிறிஸ்தவ வாழ்வின் பண்பு என்று எடுத்துரைத்துள்ளார்.

வானதூதர், “மரியே“ என்று இளம்பெண்ணை பெயர் சொல்லி அழைத்ததை இரண்டாம் பகுதியில் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, ஒருவரை பெயரிட்டு அழைப்பது, தனிப்பட்ட ஒரு பணிக்கென அவரை அழைப்பதற்குச் சமம் என்பதை, விவிலியத்தில் அடிக்கடி நாம் காண முடியும் என்று கூறியுள்ளார்.

இளம்பெண் மரியா அஞ்சாமல் இருப்பதற்கு வானதூதர் சொல்லும் ஒரு முக்கிய காரணம், அவர் “கடவுளின் அருளைப் பெற்றவர்“ என்பதே என்று தன் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சீடர்கள் அனைவரும் தங்கள் இயலா தன்மையை உணர்ந்திருந்தாலும், இறைவனின் அருள் உள்ளது என்ற நம்பிக்கையில் தங்கள் பணிகளைத் தொடர்ந்தனர் என்று எடுத்துரைத்துள்ளார்.



# மன்னிப்பு நல்லாயனின் சிறந்த பண்பாகும்

**"மன்னியுங்கள் மன்னிக்கப்படுவீர்கள்"** (லூக் 6:37). மன்னிப்பை போதனையின் சிகரமாகவும் வாழ்வின் சாதனையாகவும் வழங்கியவர் இயேசு. மன்னிப்பு மகிழ்வளிக்கும், பகைவரை நண்பராக்கும், மனிதரை இறைப்பண்புள்ளவராக்கும். இயேசுவின் பார்வையில் மன்னிப்பின்றி இறைவழிபாடோ, திருப்பலியோ, மற்றும் சடங்குகளோ அர்த்தமற்றவை. மேலாக மன்னிப்பின்றி உறவு இல்லை எனவே மன்னிக்க மறந்தவன் தனிமைப்படுத்தப்படுவான். மன்னிப்பது என்பது ஒரு எளிதான காரியமல்ல அது கடினமானது. அதனாலேதான் இயேசு இறைவேண்டல் செய்யும் வண்ணம் எங்களைப் பணிக்கிறார். எங்களை வெறுப்போருக்கும், பகைப்போருக்கும், சபிப்போருக்கும், பழிப்போருக்கும், தகுந்த மருந்து செபமே. அவர்களை அன்பு செய்து, மன்னித்து அவர்களின் தீமைகளை மறந்து ஆசிகூறி நன்மை செய்யும்படி அழைக்கும் இயேசுவின் செயல் மன்னிப்பின் பரிணாமத்தின் உச்சியை காட்டுகிறது. இயேசு தனது வாழ்வின் மூலமாக எமக்கு மாதிரி தந்துள்ளார். உம்மோடு மடிவேன் என்ற நண்பன் மறுதலித்தபோதும் முகம் கோணாமல் மன்னித்தார். பாடுகளின்போது தன்னை நிர்வாணப்படுத்தியவர்களையும், சாட்டையால் அடித்த-வர்களையும், சிலுவையில் அறைந்தவர்களையும் மன்னித்தார். இயேசுவின் மாதிரியை எம் வாழ்வில் முன்னெடுத்தால் நாமும் மன்னிப்பின் சிகரத்தை எட்டமுடியும்.

எத்தனை முறை மன்னிக்க வேண்டும் என்ற சீடரின் கேள்விக்கு இயேசு எண்ணமுடியாத அளவுக்கு மன்னிப்பை வாரிவழங்க அழைத்து நிற்கின்றார் (மத் 18:21-22). மன்னிப்பிற்கு இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று இறைவனிடமிருந்து நாம் மன்னிப்பு பெறுவது. மற்றொன்று மற்றவர்களை நாம் மன்னிப்பது. நாம் எவ்வளவு குற்றம் செய்தாலும் கடவுள் எம்மை மன்னித்து, காத்து வழிநடத்திக்கொண்டிருப்பது மாபெரும் உண்மை. கடவுள் எம்மை மன்னிப்பதுபோல கடவுளின் சாயலான எங்கள் அயலவர்களையும் நாமும் மன்னிக்க வேண்டும். தவறினால் கடும்தண்டனையை அனுபவிக்க வேண்டி ஏற்படும் என்பதனை நற்செய்தி நன்றாகத் தெளிவுபடுத்துகிறது. நாம் ஏன் மற்றவரை மன்னிக்கவேண்டும் என்று பல சந்தர்ப்பங்களில் பலவிதமாக எங்களில் வினா எழுவது உண்மை. உளவியலளார்களின் கருத்துப்படி மன்னிக்க மறுப்பதனால் மன அழுத்தங்கள் ஏற்படுகின்றன இதனால் வாழ்வில் அமைதி, அன்பு, மகிழ்சி என்பன இல்லாமற்போக வாய்ப்புக்கள் அதிகமாகின்றன. இதன் விளைவாகத்தான் நாம் பல நோய்களுக்கு ஆளாகின்றோம். எனவே மனிதமும் மனிதர்களும் வளரவேண்டுமெனில் அமைதி, அன்பு, மகிழ்சியை நாம் அனுபவிக்க வேண்டுமெனில் மன்னிப்பு என்னும் உயரிய பண்பை மனிதர்கள் கொண்டிருக்க வேண்டும். இறைவனுடன் ஒன்றிக்கவும், மனிதருடன் உறவுகொள்ளவும் மன்னிப்பு அவசியமாகிறது.

அனைத்தையும் நிறைவாக மன்னித்த இயேசு ஆண்டவர், இன்று எங்கள் ஒவ்வொருவரையும் பார்த்துக் கேட்பது "மற்றவர்களை நீ மன்னிக்கமாட்டாயா?" உன்னுடைய அயலவரை நீ மன்னித்து ஏற்றுக்கொள்ளவி-ல்லையெனில் உன்னுடைய கிறிஸ்தவ வாழ்வும் வழிபாடும் அர்த்தமற்றது. எனவே முதலில் சமாதானம் செய்துவிட்டு தூய்மையான உள்ளத்தோடு என்னிடம் வா அப்போதுதான் என்னால் உன்னில் வாசம் செய்ய முடியும். "மற்ற மனிதர்கள் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்கமாட்டார்" (மத் 6: 14-15). நாம் மன்னிக்கத் தயாரா?...மன்னிக்கும் மனம் அருகியமையால்தான் இன்றைய உலகில் கொடூர யுத்தங்களும், அழிவுகளும், வேற்றுமைகளும், போட்டிகளும், மரணங்களும், இரத்தவடுக்களும் மேலோங்கியுள்ளன. இவையெல்லாம் மாறி பூமியில் புனிதம் தழைக்க வேண்டுமெனில் நாம் ஒருவரையொருவர் மன்னிக்க வேண்டும், ஏற்றுக்கொள்ள வேண்டும், அன்பு செய்ய வேண்டும் மற்றவர்களில் இறைவனைக் காண வேண்டும். "எந்த அளவையால் நீ அளப்பாயோ அதே அளவையால் உனக்கும் அளக்கப்படும்". எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும். எங்கு அன்பு நிறைகிறதோ அங்கேதான் மன்னிப்பு மலர்கிறது. எனவே சுயநல சுவர்களுக்குள் எம்மை சுருக்கிக் கொண்டு, செல்வம், அதிகாரம் ஆணவம், தற்பெருமை என்றில்லாமல் பிறர்மீது அன்பும் அக்கறையும் கொண்டு வாழவேண்டும். நாம் இறைவனுடனும் மனிதனுடனும் உண்மை உறவுகொள்ளும்போதே அங்கு இறையாட்சி உதயமாகிறது. இறையாட்சி மண்ணில் மலரும்போது மனித சமூகம் நிறைவாழ்வை நோக்கி பயணிக்கும் என்பதே எமது நம்பிக்கை. எனவே நாம் எம்மையே ஆய்வுக்குட்படுத்தி, நாம் மனிதத்திலும் புனிதத்திலும் வளர வழிவகுக்கும் மன்னிப்பை எமது வாழ்வில் சீவிக்கிறோமா என சிந்தித்து, எமது வாழ்வை செம்மைப்படுத்த இறைவனிடம் வேண்டுவோம்.

**அருட்தந்தை. யா. றமேஸ் அ.ம.தி**



# நோன்பில் மலரும் ஒரு ஆன்மீகம்

அருட்பணி. ரெஜிஸ் இராசநாயகம்.

நோன்பில் ஈடுபடுவதற்கு நல்ல ஒழுங்கு முறையொன்றைக் காட்ட, 16 காரணங்கள் கீழே தரப்ப-ட்டுள்ளன.

### 1. மனதுருக்கத்தின் விரிவாக்கம்

உலகில் பட்டினிப் பிரச்சினை பற்றிப் பேசுவது இலகுவானது. நாம் உணவின்றி இருக்கும்போதுதான் உண்மையான உடலின் தாக்கமும் உணர்வு பற்றிய விழிப்புணர்வும் ஏற்படும்.

### 2. சவாலுக்கு தயாராகுதல்

விவிலியத்திலுள்ள மக்கள் வேதனைகள், சோதனைகளுக்கு முகம் கொடுத்தபோது செபத்தாலும், நோன்பாலும் அவற்றிற்கு விடைகண்டனர்.

### 3. உறுதியான மனோபாவம்

கடந்த காலங்களில் நோன்பு என்பதற்கு உடலை வருத்துதல், செய்த பாவங்களுக்கு மன்னிப்புப் பெறுதல் போன்ற விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. அதைவிட ஆவியை உந்தித்தள்ள, முன்னுரிமைகளை மாற்ற, இயேசுவிடம் நம்மை இணைத்துக் கொள்ள நோன்பை பயன்படுத்தலாம்.

### 4. தலைசிறந்த ஆன்மீகவாதிகளின் உதாரணம்

பல புனிதர்கள் நோன்பினை இறைவனின் இரக்கம் மற்றும் அன்புடன் தொடர்புபடுத்தினர். "இறைவனை நோக்கி உமது வேண்டுதல் பறந்து செல்ல வேண்டுமென விரும்புகிறீரா? அதற்கு இரு இறக்கை-களை கொடும் அது நோன்பும் தருமம் செய்வதும் ஆகும்" என்று தூய அகுஸ்தீனார் கூறினார்.

### 5. மற்றவர்களுக்கு பயனுள்ளவை

உணவு உட்கொள்ளாது சேமிக்கப்பட்ட பணத்தை மற்றவருடன் பகிர்ந்து கொள்ளலாம்.

### 6. மேலதிக ஆன்மீக செயற்பாட்டிற்கான நேரம்

"விவிலியத்தை வாசிப்பதற்கோ, வேண்டுதல் செய்வதற்கோ எனக்கு நேரம் இல்லை எனச் சொல்லாதீர்கள்" எமது உணவுகளை தவிர்க்கும்போது வேண்டுதலுக்கு போதிய நேரம் கிடைக்கும்.

### 7. ஆன்மாவிற்கு நன்மைகள்

நோன்பிருப்பவர்களின் செயற்பாடுகள் ஆன்மீக புதுப்பித்தலுக்கு இட்டுச் செல்வதுடன் அதிகரித்த உள்உணர்வுகள், ஆழ்ந்த அர்ப்பணிப்பு, வாழ்வின் நோக்கம் பற்றிய தெளிவு, இறைவனுடனான கூடிய உறவு என்பவற்றைக் கொடுக்கிறது.

### 8. அப்பத்தினால் மட்டுமல்ல,

உடலுக்குத்தேகபலத்தையும், அதிகாரத்தையும், சக்தியையும் உணவு தருகின்ற பொழுதிலும் நோன்பானது ஆன்மாவிற்கு ஊட்டத்தை அளிக்கிறது.

### 9. உலகத் தன்மையுடனான போராட்டம்

நடைமுறை வாழ்வில் விளம்பரங்களால் கவரப்படுகின்றோம், நோன்பிருந்தால் நாம் நமக்கு வெளியே உள்ளவற்றில், உணவு போன்றவற்றில் கூட முழுவதும் தங்கியிருப்பதில்லை என்று உறுதிபட கூறமுடியும்.

### 10. அதிகரித்த சக்தி

நோன்பின் மூலம் வலிமை, வேகம், விடாமுயற்சி, ஒருநிலைப்படுத்தல் ஆகியவை ஏற்படுகி-ன்றன. வயிறு நிறைந்தபொழுது நீர் நல்ல விதமாக சிந்திக்கின்றீர், செயற்படுகின்றீர். உதாரணம் ஓட்டவீரர், வீராங்களைகள்.

தொடர்ச்சி 15ம் பக்கம்..




# தவக்காலத் தீர்மானங்கள்





05 பங்குனி
திங்கள்

எதிலும் எவரிடமும் வறட்டுப் பிடிவாதம் கொள்ள மாட்டேன்



06 பங்குனி
செவ்வாய்

பிறர் எனக்குச் செய்த தீங்குகளை மறக்க முயல்வேன்




07 பங்குனி
புதன்

வீண் பெருமை பேசமாட்டேன்



08 பங்குனி
வியாழன்

குடும்பத்தில் முன்மாதிரிகையாக நடந்து பிறரை நல்வழிப்படுத்துவேன்



09 பங்குனி
வெள்ளி

உள்ளொன்று வைத்துப் புறமொன்று சேபமாட்டேன்



10 பங்குனி
சனி

சிறைப்பட்டோர் மனம்மாறி நல்வாழ்வு பெறவும், நோயாளிகள் குணம் பெறவும் செபிப்பேன்



11 பங்குனி
ஞாயிறு

ஏற்றத் தாழ்வு பாராது மற்றவர்களிடம் பழகுவேன்



12 பங்குனி
திங்கள்

கெட்ட பழக்க வழக்கங்களிலிருந்து மீள முயற்சிப்பேன்



13 பங்குனி
செவ்வாய்

ஆலய வளர்ச்சிப் பணிகளில் மனமுவர்ந்து ஈடுபடுவேன்




14 பங்குனி
புதன்

மூடப் பழக்க வழக்கங்களுக்கு இடம் கொடுக்க மாட்டேன்



15 பங்குனி
வியாழன்

குடும்பத்தில் மரித்த மற்றும் உத்தரிக்கிற ஆன்மாக்களுக்காக தினமும் செபிப்பேன்



16 பங்குனி
வெள்ளி

திருச்சபை பற்றிக் குறைகூறித் திரிவோருக்கு செவி கொடுக்க மாட்டேன்



17 பங்குனி
சனி

பிறருக்கு எள்ளளவும் தீங்கு எண்ண மாட்டேன்



18 பங்குனி
ஞாயிறு

தான்தோன்றித்தனமாக இல்லாமல் குடும்ப நன்மைக்காகப் பாடுபடுவேன்



19 பங்குனி
திங்கள்

எனக்கு உதவுகிறவ-ர்களுக்கு என்றும் நன்றியோடு நடப்பேன்



20 பங்குனி
செவ்வாய்

என் துன்பங்களை இறைவனிடம் ஒப்படைத்துவிட்டு பொறுமையோடு நடப்பேன்.



21 பங்குனி
புதன்

பிறரை பாராட்ட, அவரிடம் பரிவோடு பேசத் தயக்கம் காட்ட மாட்டேன்




22 பங்குனி
வியாழன்

பிறர் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்க மாட்டேன்



23 பங்குனி
வெள்ளி

மனவுறுதியோடு சோதனைகளை வெல்ல முயற்சிப்பேன்



24 பங்குனி
சனி

பிடிக்காதவர் என எவரையும் ஒதுக்க மாட்டேன்



25 பங்குனி
ஞாயிறு

ஆண்டவரை விட்டு விலகாத வாழ்வு வாழ்வேன்

## புனித தேவ அருளப்பர்

**1495-1550**

போர்த்துக்கல் நாட்டில் பிறந்த இவர் ஸ்பெயின் நாட்டுக்கு ஓடிப்போய் ஒரு பணக்காரரிடம் வேலைக்கு சேர்ந்து ஆடு மாடுகளை மேய்த்து வந்தார். முத்திப்பேறு பெற்ற அவிலா, அருளப்பரது பிரசங்கங்களும் வாழ்வும் இவரது மனதில் பதிந்து இவர் தம் மனதை மாற்றச் செய்தன. தம் உடமைகளையெல்லாம் விற்று நோயாளிகளுக்குக் கொடுத்தார். அவர்களுக்கு சேவை செய்ய தம் வாழ்வை அர்ப்பணித்தார். ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தி அங்கு நோயாளிகளை ஏற்று நோயாளிகளிடம் இயேசுவைக் கண்டார். இவர் பீடத்தின் முன் முழந்தாளிட்டிருக்கையில் உயிர் விட்டார்.

## உரோமை நகர் புனித பிரான்செஸ்

**கி.பி 1440**

இவர் உரோமை நகரில் செல்வாக்கு நிறைந்த குடும்பத்தில் தோன்றியவர். இளநங்கையாயிருக்கும்போது துறவறத்தின் மீது மிகுந்த ஆர்வம் காட்டினார். இறைவனின் மீது வேட்கை கொண்ட இப்புனிதவதி அவர் பெயரால் ஏழை எளியோருக்குப் பணிவிடை புரிவதில் தம் நாட்களைச் செலவழித்தார். தம் வீட்டின் ஒரு பகுதியையே ஏழைகளுக்கு மருத்துவ விடுதியாக மாற்றினார். பல பெண்களை ஒன்றாய்க் கூட்டித் துறவற வார்த்தைப்பாடில்லாத ஒரு சபையை உருவாக்கினார். இவர்கள் மனப்பூர்வமாகத் தங்களையே இறைவனுக்குக் கையளித்தனர். இறைவன் பெயரால் ஏழைகளுக்குத் தொண்டு செய்தனர்.




# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ),
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்

### திருமண சேவைகள்



- திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உடம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.

பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

### வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்














| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |







| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |






## தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீபபய மாவத்தை
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்